Registered as a Newspaper
பக்கங்கள் 16+8 விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 42
ஞாயிற்றுக்கிழமை
07 ஜனவரி 2024
மார்கழி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"பரவாயில்லை, இப்பவாவது மற்ற மதத்தலைவர்மாருக்கும் ரோசம் வந்திருக்கு பாருங்கோ"

# பௌத்தமத ஆக்கிரமிப்பு: ஜனாதிபதி ரணில் மௌனம்

## அபிவிருத்திக்கு முன்னர் நல்லிணக்கமே அவசியம்
## இடித்துரைத்த சர்வமதத் தலைவர்கள்

யாழ்ப்பாணம், ஜனவரி 7

**வடக்கில் பௌத்தர்களே இல்லாத இடத்தில் புத்தர் சிலை வைப்பதும், விகாரைகள் அமைப்பதும் என பௌத்த மத ஆக்கிரமிப்பு இடம்பெறுகின்றது என சர்வமதத் தலைவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சுட்டிக்காட்டிய போதும் அவர் அதற்குப் பதிலளிப்பதைத் தவிர்த்துள்ளார்.**

15



## திடீரென வவுனியாவில் படைமுகாம்!

வவுனியா, ஜன. 7

வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக இயங்கிய தற்காலிக இராணுவ முகாம் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் நிரந்தர இராணுவ முகாமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து

15

## ரணில் நுழையும்போது எழுந்திராத மதத்தலைவர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 7

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மதத் தலைவர்களுடனான கலந்துரையாடலுக்காக மண்டபத்துக்குள் நுழையும்போது அனைத்து மதத் தலைவர்களும் அமர்ந்திருந்தனர்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலரின் அறையில் சர்வ மதத் தலைவர்களுடனான

15

## நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை இன்னமும் விரிவாக்கித் தரலாமாம்!!!

ஜனாதிபதி ரணில் மதத் தலைவர்களுடனான சந்திப்பின்போது தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பொறுப்பாளர்களும் ஏனையோரும் இணங்கினால் அந்த ஆலயத்தை இன்னமும் விரிவாக்கி - பெரிதாக்கித் தரமுடியும் என ஜனாதிபதி ரணில்

15



## விஜயகாந்துக்கு நேற்று சரவணபவன் அஞ்சலி

சென்னை, ஜன. 7

சென்னை, கோயம்பேட்டில் அமைந்துள்ள தே.மு.தி.க. தலைமை அலுவலகத்திலுள்ள விஜயகாந்த் நினைவிடத்தில் நேற்று மு.ப. 11 மணியளவில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன் மலர் வளையம்

15

## தமிழ்த் தேசியத் தரப்புகளை கோர்த்துவிட முயன்று மூக்குடைபட்ட டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜன. 7

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியத் தரப்புகளைக் கோர்த்துவிட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்த முயற்சி தோல்வியில்

15

## தென்னிந்தியத் திருச்சபைக்கு- அழைப்பில்லை!

யாழ்ப்பாணம், ஜன. 7

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சர்வமதத் தலைவர்களுக்கும் இடையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்புக்கு, தென்னிந்தியத் திருச்சபைக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

15

## மயிலிட்டி கலைமகள் பாடசாலைக் காணி விரைவில் விடுவிப்பு

விரிவு:- பக்.15

## வடக்குக்கு கைத்தொழில் வலயம் ஜனாதிபதி சாதகமான நிலைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 7

வடமாகாணத்துக்கு கைத்தொழில் வலயமொன்றை வழங்குமாறு கைத்தொழிற்துறையினர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்ததற்கு அமைவாக, அதற்குத் தேவையான காணியை இனங்காணுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை

15

## பொலிஸார் அராஜகம்: நாளை போராட்டம்

முல்லைத்தீவு, ஜன. 7

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவியை பொலிஸார் கைது செய்தமையைக் கண்டித்தும் பொலிஸாரின் அடாவடியைக் கண்டித்தும் முல்லைத்தீவு மாவட்டச் செயலத்துக்கு முன்பாக நாளை கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக முல்லைத்

15

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகப் போக்குவரத்துக்காக விரைவில் படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 7
தீவகப் போக்குவரத்துக்காக விரைவில் மாற்றுப் படகுச்சேவையொன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் பணிப்புரை விடுத்தார். கடந்த 4ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம-125)

## துப்பாக்கி, தோட்டா பாடசாலையில் மீட்பு

கொழும்பு, ஜன. 7
வத்தளைப் பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றின் விளையாட்டு அறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அந்த அறையில் ரி-56 துப்பாக்கி, 125 தோட்டாக்கள், 4 மகசின்கள், 18 9எம்எம் தோட்டாக்கள் மற்றும் பல கைத்தொலைபேசிகள் என்பன மீட்கப்பட்டன. சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# யாழ்.மாவட்டத்தில் சின்னமுத்து தடுப்பூசி

## நேற்றுமுதல் ஆரம்பம்



**யாழ்ப்பாணம், ஜன. 7**
**இலங்கையில் சின்னமுத்து நோய்ப் பரவல் அதிகரித்துள்ள நிலையில், நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் மருந்தேற்றல் விசேட நிகழ்ச்சித்திட்டம் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் நேற்று ஆரம்பமானது.**

யாழ். மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டத்துக்காக ஆயிரத்து 850 குழந்தைகள் இனங்காணப்பட்டுள்ளன.
அவர்களில் ஆயிரத்தி 733 குழந்தைகளுக்கு நேற்றைய தினம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
காய்ச்சல் மற்றும் சளியி ருந்த குழந்தைகளுக்கு நேற்றையதினம் தடுப்பூசி வழங்கப்படவில்லை.
இவர்களுக்கு அடுத்தவாரம் தடுப்பூசி வழங்கப்படும் என மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் குறிப்பிட்டார். (ம-26-100-125)




## காங்கேசன்துறையில் 'யுக்திய' சோதனை

யாழ்ப்பாணம், ஜன. 7
'யுக்திய' விசேட செயற்றிட்டம் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தி யத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன கமகே தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை தொடக்கம் இரவு வரை முன்னெடுக்கப்பட்டது.
அதில் சோதனைக்குட்படுத்தப்பட்ட வாகனங்களுக்கு 'யுக்திய 2024' சின்னம் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கரும் பொலிஸாரால் ஒட்டப்பட்டது. (ச-125)

## மோட்டர் திருட்டு

கொடிகாமம், ஜன. 7
கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தில் பொருத்தப்பட்டிருந்த ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நீரிறைக்கும் மோட்டர் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.
கடந்த நான்காம் திகதி விசேட வகுப்புக்காக வந்த மாணவர்கள் தண்ணீர் தேவைக்காக மின்மோட்டரை இயக்கச் சென்றபோது, மோட்டர் திருடப்பட்டிருந்தது தெரியவந்தது. இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ம-159)

## கிளிநொச்சியில் வாக்காளர் பதிவு

யாழ்ப்பாணம், ஜன.7
நாட்டின் சகல பிரதேசங்களிலும் வாக்காளர் விண்ணப்பப் படிவங்கள் பூர்த்தி செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அனைத்து கிராமஅலுவலர் பிரிவுகளிலும் வாக்காளர் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.
புதிதாக 18 வயதைப் பூர்த்தி செய்தவர்களும் வாக்காளர்களாக இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். கிராம அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று இந்தப் பதிவுகளை முன்னெடுத்துள்ளனர். (ச-113)

## தேராவில்குளம் நிரம்பியதால் வெள்ளத்தில் சூழவுள்ள மக்கள்

முல்லைத்தீவு, ஜன.7
புதுக்குடியிருப்பு, தேராவில் குளம் நிரம்பியுள்ளதால் குளத்தைச் சூழவுள்ள மக்கள் குடியிருப்புகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. அதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.
தேராவில் முதன்மை வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. கிராமத்துக்குச் செல்லும் சிறு வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அதனால் மக்கள் தங்கள் அன்றாட வாழ்வினை கொண்டுசெல்லமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டபோதும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஏ-19)

## முல்லை. கொக்காவிலில் கொட்டப்படும் கழிவுகள்!

வன்னேரிக்குளம், ஜன. 7
முல்லைத்தீவு - கொக்காவில் பகுதியில் விஷமிகள் பலர் கழிவுகளை வீசிச் செல்கின்றனர் என்றும், இதனால் ஏற்படக்கூடிய சுகாதாரப் நெருக்கடிகளில் இருந்து சிறுவர்கள், முதியவர்களைப் பாதுகாக்குமாறும் அந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
திருமுறிகண்டி, கிளிநொச்சி பக்கமாக இருந்து களவாகக் கொண்டுவரப்படும் கழிவுகளே இவ்வாறு கொட்டப்படுகின்றன என்றும், இந்தக் கழிவுகள் ஆற்றுப்படுக்கைகள் ஊடாகக் குளங்களைச் சென்றடையக்கூடிய வாய்ப்புகள் உள்ளமையால் இதனால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேட்டைத் தடுத்துநிறுத்த அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பொதுமக்கள் மேலும் வலியுறுத்தியுள்ளனர். (ம-13)



## 45 லீற்றர் கசிப்பு மீட்பு

முல்லைத்தீவு, ஜன. 7
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு திம்பிலி பகுதியில் பற்றைக்காட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் 45 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.
திம்பிலி பகுதியில் சட்டவிரோத கசிப்பு வியாபாரம் இடம்பெறுகிறது எனக் கிடைத்த தகவலுக்கமைய அவை மீட்கப்பட்டன. சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-19)

## அடிப்படை வசதியற்றுள்ள கண்ணகைபுரம் கிராமம்!

கிளிநொச்சி, ஜன. 7
கிளிநொச்சி, கரைச்சி கண்ணகைபுரம் கிராமம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் காணப்படுகின்றது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.
இந்தக் கிராமத்துக்கு பேருந்துச் சேவைகள் நடத்தப்படாமையால் ஸ்கந்தபுரம், கிளிநொச்சி சந்தைகளுக்கு உற்பத்திப் பொருள்களை எடுத்துச் செல்வதில் கிராம விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.
அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு மாணவர்கள் வருவதிலும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.
சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ரி-13)

## நல்லூர்ப் பிரதேசசபையால் சுற்றுச்சூழல் கண்காணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7
கழிவுகள், குப்பைகள் கொட்டுவோரை இனங்காண்பதற்காக நல்லூர்ப் பிரதேசசபையால் பிரத்தியேக சுற்றுச்சூழல் கண்காணிப்புப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
கோண்டாவில் மேற்கு புகையிரத நிலைய வீதிகளில் வீட்டுக் கழிவுகள் உள்ளிட்ட குப்பைகள் இரவோடிரவாகக் கொட்டப்படுகின்றன. இந்தநிலையிலேயே கழிவுகளைக் கொட்டுவோரைக் கண்டறிந்து அவர்களுக்கெதிரான நடவடிக்கை எடுக்கும் நோக்குடன் இந்தச் சுற்றுச் சூழல் கண்காணிப்புப் பிரிவு செயற்படவுள்ளது.
24 மணிநேரமும் நல்லூர்ப் பிரதேசசபை ஊழியர்கள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவர் என்றும் நல்லூர்ப் பிரதேசசபை தெரிவித்துள்ளது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனப்பிரச்சினைத் தீர்வே நாட்டின் மீட்சிக்கு வழி!

## முன்னாள் சபாநாயகர் வலியுறுத்து

கொழும்பு, ஜன.7

**தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டால் மாத்திரமே இலங்கையால் ஒரு நாடாக முன்னோக்கிச் செல்லமுடியும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.**

நாட்டிலுள்ள பிரச்சினைகளில், தமிழ் மற்றும் சிங்கள இனங்களுக்கிடையில் நம்பிக்கை இன்மை என்பது பிரதான பிரச்சினையாகும். அதைத் தீர்க்கும்வரை ஒரு நாடாக எம்மால் முன்நோக்கிச் செல்ல முடியாது.

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் மட்டும் தீர்வு காண முடியாது. அவ்வாறு செய்ய முற்பட்டால் பல அழுத்தங்கள் வரலாம்.

நல்லாட்சிக் காலத்திலும் புதிய அரசமைப்பை இயற்ற முயற்சி எடுக்கப்பட்டது. எனினும், குறுகிய அரசியல் நோக்கம், இனவாதக் கருத்துகளால் அந்த முயற்சியும் கைகூடவில்லை. நாட்டை புது யுகம் நோக்கி அழைத்துச்செல்ல அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-44)

# பொருளாதாரச் சிக்கலை தீர்ப்பவரே வேட்பாளர்!

## கூறுகின்றது பெரமுன



கொழும்பு, ஜன.7

பொருளாதாரப் போரை முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய பொருத்தமான வேட்பாளரையே ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி களமிறக்கும் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பட்டியலில் சிலரின் பெயர்கள் உள்ளன. அவர்களில் பொருளாதாரப் போரை வெற்றிகொள்ளக் கூடிய வெற்றி வேட்பாளரையே களமிறக்குவோம். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியும் பெறுவோம் என்று அவர் குறிப்பிட்டார். (எ-44)

# கட்சி தாவல்

கொழும்பு, ஜன.7

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் முன்னாள் அமைச்சரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தருமான தயாஷிரித்த திசேரா ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார். அவருக்கு, புத்தளம் நாத்தாண்டி தேர்தல் தொகுதி அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இவர் இலங்கையில் பிரபலமான அரசியல்வாதியாக திகழ்ந்த ப்ரோட்டஸ் திசேராவின் மகனாவார். (எ-44)

# ஐ.ம.சக்தி தலைமையில் இனவாதமற்ற கூட்டணி

## கூறுகின்றார் ரஞ்சித்

கொழும்பு, ஜன.7

இனவாதமற்ற கூட்டணியாகவே ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி மலரும். எந்தவொரு தரப்புடனும் இரகசிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

தூய்மையான அரசியல்வாதிகளே எம்முடன் இணைந்துவருகின்றனர். எதிர்காலத்திலும் மேலும் சிலர் இணையவுள்ளனர். பலமான பரந்தப்பட்ட கூட்டணியை விரைவில் அமைத்து தேர்தலை எதிர்கொள்வோம் - என்றார். (எ-44)

# ராஜபக்சக்களை குடும்பமாக நாடு கடத்துவாராம் மேர்வின்

கொழும்பு, ஜன.7

ராஜபக்சக்களை குடும்பத்தோடு - கூண்டோடு கப்பலில் ஏற்றி நாடு கடத்துவோம் என்று சூளுரைத்துள்ளார் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா.

ராஜபக்சக்கள் அனைவரையும் நாட்டைவிட்டு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்போம். ஊழல், மோசடி, கப்பம் பெறுதல் போன்ற நடவடிக்கையில் ஈடுபட்ட அனைவரையும் கப்பலில் ஏற்றி அனுப்புவோம். ஒருவராகவந்துதான் ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதியானார். ஆனால் நான் தொழிற் சங்கத் தலைவராகச் செயற்பட்டுள்ளேன். சிறந்தவர்கள் எம்முடன் உள்ளனர். சண்டைக் கோழிக்கு எந்தக் களமாக இருந்தாலும் தயார்தான். எந்தத் தேர்தல் வந்தாலும் அதனை எதிர்கொள்ள நாம் தயார் என்று அவர் கூறியுள்ளார். (எ-44)



# ஜே.வி.பி.யை தாக்கும் ஐ. ம. சக்தி!

கொழும்பு, ஜன.7

தங்களுக்குப் பயங்கரவாத வரலாறு இருப்பதாலேயே ஜே.வி.பி. கட்சியானது புதிய தொரு பெயரில் வந்துள்ளது. பெயர் மாறினாலும் ஜே.வி.பி.யினரின் கொள்கை இன்னும் மாறவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

நாட்டில் பொருளாதாரத்துக்கு பேரழிவை ஏற்படுத்தியவர்கள் தான் ஜே.வி.பி.யினர், எத்தனை தொழிற்சாலைகளை எரித்திருப்பார்கள்? எத்தனை ட்ரான்ஸ்போமர்களை கொளுத்தி இருப்பார்கள்? எத்தனை பஸ்களை எரித்திருப்பார்கள்? வெளிநாட்டு வருமானத்தைத் தடுத்தனர்.

இன்று தமது பெயரை மாற்றிக்கொண்டு தேசிய மக்கள் சக்தியினர் என வெளியில் முகம்காட்டுகின்றனர். பெயரை மாற்றியதன் நோக்கம் என்ன? அடுத்த தேர்தலில் எமது கூட்டணியே வெற்றிபெறும். அதனால்தான் எம்மீது ஜே.வி.பி.யினர் விமர்சனங்களை முன்வைத்துவருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (எ-44)

# செல்வந்தர்களை காக்கும் அரசாங்கம்

கொழும்பு, ஜன.7

இந்த வரிச்சுமையால் சிறார்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அவர்களுக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்து,கவனிப்பு மற்றும் பாதுகாப்பை வழங்க முடியா துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் பிரகாரம் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில், சாமானிய மக்களின் நிதியங்கள் மற்றும் சேமிப்புகள் மீதே அதிக சுமை ஏற்றப்பட்டுள்ளது.

பெரும் செல்வந்தர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. இன்று நாட்டில் பெரும் செல்வந்தர்களைப் பாதுகாக்கும் அரசாங்கமே உள்ளதே தவிர சாதாரண மக்களைப் பாதுகாக்கும் அரசாங்கம் ஆட்சியில் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# அரசியல்வாதிகளின் மீது மலம் வீசித் தாக்குங்கள்!

## மேர்வின் சில்வா 'வழிநடத்தல்'

மக்கள் விரோத அரசியலை முன்னெடுத்துவிட்டு வாக்குக்கேட்டு வரும் அரசியல்வாதிகள்மீது 'மலம்' வீச்சுத் தாக்குதல் நடத்துமாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு எதிரான சட்டமூலங்களை ஆதரித்துவிட்டு, தாங்கள் மக்கள் பக்கமே நிற்பதாகக்கூறி தேர்தல் காலங்களில் கிராமப்பகுதிகளுக்குச் செல்லும் அரசியல்வாதிகளை மக்கள் எவ்வாறு கவனிக்கவேண்டும் என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேர்வின் சில்வா இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தயவு செய்து அவர்களைத் தாக்க வேண்டாம். தண்டனையும் வழங்க வேண்டாம் என மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். தேவையெனில் மலத்தை எடுத்து அவர்களின் தலையில் ஊற்றுங்கள். நாறியபடி வீடு செல்லட்டும். அவ்வாறு இல்லையேல் வரும்போது வீடுகளை மூடவும். உள்ளேவரத் தடை என எழுதி வைக்கவும். இதேவேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடப்போவதில்லை. ஆனால் எமது அணி சார்பில் வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவோம்' - என்றார். (ம-44)

# தலைமைப் பதவியை ஏற்க தயாசிறி தயார்!

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப்பதவி வழங்கப்படுமானால் அதனை ஏற்பதற்குத் தயார் என்று அக்கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட முன்னாள் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

தலைமைப்பதவி தொடர்பில் எழுந்த அச்சத்தால்தான் என்னைக் கட்சியில் இருந்து இடைநிறுத்தியுள்ளனர்.

ஆனால் நான் கட்சியைவிட்டுச் செல்லவில்லை. சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் எனக்கு வேட்புமனு வழங்காவிட்டால் அடுத்த தேர்தலில் போட்டியிட புதிய கட்சியொன்றை உருவாக்க வேண்டிவரும். இதற்காக எனக்கு ஒத்துழைக்கும் கட்சிகளும் நிச்சயம் இருக்கும். கட்சித் தலைமைப் பதவி வழங்கப்படுமானால் அதனை நிச்சயம் ஏற்பேன், கட்சியை வெற்றிப்பாதை நோக்கியும் கொண்டு செல்வேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ரி-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
23
09
1923



ஆண்டவன் அடியில்
23
12
2022

### திருமதி புவிராஜரட்ணம் சரஸ்வதி

**திதி - 11.01.2024**

பாரெல்லாம் புகழ் பரவ வாழ்ந்த எம் வம்ச புவி அரசியே!
அன்பினால் எமை செதுக்கி அறிவால் எமை வளர்த்த பேரன்னையே!
தள்ளாதபோதிலும் தடுமாறாமல் எமை சீராக வழி நடாத்திய பெருந்தகையே!
ஊரறிய பொறுமையின் பொக்கிசமாய் ஒளி பரப்பிய குல தெய்வமே!
செய் அறத்தால் காலனையே காக்க வைத்த தர்ம பத்தினித் தாயே!
சொர்க்கம் புகுந்து ஓராண்டாக அதனை ஆளும் சரஸ்வதியே நீர் வாழ்க!

தகவல் - குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு
06
01
1948



இறப்பு
06
01
2024

### சின்னத்துரை தனபாலசிங்கம்

**(ராசண்ணை - சுப்பையா கடை உரிமையாளர்)**

கோண்டாவில் கிழக்கு யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி சின்னக்கடை மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தனபாலசிங்கம் (ராசண்ணை சுப்பையா கடை உரிமையாளர்) 06.01.2024 அன்று காலமானார். அன்னாார் காலஞ் சென்ற சின்னத்துரை தங்கரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரித்தம்பி இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் கமலாதேவி அவர்களின் அன்புக்கணவரும் சஜேசன் (லண்டன்), சலோமிகா (துளசி ஸ்கந்தபுரம்) சுதர்சன் (பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை – யாழ்ப்பாணம்), சசிகரன் (காகில்ஸ் பூட் சிற்றி மன்னார்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சுதர்சினி (லண்டன்) திவாகரன் (பிரதேச செயலகம் கிளிநொச்சி) சிந்தூரி (ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், நர்த்தனா (லண்டன்) சனாயா (லண்டன்) துவாரகா (ஸ்கந்தபுரம்) சதுமிகா (ஸ்கந்தபுரம்) சானுசன் (ஸ்கந்தபுரம்) சக்சித் (சாவகச்சேரி) சாய்சித் (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, கனகலிங்கம், சந்திரவதனா, மகாலிங்கம் மற்றும் சகுந்தலா (கிளி) சாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி நடராஜா இந்திராணி மற்றும் செல்லம்மா, அன்னம்மா, வன்னியசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்

***அன்னாரின் ஈமக்கிரியைகள் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக மன்னார் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்***

தகவல்
குடும்பத்தினர்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

தரம் :6-11 வரையான
வகுப்புகளுக்கான சகல
பாடங்களும் பிரத்தியேக / குழு
வகுப்புக்களாக
ஆரம்பமாகின்றன.
**ஆரம்பம் : 16.01.2024**
தொடர்பு: **074 234 9120**

**வேலை ஆள் தேவை**

றூம் போய் தேவை. சிங்களம் கதைப்பவருக்கு முன்னுரிமை. சிறிய வீடு வாடகைக்கு உள்ளது. அறைகளும் உள்ளது.
தொடர்பு:
**0777 24 24 27, 0777 41 27 13**

## மரண அறிவித்தல்

பிறப்பு
29
07
1948



இறப்பு
06
01
2024

### சின்னரெத்தினம் மகாலிங்கம் (தங்கத்துரை)

**(உத்தரவுபெற்ற நில அளவையாளர்)**

காட்டுவளவு வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும், கொத்தாவத்தை காங்கேசன்துறையை நிரந்தர முகவரியாகவும் காளிகோவிலடி கே.கே. எஸ். வீதி, தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட சின்னரெத்தினம் மகாலிங்கம் (உத்தரவுபெற்ற நில அளவையாளர்) அவர்கள் நேற்று (06.01.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னரெத்தினம் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை செல்வரட்ணம் தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வி புனிதவதனாவின் பாசமிகு கணவரும், நீரிஜாவின் அன்புத் தந்தையும், பிரசாத்தின் அன்பு மாமனாரும், மோனிஷின் பாசமிகு அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது தெல்லிப்பழை இல்லத்தில் இடம் பெற்று தெல்லிப்பழை கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**மனைவி - செல்வி: 077 5750 894**
**மகள் - நிரா: 077 9373857**
**மருமகன் - பிரசாத் : 077 996 5893**

(CS 27600) A-1

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை பாலசிங்கம்

**(ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தர்)**

**தோற்றம்**
**09.07.1953**

**மறைவு**
**04.01.2024**



யாழ்ப்பாணம் மானிப்பாயை பிறப்பிடமாகவும் வவுனியா குட்செட் வீதி, தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பாலசிங்கம் (ஓய்வுபெற்ற இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்) கடந்த (04.01.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற அப்புக்குட்டி சின்னத்துரை சிவயோகமலர் தம்பதியரின் பாசமிகு மகனும், திருமதி பரிய ராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர் வ/தமிழ் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், கரோலின், சர்மலின், சஞ்சீவ், ரஜீவ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விதுசனின் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) மாமனாரும், ஆதுல்யன் அவர்களின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 559 1068**

(CS 25839) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதி மீது பாய்ந்து சந்தேகநபர் தாக்குதல்!

## அமெ.வில் ஆக்ரோசம்

வொஷிங்டன், ஜன. 7

வழக்கு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் நீதிபதியின் மேசைக்கு மேலால் பாய்ந்து நீதிபதியைக் தாக்க முற்பட்ட சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது. தாக்குதலாளி நீதிபதியின் ஆசனத்தை நோக்கிப் பாய்வதைக்கண்ட நீதிபதி ஆசனத்திலிருந்து எழுந்து ஓடிய போதும் அவரது தலையில் சிறுகாயம் ஏற்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவத்தில் நீதிபதியின் பின்னாலிருந்த அமெரிக்க தேசியக்கொடியும் சரிந்து வீழ்ந்துள்ளது. (ச-6)

# சந்தைக் கட்டடத்தில் வைத்து மீன்களை விற்பனை செய்க

## இல்லையேல் நடவடிக்கை

## பாஷையூர் வியாபாரிகளுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 7

**புதிதாகப் புனரமைக்கப்பட்ட பாஷையூர் சந்தைக் கட்டட மேடைகளில் வைத்தே மீன்வியாபாரம் இடம்பெறவேண்டும். இல்லையேல் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகரசபையால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இந்த மீன் விற்பனை சந்தைக் கட்டடம் பாவனையின்றி காணப்படுகிறது. வியர்பாரிகள் சந்தை வளாகத்திலுள்ள வெறும் தரைகளில் வைத்து கடலுணவுகளை விற்பனை செய்து வருகின்றமையால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது. எனவே மீன்வியாபாரிகள் இன்றுமுதல் கடலுணவுகளை சந்தைக் கட்டடத்தில் வைத்தே விற்பனை செய்ய வேண்டும். மீறிச் செயற்படும் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (ச-17)

# கட்டடமின்மையால் பெரும் சிரமம்

மன்னார், ஜன. 7

பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்கள் கைத்தொழில் பயிற்சிகளில் ஈடுபட கட்டடம் இல்லாமையால் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையால் வழங்கப்படும் பயிற்சிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பான விடயம் கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. தற்காலிகமாக இயங்குவதற்காக கைத்தொழில் அமைச்சுக்குச் சொந்தமான கட்டடத்தைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை கைத்தொழில் அமைச்சின் செயலரிடம் பெறுவதற்கான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்வதெனவும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவால் முன்னர் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக இம்முறை இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவில் பதிலளிக்கப்பட்டது. (ஒ-60)

# ஈழத்தமிழர்களின் குரலாக விளங்கியவர் விஜயகாந்த்

## சிறீதரன் எம்.பி. இரங்கல்

கிளிநொச்சி, ஜன. 7

ஈழத்தமிழர்களுக்கும், அவர்களது போராட்டத்துக்கும் உளமார வலுச்சேர்த்த ஒருவராக விஜயகாந்த் திகழ்ந்தவர் என்பதுடன் தமிழின விடுதலைப் போராட்டத்தையும், தமிழினத்தலைவர் பிரபாகரனையும் ஆழ நேசித்தவர்.

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி நகர வட்டாரக் கிளையினரது ஏற்பாட்டில் இடம்பெற்ற விஜயகாந்த் அஞ்சலி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்கள் போராட்டத்துக்கு வலுச்சேர்ப்பதற்காக தென்னிந்தியத் திரையுலகின் போக்கையே எமக்குச் சாதகமானதாக மடைமாற்ற முயன்று அதில் வெற்றியும் கண்டவராக விஜயகாந்த் திகழ்ந்தார். தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராக அவர் இருந்தபோது, தமிழின விடுதலைப்போரை ஆதரித்து அவர் நடத்திய உண்ணாவிரதப் போராட்டம், விடுதலைப் போராட்டத்துக்கான நிதி சேகரிப்பு என்பவையும் தமிழக வரலாற்றில் முன்னெப்போதும் நிகழ்ந்திராதவை - என்றார். (ச-125)



# கிளிநொச்சியில் விஜயகாந்துக்கு அஞ்சலி

கிளிநொச்சி, ஜன. 7

இந்தியத் திரைப்பட நடிகர் புரட்சிக்கலைஞர் கப்டன் விஜயகாந்துக்கு கிளிநொச்சியில் அண்மையில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி நகரவட்டாரத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் விஜயகாந்தின் திருவுருவப்படத்துக்கு ஈகச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் பங்கேற்றனர். (ச-113)

# தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டோர் நினைவு

யாழ்ப்பாணம், ஜன. 7

அனைத்துலக நான்காவது தமிழராய்ச்சி மாநாட்டின்போது கொல்லப்பட்ட தமிழ்மக்களின் 50 ஆவது நினைவுதினம் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை யாழ்.நகரில் கடைப்பிடிக்கப்படவுள்ளது. அதனை முன்னிட்டு யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயப் பகுதியைத் துப்புரவு செய்யும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

1974ஆம் ஆண்டு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் வைபவத்தின்போது வன்முறைக் கும்பலொன்றால் நடத்தப்பட்ட தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-17)





# கிளிநொச்சியில் வஜிர எம்.பி.

நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன கடந்த புதன்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு வருகை தந்து மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரனுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் கேட்டறிந்தார். (ச-13-113)

# டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

கருகம்பனை தமிழ்மன்றம் சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம், இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து நடத்திய மாபெரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை கடந்த புதன்கிழமை கீரிமலை கருகம்பனை சந்தியில் ஆரம்பமாகி ஜே/226 நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது. (ஒ-66)

# பேருந்துச் சேவையை நடத்துங்கள்

முல்லைத்தீவு, ஜன. 7

மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய கிராமங்களுக்கான பேருந்துச் சேவைகள் மீள்குடியேற்றத்தின் பின்னர் இடம்பெறாதது தொடர்பாக இக்கிராமங்களின் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ஒ-13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வார்த்தையால் வளராது பயிர்!

விவசாய நவீனப்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ், வடமாகாண விவசாய நிலங்களை முகாமை செய்வதன் வாயிலாக ஏற்றுமதி தொழில்துறை பலப்படுத்தப்படும் என்றவாறாகத் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

வடமாகாணத்துக்கு நான்கு நாள்கள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள ரணில், பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பல சுற்றுப் பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றார். இந்தச் சந்திப்புகளின் ஒரு பகுதியாக, முல்லைத்தீவு மன்னார் - வவுனியா மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வவுனியா கலாசாரநிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் ரணில்.

வடக்கிலிருந்து விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்யவேண்டும் என்ற ஜனாதிபதியின் எண்ணமும் - நோக்கமும் சிறந்தவைதான். ஆனால், அதற்குரிய பெருவிருப்பை நாட்டின் அரச இயந்திரம் ஆத்மார்த்தமாகக் கொண்டிருக்கின்றதா? என்ற கேள்விக்கான பதில்கள் இன்று தேடப்பட வேண்டியவையாக இருக்கின்றன. ஏனெனில், விவசாயத்துறையில் வடக்கையும் உள்ளீர்த்து தன்னிறைவைக் காண்பது என்ற திட்டம் இப்போது பேசுபொருளாகும் ஒன்றல்ல. மைத்திரி-ரணில் அரசாங்கத்தின் காலத்திலும் இதே சாரப்பட பல்வேறு அறிக்கைகள் வெளிவந்தன. ஆனால், எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டாகவில்லை.

மாறாக, விவசாயிகளுக்கு எவ்வளவுக்கெவ்வளவு நெருக்குவாரங்களைக் கொடுக்க முடியுமோ அதைத்தான் மாறிமாறி ஆட்சிக்குவரும் அரசாங்கங்கள் அண்மைக்காலமாகச் செய்து கொண்டிருக்கின்றன. உரப்பற்றாக்குறை, கிருமி கொல்லிகள் இல்லாமை, இமயமாக எகிறும் விலையேற்றங்கள், சரியான நேரத்தில் கிடைக்கப்பெறாத விதைகள், பற்றாக்குறையானதும் காலம் பிந்தியதுமான இழப்பீடுகள் என இந்தப் பட்டியல் நீண்டு செல்லும். ஆக, ஒரு நாட்டில் விவசாயத் தொழில்துறை எவ்வாறான நெருக்குவாரங்களைச் சந்திக்கக்கூடாதோ அதற்கு இலக்கணமாகத்தான் இலங்கை கடந்த பல வருடங்களாகவே பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஆதலால், பொத்தாம் பொதுவாக அறிக்கைகளை வழங்கி நம்பிக்கைகளை விதைத்து பின்னர் கைகழுவிவிடும் கைங்கரியத்தை ரணில் அரசு முதலில் கைவிட வேண்டும். விவசாயிகளை, அவர்களின் உற்ற நண்பனான இயற்கைகூட போதும்போதும் என்கின்ற அளவுக்கு இப்போது ஏமாற்றிக் கொண்டிருக்கையில் - தன் பங்குக்கு ஒரு கபட நாடகத்தை அரங்கேற்றுவது ரணிலுக்கு கொஞ்சமும் அழகல்ல. மாறாக அவர் உண்மையில் வடக்கை மையப்படுத்திய விவசாய அபிவிருத்திக்குப் பெருவிருப்பம் கொண்டிருக்கின்றார் என்றால், அந்த விருப்பத்தை தன் நகர்வுகள் மூலமாகவும் ஒதுக்கீடுகள் மூலமாகவும் நிரூபிக்க வேண்டும். அவ்வாறு செயற்படும் பட்சத்தில் ரணிலை ஆதரிப்பது மட்டுமல்ல கொண்டாடுவதிலும் விவ சாயத்துறை தயங்கப்போவதில்லை.

வடக்கின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், தங்களின் சுய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்குமான திட்டங்களைத்தான் ஜனாதிபதி என்ற வகையில் ரணிலிடம் விவசாயிகள் எதிர்பார்க்கின்றார்களே அன்றி மாறாக 'வடக்கு விவசாயிகள் திறமையானவர்கள்' என்பதான நற்சான்றுப்பத்திரங்களையல்ல. ஏனெனில், வாய் வார்த்தைகளால் வளராது பயிர்!




# 50 இலட்சம் பேர் வறுமைக்குள்!

கொழும்பு, ஜன.7

**நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியுடன் வரிச்சுமை மக்கள் மீது சுமத்தப்பட்டதால் கடும் வறுமை நிலைக்கு ஆளாகியுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை 50 இலட்சத்தைத் தாண்டியுள்ளது என்று குடிசன மற்றும் புள்ளிவிவரத் திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருந்த இந்த வறிய மக்கள், முழுச் சனத்தொகையில் 25 இலட்சமாகக் காணப்பட்ட நிலையில், தற்போது வறிய மக்கள் பிரிவுக்கு புதிதாக 30 இலட்சம் பேர் இணைக்கப்பட்டுள்ளனர்.

ஜனசவி, சமுர்தி மற்றும் அஸ்வெசும போன்ற வறுமை நிவாரணம் வழங்கப்படவேண்டியவர்களின் சதவீதம் நூற்றுக்கு 11.9இல் இருந்து நூற்றுக்கு 25 என்ற அளவுக்கு அதிகரித்திருக்கிறது.

இந்த வருடத்தில் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து அதிகரிக்கப்பட்ட வற்வரி வீதம் நூற்றுக்கு 18வரை அதிகரிப்பதற்கு முன்னர் இலங்கையில் மொத்த மக்கள் தொகையில் நூற்றுக்கு 27.9 வீதமானவர்கள் 2024ஆம் ஆண்டாகும்போது வறுமை நிலைக்கு ஆளாவர் என்பது உலக வங்கியின் கணிப்பாக இருந்தது. தற்போது வரி அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-இ)



# எக்ஸ்ரேக்கு தட்டுப்பாடு

கொழும்பு, ஜன. 7

அரசு மருத்துவமனைகளில் கதிர்வீச்சுப் பணிக்கு பயன்படுத்தப்படும் 'எக்ஸ்ரே பிலிம்' களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் நோயாளிகள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்று அரசகதிரியக்கத் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனை நிவர்த்தி செய்துதருமாறு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்தச் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார். (ச-இ)

# கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன.7

வடமராட்சி, கட்டைக்காட்டில் நேற்று 55 கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-125)

# வெளிநாட்டுப் பணியாளர்கள் அனுப்பும் பணம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.7

வெளிநாட்டுப் பணியாளர்களால் இலங்கைக்கு அனுப்பப்படும் பணம் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் வெளிநாட்டுப் பணியாளர்களால் 567.7 மில்லியன் டொலர் அனுப்பப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதேவேளை, 2021ஆம் ஆண்டு இவ்வாறு 5.5 பில்லியன் டொலர் அனுப்பப்பட்டிருந்தது. (எ-இ)

# கட்டுநாயக்கவில் முக அமைப்பு கண்காணிப்பு

கொழும்பு, ஜன.7

கட்டுநாயக்க விமான நிலையத்தின் நுழைவுப் பகுதியில் தன்னியக்க முக அடையாளக் கண்காணிப்பு அமைப்பு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

குற்றவியல் அல்லது சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியவர்களை அடையாளம் காணும் நோக்கில் இந்தக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## நாளை

08.01.2024

**திங்கட்கிழமை**

**மார்கழி 23**

சுபநேரம் : 12.32 - 02.02

ராகுகாலம் : 08.02 - 09.32

## நாளொரு நல்வார்த்தை

**தவறுகளை ஒப்புக்கொள்ளத் தைரியம் இருந்தால், அவை எப்பொழுதும் மன்னிக்கக் கூடியவையே.**

– புரூஸ் லீ –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரப் பரிசோதகர்கள் இடமாற்றம் விரைவில்

**யாழ்ப்பாணம், ஜன. 7**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் இடமாற்றம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் ம.ஜெகூ தெரிவித்தார்.**

யாழ். மாவட்டத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் இடமாற்றம் இந்த ஆண்டு ஆரம்பத்தில் முன்னெடுப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இது தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதேவேளை, யாழ். மாவட்டத்தில் டெங்குத் தொற்று அதிகரித்திருப்பதன் காரணமாகவே பொதுச் சுகாதார பரிசோதகர்களின் இடமாற்றம் நடைமுறைப்படுத்துவது சில நாள்கள் ஒத்திவைக்கப்பட்டதாக சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-125)

## சுவீகரிப்பை மீளப்பெறும் அறிவித்தலை வெளியிடுக

### ரணில் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

பொலிஸ் திணைக்களத்துக்காக சுவீகரிக்கப்பட்ட சுமார் 4 ஏக்கர் காணி மீள உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், சுவீகரிப்பை மீளப் பெற்றமைக்கான வர்த்தமானியை வெளியிடுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில், மாதகலில் பொலிஸாருக்கு 4 ஏக்கர் தனியார் காணி சுவீகரிக்கப்பட்டது. பின்னர் அது அதிரடிப்படையினருக்கு வழங்கப்பட்டது. காணி உரிமையாளரால் காணியை விடுவிக்குமாறு தொடர்ச்சியாகக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தது.

தற்போது காணி விடுவிக்கப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் காணி சுவீகரிப்பு வர்த்தமானியை மீளப்பெறுவதற்கான வர்த்தமானியை வெளியிடுமாறு ஜனாதிபதி ரணில் பணித்துள்ளார். (ஒ-125)



## திருப்பாவை உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 7

வடமராட்சி துன்னாலை வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் 20 ஆவது நாள் திருப்பாவை ஆண்டாள் விரத உற்சவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கடந்த மாதம் 16ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டாள் திருப்பாவை உற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உற்சவம் நிறைவடையும். (ரி-27)

## சம்பளக் குறைப்புக்கு எதிராக பல்கலை பணியாளர் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழ பணியாளர்கள் சிலர் சம்பளக் குறைப்புக்கு எதிராக பல்கலைக்கழக நுழைவாயிலில் நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தினர். 'கடந்த காலங்களில் நாள் கொடுப்பனவு ஆயிரத்து 100 ரூபாவாக வழங்கப்பட்டது. இந்த ஆண்டு பணிகளைப் பொறுப்பெடுத்த நிறுவனம் எமது கொடுப்பனவை ஆயிரம் ரூபாவாக குறைத்துள்ளது.

இந்தக்கொடுப்பனவுஎமக்குப்போதாது. ஊழியர் சேமலாப நிதியத்துக்காக எமது சம்பளத்திலிருந்து கழிப்பதாக கூறுகின்றார்கள். அந்தப் பணத்தை எடுக்கும் வரையில் நாங்கள் உயிருடன் இருப்போமோ தெரியாது. எமக்கு நாள் கூலியாக ஆயிரத்து 200 வழங்கவேண்டும். நாம் சுமார் 125பேர் வரையில் பணிபுரிகின்றோம். எம்மை நீக்கிவிட்டு புதிய பணியாளர்களைக் கொண்டு வருவதை ஏற்கமாட்டோம்' என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

'முன்னை நிறுவனம் ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தவில்லை. நாம் தொழில் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அதைச் செய்கின்றோம். பல்கலைகக்கழகத்தை சுத்தமாக வைத்திருக்கவேண்டும். எனவே போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் விலகிச் சென்றால் நாம் வேறு பணியாளர்கள் அதை முன்னெடுப்போம்' என்று ஒப்பந்தத்தை புதிதாகப் பொறுப்பேற்றுள்ள நிறுவனத்தின் சார்பில் கருத்துத் தெரிவித்தனர். (ஒ-125)

## உதவிக் கோருவோரால் பயணங்களில் உபத்திரவம்

யாழ்ப்பாணம், ஜன. 7

பேருந்துகளில் ஏறி உதவி கோருவோரால் பயணிகள் உபத்திரவங்களைச் சந்திக்க நேர்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடும்ப வறுமை, மருத்துவ உதவி என்று பல வகையான உதவிகளைக் கேட்டு தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களும், இங்குள்ள சிலரும் பேருந்துகளில் ஏறுகின்றனர். ஒவ்வொரு பிரதான பேருந்து தரிப்பிடங்களிலும் மாறி மாறி ஏறும் இவர்கள் பயணிகள் பணம்கொடுக்கும் வரை தொடர்ச்சியாக நச்சரிப்பதாகவும் கூறப்படுகின்றது.

பேருந்துப் பயணக் கட்டணத்தை விட இவர்களுக்கு பணம் கொடுப்பதற்கே அதகளவு செலவாகுவதாக பயணிகள் குறைபட்டுக் கொள்கின்றனர். (ஒ-9)

## அறக்கொடை விழா

யாழ்ப்பாணம், ஜன. 7

தெல்லிப்பழை ஸ்துர்க்காதேவி ஆலயத்தின் பெருந்தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் 99 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தலைமையில் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் பா.பாலகோபி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவ கலாநிதி ஏ.தேவநேசன், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ப.கணேஷ் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி-66)

## விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜன. 7

சங்கானை பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவினரால் சிறுவர் விழிப்புணர்வு நிகழ்வு ஜே169 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட தொல்புரம் மேற்கு சிவயோகர் சிறுவர் கழக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வு பாடசாலை விடுமுறைக் காலப்பகுதியில் சிறுவர்கள் தமது நேரத்தை ஆரோக்கியமாகச் செலவிடுவதற்கு வழிகாட்டும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதில் இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான விழிப்புணர்வு களும் முன்னெடுக்கப்பட்டன. (ரி-66)



## கடற்கரையோரப் பகுதிகளில் சிரமதானம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தால் மாதகல் கிழக்கு, மாதகல் மேற்கு, சம்பில்துறை கடற்கரையோரப் பகுதிகளைச் சுத்தப்படுத்தும் செயற்பாடு நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ரி-66)

## கொட்டடியில் அதிகளவு டெங்கு நோயாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ்நகர் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட கொட்டடி கிராமத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

யாழ்.நகர் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையில் கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து கொட்டடி பகுதியில் வீடு வீடாக விசேட டெங்கு தரிசிப்புகள் நேற்று வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டன. இதன்போது 80க்கும் மேற்பட்ட வீடுகள் தரிசிப்பு செய்யப்பட்டது. டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாக வளவினை வைத்திருந்த 12 பேருக்கு சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்பட்டது. (ரி-20)

## கலாநிதி சிறிகணேசனுக்கு சார்க் இலக்கிய விருது



யாழ்ப்பாணம், ஜன. 7

எழுத்தாளரும் விமர்சகருமாகிய கலாநிதி கந்தையா சிறிகணேசன் 2023 ஆம் ஆண்டுக்கான சார்க் இலக்கிய விருதை பெற்றுக்கொண்டார். கடந்த மாதம் புதுடில்லியில் நடைபெற்ற சார்க் இலக்கிய விழாவில் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது. இவர் ஏற்கனவே இலங்கை அரச சாகித்திய, மாகாண கொடகே இலக்கிய விருதுகளைப் பெற்றவராவர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருட குத்தகைக்கு வழங்கல் லக்சுமி மணிமண்டபம்

- திருமண விழாக்கள்
- பிறந்தநாள் கொண்டாட்டங்கள்
- பூப்புனித நீராட்டுவிழாக்கள்
- நிறுவன ஒன்று கூடல்

என்பன சிறப்பாக நடத்தக்கூடிய இடம் வருடகுத்தகைக்கு வழங்கப்படும்

விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு, (கோப்பாய் தெற்கு, கோப்பாய்)

தொடர்பு: 077 536 0763,076 051 4226

(cs.53414) (N.1)


## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 07 . 1937



மறைவு 04 . 01 . 2024

### புவனேஸ்வரி பரராஜசிங்கம்

யாழ். கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வாழ்விடமாகவும், கனடா Scarborough ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி பரராஜசிங்கம் அவர்கள் கடந்த (04.01.2024) வியாழக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (கிளாக்கர்) நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரராஜசிங்கம் (ஓய்வுபெற்ற Railway Head Guard) அவர்களின் அன்பு மனைவியும், ராஜேஸ்வரி (ஞானம் - கனடா), வரதராஜா (வரதன் - பிரான்ஸ்) அகியோரின் அன்புச் சகோதரியும், யசோதரன் (ராசன் - பிரான்ஸ்), யசோதா (பவா - கனடா), யசோக்குமார் (குமார் - பிரான்ஸ்), வசந்தகுமார் (வசந்தன் - டென்மார்க்), சுரேஸ்குமார் (சுரேஸ் - ஜேர்மனி), ரமேஸ்குமார் (ரமேஸ் - பிரான்ஸ்), கணேஸ்குமார் (கணேஸ் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மாலா, காலஞ்சென்ற கங்காதரன், கிரிஜா, சுதா, சந்திரா, விஜி, ரஞ்சனி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கனகராஜா மற்றும் சந்திரசேகரம் (அவுஸ்ரேலியா), காலஞ் சென்றவர்களான கோபாலசிங்கம், விஜயானந்தன் மற்றும் கௌரிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், யசிந்தா - சஞ்சீவ், நிரோஷ், அஜித் -மோனிக், சுபன், வனிதா - ஜொகான், சிவேத், நிவேதா - அன்சன், கீர்த்திகா, திவ்யா - சரத்ஹானத், ராகுல், சஞ்சா, சஜீவன், நிசாந்த், நிலா, சபீனா, யசிக்கா, பரிதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டேமியன், ஷனல், சிலியாஸ், லானா, சாஞ்ஜே, ரறோசெய்ன், எர்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (09.01.2024) செவ்வாய்க் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

தொடர்பு:

கணேஸ் - மகன்
Mobile : +141 638 89478

பவா - மகள்
Mobile : +141 626 25121
Phone : +141 675 44715

சுபன் - பேரன்
Mobile : +164 798 25121

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் : 29.12.1996 மறைவு : 09.12.2023

கடந்த (09.12.2023) சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்பு மகள்

### அமரர் ஆனந்தராசா சிவமுகுந்தினி

(கணக்காளர் - Deco Needs (Pvt) Ltd UK Accounting Service Ltd)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (08.01.2024) திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, மதியபோசனம் பகல் 12.00 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிச் சடங்கில் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இராசவீதி, திருநெல்வேலி.
தொ.பே:076 8046 159

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 12 . 1937



மறைவு 06 . 01 . 2024

### கணேஸ்வரி சுந்தரலிங்கம்

புங்குடு, புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும், 3 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம், புங்குடு புலோலி தெற்கு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கணேஸ்வரி சுந்தரலிங்கம் நேற்று (06.01.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வராசா விசாலாட்சி தம்பதியரின் இளைய மகளும், புரெக்டர் சிவப்பிரகாசம் தில்லைநாயகம்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அட்வகேட் சுந்தரலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், ராஜேஸ்வரி, யோகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராஜன் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்), செல்வகுமார் (பிரதி சுங்கப்பணிப்பாளர் - இலங்கை சுங்கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவாஜினி, சுகந்தி ஆகியோரின் மாமியாரும், சஞ்சீவன், சுதஷனா, சாரங்கன், பிரசாளினி (அமரர்), விபுஸ்னு, ஹம்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
செல்வராஜன் - 077 612 6089
செல்வகுமார் - 077 735 7443

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## VACANCY FOR THE POST OF SECRETARY NUFFIELD SCHOOL FOR THE DEAF AND BLIND, KAITHADY

**Minimum requirements:**
- Work experience in related field – minimum two years
- G.C.E (A/L)
- Computer skill (Ms. Office, email and internet)
- Fluent in written and spoken Tamil & English
- Age above 25 years

**Salary negotiable**

Applications giving full details with names of two referees should be emailed to **nsdb1956@gmail.com** and the original posted to the undersigned by12thJanuary2024. Selected candidates will be called for an interview.

**Principal**
**Nuffield School for the Deaf and Blind**
**Kaithady**
**021-223 2202**

(cs.53391) (N.1)

## பதவிவெற்றிடங்கள்
### நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை, கைதடி

**பதவிகள்**

1. **சிகிச்சையறை பொறுப்பாளர்** (Sick Room Matron)
2. **விடுதி பொறுப்பாசிரியர்** (Hostel Staff)
3. **சமையலாளர்** (Cook)

**சம்பளம் :** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

ஆர்வம் உடையவர்கள கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் விலாசத்திற்கோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கோ தங்களது சுயவிபரக்கோவையை **12.01.2024** திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**அதிபர்,**
**நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர், பாடசாலை,**
**A9 வீதி, கைதடி.**
**021-223 2202**
மின்னஞ்சல் : **nsdb1956@gmail.com**

(cs.53391) (N.1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 28 • 02 • 1944 — மறைவு 06 • 01 • 2024

### திருமதி தவராசா பவளம்மா (பற்பணாக்கா)

நாகலிங்கம் வீதி. தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவராசா பவளம்மா (பற்பணாக்கா) நேற்று (06.01.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற தவராசாவின் அன்பு மனைவியும். காலஞ்சென்ற சுந்தரலிங்கம் அவர்களின் அன்புத் தங்கையும். கார்த்தீபன். பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும். அனுஜா. புஸ்பமலர் ஆகியோரின் அன்பு மாமியும். சாய்சரண். மகதி ஆகியோரின் அன்பு பேர்த்தியும். காலஞ்சென்ற தவமணி மற்றும் கனகாம்பிகை. செல்வராணி. செல்வரத்தினம். செல்வராஜா. ஸ்ரீமுருகராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாகலிங்கம் வீதி,**
**தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 150 0611**
**077 150 1694**

(71132) (K-1)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும். இழுத்துபதிக்க ஒரு சதுர அடி - 100 ரூபாய்

**077 334 1281**

## உடனடி வேலைவாய்ப்பு

புதிய கம்பனிக்கு அனுபவமுள்ள முகாமையாளர்கள் தேவை. தகுதி உள்ளவர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் தேவை. ஆண் / பெண்.

**076 112 4145**

## காணி விற்பனைக்கு

வவுனியா - பண்டாரிகுளம் அம்மன் கோவிலுக்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

- வீட்டுத் தொகுதிக்கும் - மருத்துவ மனைக்கும் பொருத்தமான இடம்
- புகையிரத நிலையம் - வங்கிகள் - பஸ்டான்ட், மார்கட் என்பன மிக அருகாமையில்.

(Cs 25837) (N.1)

**077 362 8995**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் பொன்னம்பலம் காமாட்சி
(7 ஆம் வட்டாரம், நயினாதீவு)

காலங்கள் எத்தனைதான் எமைக்
கடந்து சென்றாலும்
நீங்கள் காட்டிய அன்பு மட்டும் எம்
அகத்தை விட்டு அகலாது
ஆண்டவனிடம் உங்களுக்காக
அனுதினமும் வேண்டுகின்றோம்.

**உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்**

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### கந்தையா விவேகானந்தம் (இந்திரன்)
### (அம்பிகா ஐஸ்கிறீம் உரிமையாளர்)

**பிறப்பு 09.05.1961** — **இறப்பு 05.01.2024**



நாவற்காடு சுட்டிவேரத்தைப் பிறப்பிடமாகவும். அளவெட்டி வெள்ளயம்பதியைப் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விவேகானந்தம் (இந்திரன்) நேற்றுமுன்தினம் (05.01.2024) வெள்ளிக் கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும். காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சகுந்தலாதேவி தம்பதியரின் மருமகனும். சயந்தினியின் அன்புக் கணவரும். றொஷானி (வவுனியா 2024 - கல்வியற் கல்லூரி). நிருசன் (வவுனியா 2024-கல்வியற் கல்லூரி). நிரோசினி (அருணோதயக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும். நித்தியானந்தன். யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும். டயசிங்கா. குகவேணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வெள்ளியம்பதி,**
**அளவெட்டி வடக்கு,**
**அளவெட்டி.**

**தொடர்பு: 077 051 2018**
**077 851 6489**

**தகவல்: குடும்பத்தினர்.**

## நீரின்றி வாடும் நெற்பயிர்கள்

பளை, ஜன. 7

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் நெற்பயிர்கள் நீரின்றி வாடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் வடக்கு மாகாணத்தில் பரவலாக மழை வீழ்ச்சி பதிவான போதும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது குறைவானதாக உள்ளது.

இந்த நிலையில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இன்னமும் குறைவான மழை வீழ்ச்சியே பதிவாகியுள்ளமையால், நெற்பயிர்கள் நீரின்றி வாடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-9)

## ஒருநாள் சேவை கட்டண அறவீடு

யாழ்., ஜன. 7

ஒருநாள் சேவை அடையாள அட்டை விண்ணப்பதாரர்களுக்குரிய கட்டணங்கள் அனைத்தும் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத் தலைமையக அலுவலகத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் அறவிடப்படுகிறது.

உரியவர்கள் கிராம அலுவலரிடம் கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை என சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ். அரியாலையை அண்டிய பகுதியில் நிலப்பரப்பு மற்றும் தென்னங்காணிகள் விற்பனைக்குண்டு.

**070 316 4214**

## விற்பனைக்கு

அலுவலகத்தில் பயன்படுத்திய உபகரணங்கள், கூரைத் தகரங்கள், மரத்தடிகள், போட்டோ கொப்பி இயந்திரம் மற்றும் அலுமிய பிற்றிங்ஸ் என்பன உடன் விற்பனைக்குண்டு.

**070 316 4214**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கலட்டி சந்திக்கு அருகாமையில் 1 ½ பரப்பு காணி மூன்று பக்கமும் மதில் கட்டப்பட்டு நாலாவது பக்கம் தகர வேலியுடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு : **076 292 0303**

## விற்பனைக்கு

கல்கிசை, இரத்மலானை border இல். Land உடன் மிகவும் அழகான வீடு. Mount Lavinia St Thomas College இல் இருந்து 2.7 km தூரம் கூப்பிடு தொலைவில் பஸ் தரிப்பிடம், காலி வீதிக்கு மிகவும் அருகில். வங்கிகள் மற்றும் Super Marker நடை தூரத்தில் 10.6 Perch, car park, solor Connection உடன் 2500 சதுர அடியில் upstair வீடு உடன் விற்பனைக்கு. உரிமையாளர் வெளிநாடு செல்வதால் விலை பேசி தீர்மானிக்க முடியும்.

தொடர்பு: **070 148 3348**

## விற்பனைக்கு

ஒரு கைப்பாவனை உள்ள நல்ல நிலையல் Bajaj Pltina 100 CC விற்பனைக்கு உண்டு.

**075 073 6183**

## பெண் உதவியாளர் தேவை

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன் இயங்கும் பல் கட்டும் ஸ்தாபனத்துக்கு சிட்டை எழுதுனர் தேவை.
**கல்வித் தகைமை:** O/L போதுமானது.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **077 5766 595**

## விற்பனைக்கு

Bajaj ABU முச்சக்கர வண்டி விற்பனைக்குண்டு.

(cs.534440) (N.I)

**077 691 3058**

## வாடகைக்கு

A9 வீதியில் இரண்டு பெரிய அறைகள் இணைந்த குளியலறையுடன் கூடிய சகலவசதிகளையும் கொண்ட விசாலமான வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் நடத்துவதற்கு உகந்த இடம். சென்ஜோன்ஸ், சுண்டுக்குழி மகளிர் கல்லூரி, கச்சேரி நடைதூரத்தில் (தரகர் தேவையில்லை)

(cs.534409) (N.1)

தொடர்பு: **077 298 0578**




பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்களுக்கான அழைப்பு

**2024 ஆம் ஆண்டில் THE FLAG FORUMத்தின் முழு நேரக் கற்கை நெறியுடன் இணைந்து உங்களைத் தொழில்சார் உலகிற்குத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.**

பண்பை வளர்த்தல், ஆளுமையை மேம்படுத்துதல், ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறல்.

கற்கைக்கால இறுதியில் செலுத்திய பணம் முழுமையாக மீளளிக்கப்படும்

விண்ணப்பங்களுக்கு →

+94 77 707 3613
theflagforum.com
admin@theflagforum.com
69/2, Nallur Cross Road, Jaffna.

# மரண அறிவித்தல்



**மண்ணில் : 05.01.1952 விண்ணில் : 05.01.2024**

## சபாரத்தினம் பாலசுப்பிரமணியம்

காரைநகர் வலந்தலை சயம்பு வீதியை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட அமரர் வித்துவான் மு.சபாரத்தினம் அவர்களின் மூத்த மகன் பாலசுப்பிரமணியம் அவர்கள் 05.01.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வித்துவான் சபாரத்தினம் சேதுநாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா கோமளம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமலர் (ஆச்சி) அவர்களின் அன்புக் கணவரும், ஆனந், அஜந்தா அவர்களின் பாசமிகு தகப்பனாரும், பாலசந்திரன், பாலகிருஷ்ணன், கலாமணி, பாலசுந்திரம் பாலசிங்கம், கலாமதி ஆகியோரின் அன்பு சகோதரரும், செல்வராசா, பொன்னுராசா கனகராசா, மகாராஜா, ஜீவராஜா தங்கராசா, கனகமலர், ஜீவநேசம் ஆகியோரின் மைத்துனரும், மகிந்தன், லவதர்ஷனி ஆகியோரின் மாமனாரும், சாயிசனின் பேரனும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் இன்று (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் பார்வைக்காக காலை 09 மணிமுதல் மாலை 05 மணிவரை வைக்கப்பட்டு 08.01.2024 அன்று இறுதிக்கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12.30 மணியளவில் பொரளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு - **மனைவி - 076 490 7343**
**மகள் - 076 328 0780**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**மண்ணில்**
**30.07.1935**

**விண்ணில்**
**21.12.2022**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## குழந்தைவேல் சோதிராசா

**திதி: திரயோதசி (09.01.2024)**

அப்பா எம்மை விட்டு பிரிந்து
ஒரு வருடம் சென்றாலும் எம்
உள்ளங்களில் என்றும் வாழ்கிறீர்கள்

உண்மை, அன்பு, கடமை, எல்லோருக்கும்
அறிவுரை கூறல், உதவுதல் என சிறப்புற்று
வாழ்ந்த நீங்கள் இன்றும் எங்கள் மனதில்
நீங்காத நினைவுகளுடன்
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்

என்றுமே கண்ணீர்ப் பூக்களையே ஆத்ம
சாந்திக்காக சமர்ப்பிக்கும் - **பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**34, மாரி அம்மன் வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**பிரிவால் துயருறும்**
**S.மயூரன் - மகன்**
**077 366 7441**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**077 138 7596, 071 9999 306**

(CS 27585) A-1



## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26.03.1941 | மறைவு 27.12.2013

அமரர்

**செல்லத்துரை பொன்னுத்துரை**

(இ.போ.ச. சாரதி கோண்டாவில் சாலை)

அன்பின் திருவுருவே அப்பா!
எங்கள் பாசத்தின் உறைவிடமே எத்தனை காலங்கள்
போனாலும் மறப்போமா உங்களை எங்கள் மனதில் குடி கொண்ட
தெய்வமே! உங்கள் அன்பு உருவம் என்றும் மாறாது எம் இதயத்தில்
உங்கள் நினைவுகளை சுமந்து வாழ்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

அம்பகர் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
076 654 3717

உங்கள் நினைவுகளுடன் என்றும்
பிள்ளைகள், பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(CS 53415) (N.1)



## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 02 . 1949



இறப்பு 06 . 01 . 2024

**தம்பிப்பிள்ளை விஸ்வலிங்கம்**

(தர்மகர்த்தா-புத்தூர் சிவன் கோயில், ஓய்வுநிலை ஆய்வுகூட உதவியாளர் - யா/புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி)

சிவன்கோயிலடி புத்தூர் மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை விஸ்வலிங்கம் அவர்கள் நேற்று (06.01.2024) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஸ்ரீதேவசேனா அவர்களின் அன்புக் கணவரும், அபிராமி, பவானி, கோபிநாதன், மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகவேல், சற்குருதாஸ், யசோபா, கௌரிதீபா ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜவின், யகஸ்வின், கௌரீசன், சஷ்டிகுமரன் ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் சண்முகநாதன், கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் தேவிதிலகவதி, அனவரத விநாயகம்பிள்ளை ஆகியோரினதும், ஸ்ரீவள்ளிநாயகி, பராசக்தி ஆகியோரினதும் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு சிவன் கோவில் பின்வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே: 077 4040 146

தகவல்: குடும்பத்தினர்

(CS 57590) A-1


# வவு. பயிர்ச்செய்கையில் புதிய பூச்சியின் தாக்கம்

## விவசாயிகள் கவலை

வவுனியா, ஜன. 7

வவுனியா மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்களில் வண்ணத்துப் பூச்சியைப் போன்ற பூச்சி இனமொன்று பரவி வருதால் பயிர்கள் பாதிப்படைகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கபிலநிறத் தத்தி, வெண் முதுகுத் தத்தி, மடிச்சுக் கட்டி போன்ற நோய்கள் நெற்பயிர்களைத் தாக்கிவரும் நிலையில் தற்போது புதிய பூச்சி இனம் ஒன்று வயல்களைத் தாக்குகிறது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்குப் பல வகையான கிருமிநாசினிகளைப் பயன்படுத்தியபோதிலும் அவை எதுவும் பயனளிக்கவில்லை என்றும் விவசாயிகள் குறிப்பிட்டனர். இதுதொடர்பில் வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பி. அற்புதச்சந்திரனிடம் கேட்டபோது, "இந்த நோயானது 'அந்துப் பூச்சி' என அடையாளப்படுத்தப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த விவசாய போதனாசிரியரை விவசாயிகள் உடன் நாடவேண்டும்" - என்றார். (ச-110)


## ஆங்கில வகுப்பு

தரம் 1 முதல் O/L வரை ஆங்கிலம், கணிதம் வீட்டுக்கு வந்து குறுங் வகுப்புகளும் கற்று தரப்படும்.
ஆங்கிலம் கற்க ஆர்வமுள்ளவர்களுகம் கற்ற முடியும்.

**076 112 4145**



## உடனடி வேலைவாய்ப்பு

கீழ்வரும் முகவரியில் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் Accounts Assistant (Female) பதவிக்கு பின்வரும் தகைமையுடையோர் தேவை.

**தகைமைகள்:**

* G.C.E (O/L) ஆங்கிலம், கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தி
* G.C.E (A/L) வர்த்தக பிரிவில் மூன்று பாடங்களில் சித்தி
* கணினி அறிவு (MS Word, Excel, Internet & E-mail) அவசியம்
* நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கவும்.

**303,A-9 Road, Kilinochchi**

**(கிளிநொச்சி பொலிஸ் நிலையம் அருகாமையில்)**

(CS 25687) A-1



## நாவற்குழி கிழக்கு (காதவாய்க்கால்) தெருவருகுப் பிள்ளையார் ஆலயம் பொதுக்கூட்டம் மற்றும் புதிய நிர்வாக குழு தெரிவும்

புதிய நிர்வாக தெரிவானது 14.01.2024 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் (ஆலய யாப்பு விதிக்கமைய) இடம்பெறும் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

மேற்படி பொதுக் கூட்டத்தில் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள், மாத உபயகாரர்கள் மற்றும் சதுர்த்தி திருவிழா உபயகாரர் திருவெம்பாவை பூஜை உபயகாரர் மற்றும் நலன்விரும்பிகள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆலய பரிபாலன சபை

(CS 53441) A-1



## போலன்ட் வேலைவாய்ப்பு

**50 - ஸ்ரீல் பொருத்துனர்**
4140 PLN சம்பளம் : Rs.341,963/- ( Steel Fixer )

**25 - தச்சு தொழிலாளர்கள்**
4400 PLN சம்பளம் : Rs.363,439/- (Carpenter)

**50 - கட்டட தொழிலாளர்கள்**
( Construction Workers )
3480 PLN சம்பளம் : Rs.287,447/-

- தங்குமிடம்,மருத்துவ வசதி,போக்குவரத்து வசதி,வழங்கப்படும்.
- உணவு வழங்கப்படும்
- 2 வருட ஒப்பந்தம் வேலை நேரம் ஒரு நாளைக்கு 8 மணிநேரம்
- கிழமைக்கு ஒரு நாள் லீவு வழங்கப்படும்
- 2 வருட முடிவின் பின் இரு வழி விமானச்சீட்டு வழங்கப்படும்
- ஏனைய நிபந்தனைகளும்,விதிமுறைகளும் போலந்து நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

1 PLN Rs.83.00

LL.No. : 2427

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY
றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
இல. 17, கவுன்சில் அவெனியூ,தெஹிவளை.
E - Mail : rodneyagency@hotmail.com

தொடர்பு :
0117955466
0740835558

max adz


## போட்டிகள்

அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டை முன்னிட்டு சைக்கிள் மற்றும் வீதி ஓட்டப் போட்டிகள் முற்போக்கு முன்பள்ளி முன்றிலில் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்களை உரிய நேரத்துக்குச் சமூகம் கொடுத்து பதிவு களை மேற்கொள்ளவேண்டும் என நிலையத் தலைவர் க. குகரதன் அறிவித்துள்ளார். (ரி-36)

## கொடுப்பனவு

பளை, ஜன. 7

பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவு பளை அஞ்சல் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

கொடுப்பனவினை உரிய காலப்பகுதிக்குள் பெற்றுக் கொள்ளுமாறு அஞ்சல் அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-ரி-9)

## 10% கழிவு



யாழ்ப்பாணம், ஜன. 7

2024 ஆம் ஆண்டுக்கான சோலை வரியை எதிர்வரும்31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துபவர்களுக்கு 10 வீத கழிவு வழங்கப்படும் என்று காரைநகர் பிரதேச சபையின் செயலாளர் கி.விஜயேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 13 பிரதேசசெயலர் பிரிவில் டெங்குத் தொற்று தீவிரம்!

யாழ்ப்பாணம், ஜன. 7
யாழ். மாவட்டத்தில் மருதங்கேணி, நெடுந்தீவுப் பிரதேச செயலகங்கள் தவிர்ந்த ஏனைய 13 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்துச் செல்கிறது என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடத்தில் யாழ். மாவட்டத்தில் 3 ஆயிரத்து 986 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். வருடம் பிறந்து முதல் மூன்று நாள்களிலும் 282 டெங்கு நோயாளர்கள் யாழ். மாவட்டத்தில் இனம்காணப்பட்ட நிலையில் அவர்களுக்கு மருத்துவமனைகளில் சிகிச்சை வழங்கப்படுகிறது. தினமும் சராசரியாக 70 தொடக்கம் 100 நோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்படுகின்றார்கள்.

கடந்த 2ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் டெங்குத் தொற்றுக்கு எதிரான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அடுத்துவரும் நாள்களில் தீவிரமான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ம-66)

## மன்னாரில் ஆற்று நீரை தேக்கும் திட்டம் அவசியம்

### பிகிராடோ சுட்டிக்காட்டு

மன்னார், ஜன.7
மன்னார் மாவட்டத்தில் மழை நீரைச் சேமிக்கும் நடைமுறைத் திட்டம் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் தடையின்றி விவசாயச் செய்கையை முன்னெடுக்க முடியும் என மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் சுமார் ஆறுக்கும் மேற்பட்ட ஆறுகள் காணப்படுகின்றன. அனைத்தும் அதிகமான நீரைக் கொண்டு செல்லக் கூடிய ஆறுகளாக காணப்படுகின்றன. இந்த ஆறுகள் ஊடாக வருகின்ற நீர் கடலுடன் கலக்கின்றது. ஆறுகளை அண்மித்த பகுதிகளில் பெரிய குளங்களைக் கட்டினால் மன்னார் மாவட்ட விவசாயிகள் இரண்டு போகத்துக்குத் தேவையான நீரைத் தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்த முடியும். அருகில் உள்ள யாழ். மாவட்டத்துக்கும் தேவையான நீரை வழங்கமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ரி-56)

## ரணிலுடன் பேசிப்பயனில்லை: சந்திப்பில் பங்கேற்கவில்லை

### ஆறு. திருமுருகன் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 7
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஆண்டு தைப்பொங்கல் விழாவுக்கு வருகை தந்தபோது நல்லை ஆதீனத்தில் எங்களைச் சந்தித்தார். அதன் போது முன்வைத்த கோரிக்கைகளையே செயற்படுத்தாத அவருடன் மீண்டும் ஏன் சந்திக்க வேண்டும் என ஆறு. திருமுருகன் கேள்வி எழுப்பினார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் மதத் தலைவர்களை ஜனாதிபதி ரணில் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளாமை தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார். மேலும், 'நல்லை ஆதீனகுரு முதல்வரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவில்லை. அவர் வேறு இடத்துக்குச் சென்று ஜனாதிபதியைச் சந்திக்கத் தேவையில்லை' என்றும் குறிப்பிட்டார். (அ-ஒ-26)

## காந்தி சேவா சங்க நிர்வாகசபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 7
அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை மு. ப. 10 மணிக்கு உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவர் சோக. தம்பிப்பிள்ளை தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காந்தி கிராமத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இயற்கை வேளாண் விஞ்ஞானி பாமயன் பங்குகொள்ளும் இயற்கை வழி ஒருங்கிணைந்த பண்ணை பற்றிய ஒரு நாள் பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

## ஒரே குடையின்கீழ் கமநல, விவசாய துறைகள்

யாழ்ப்பாணம், ஜன.7
கமநல சேவைகள் மற்றும் விவசாயத்துறை ஆகிய இரண்டையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து விவசாயிகளுக்கு இலகுவான முறையில் சேவைகள் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விவசாயத்துறை சார்ந்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (எ-125)

## வடக்கின் இனக்குழுமம்; ஆய்வுக்காக தனியலகு

### ஜனாதிபதி செயலகப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 7
3 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வடமாகாணத்தில் தனித்துவமான இனக்குழுமம் வசித்து வருகின்றது. இந்து கலாசாரம் இதற்கு சமாந்தரமாக இருந்து வருகின்றது. இதன் அடிப்படையில் ஆய்வுகளை முன்னெடுக்கத் தனியாக அலகை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறுவவுள்ளார் என முன்னாள் ஆளுநரும் ஜனாதிபதிசெயலகத்தின் சமூக விவகாரங்களுக்கான பணிப்பாளருமான கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'வடக்கில் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் 11 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இது மத்திய அரசு மாகாண அரசு என்று அல்லாது அனைத்து தரப்புகளையும் உள்ளடக்கி முன்னெடுக்கப்படும்' என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறும் எனவும் அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் பங்கேற்ற, ஜனாதிபதி செயலகத்தின் தொழிற்சங்கப் பணிப்பாளர் சமன் ரத்னபிரிய, வடக்கு மாகாணத்தில் பிரதான பிரச்சினையாகவுள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தை அடுத்த ஆண்டு வரையில் எடுத்துச் செல்லாது இந்த ஆண்டு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் நடவடிக்கை எடுத்திருக்கின்றார். அதற்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கியும் உள்ளார் - என்றார். (அ-ஒ-125)

## நிமோனியாவால் மூதாட்டி உயிரிழப்பு

பருத்தித்துறை, ஜன. 7
பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்த மூதாட்டியின் உயிரிழப்புக்கு நிமோனியாக் காய்ச்சல் காரணம் என உடற்கூற்றுப் பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

வல்லிபுரம், புலோலி தெற்கைச் சேர்ந்த சரஸ்வதி வல்லிபுரம் (வயது- 75) என்ற மூதாட்டி மூச்சு விடச் சிரமப்பட்ட நிலையில் கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அவர் உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். உடற்கூற்றுப் பரிசோதனையை சட்ட மருத்துவ நிபுணர் கே. வாசுதேவா மேற்கொண்டார். (அ-ஒ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் 2024

## துலாம்

உடுத்தும் உடையையும், உள்ளிருக்கும் மனதையும் வெள்ளையாக வைத்துக் கொள்ளும் நீங்கள் யாருக்கும் தீங்கு நினைக்க மாட்டீர்கள்.

உங்கள் ராசிக்கு 11ஆம் வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் அதிரடி மாற்றங்கள் உண்டாகும். முடங்கிக் கிடந்த நீங்கள் முழு மூச்சுடன் பாடுபட்டு முன்னேறுவீர்கள். அடிப்படை வசதிகள் பெருகும். எதிர்பாராத பணவரவு உண்டு. பிரபலங்களின் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும் மனக்குழப்பம் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும்.

30.4.2024 வரை உங்கள் ராசிக்கு 7ம் வீட்டில் குரு நிற்பதால் வர வேண்டிய பணம் கைக்கு வரும். கல்வியாளர்கள், அறிஞர்களின் நட்பு கிடைக்கும்.

எதிர்காலத்தை கருத்தில் கொண்டு சேமிக்கத் தொடங்குவீர்கள். உறவினர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். மூத்த சகோதரிக்கு திருமணம் நிச்சயமாகும். புது வேலை கிடைக்கும். தாய்வழியில் அனுகூலம் உண்டாகும். அரசு காரியங்கள் விரைந்து முடியும்.

1.5.2024 முதல் வருடம் முடியும் வரை குருபகவான் 8ம் வீட்டில் மறைவதால் கணவன் மனைவிக்குள் வீண் சந்தேகம் வரும். திடீர் செலவுகள் வந்து போகும். ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். குடும்பத்தில் வரும் சின்னச் சின்னப் பிரச்சினைகளை எல்லாம் பெரிதாக்க வேண்டாம். திடீர் பயணங்களும், அலைச்சல்களும் வந்துப் போகும்.

மற்றவர்களை நம்பி முடிவுகள் எதுவும் எடுக்காதீர்கள். கர்ப்பிணிகள் கவனமாக இருப்பது நல்லது. பத்திரங்களில் கையெழுத்திடும் போது ஒருமுறைக்கு பல முறை படித்துப் பார்த்து கையெழுத்திடுங்கள். அண்டை அயலாருடன் அளவாகப் பழகுங்கள். நயமாகப் பேசுபவர்களை நம்பாதீர்கள். இந்த வருடம் தொடக்கம் முதல் வருடம் முடிய உங்கள் ராசிக்கு 6ஆம் வீட்டில் ராகு அமர்வதால் பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்று சேர்வீர்கள். எதிலும் ஆர்வம் பிறக்கும். தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். குடும்பத்தில் மற்றவர்கள் மீதிருந்த சந்தேகங்கள் நீங்கும். புண்ணிய தலங்கள் செல்வீர்கள். கௌரவப் பதவிகள் கிடைக்கும்.

இந்த ஆண்டு முழுவதும் சனி பகவான் 5ம் வீட்டில் தொடர்வதால் பிள்ளைகள் உங்களைப் புரிந்துக் கொள்ளாமல் பேசுவார்கள். உயர்கல்வி, உத்தியோகத்தின் பொருட்டு பிள்ளைகள் உங்களைப் பிரிவார்கள். தாய்மாமன் வகையில் செலவுகள் இருக்கும். சின்னச் சின்ன மனஸ்தாபங்கள் வந்து நீங்கும்.

**வியாபாரிகளே!** புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வேலையாள்களின் தொந்தரவு குறையும். வாடிக்கையாளர்களைக் கவர புதுச் சலுகைகளை அறிவிப்பீர்கள். பங்குதாரர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**உத்தியோகஸ்தர்களே!** ஓடி ஓடி வேலை பார்த்தும் கெட்டப் பெயர்தானே கிடைத்தது. இனி அந்த அவலநிலை மாறும். சக ஊழியர்களுடன் இருந்த பனிப்போர் நீங்கும். கேட்ட இடத்துக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு வருவீர்கள்.

**முனகிக் கொண்டிருந்த உங்களை இந்தப் புத்தாண்டு முழக்கமிட வைப்பதுடன் கூடாப் பழக்க வழக்கங்களிலிருந்து உங்களை விடுவிப்பதாகவும், வாழ்வின் இரண்டாவது அத்தியாயத்தை தொடங்குவதாகவும் அமையும்.**

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் எதையும் செய்ய தொடங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களை உணர்வீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**இடபம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். அரசால் அனுகூலம் உண்டு. விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும். திடீர் யோகம் கிட்டும் நாள். உழைப்பால் உயரும் நாள். வியாபாரம் தழைக்கும்.

**மிதுனம்:** குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். ஆதரவு பெருகும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும்.

**கடகம்:** சந்தோஷம் நிலைக்கும். பாதியில் நின்ற வேலைகள் விரைந்து முடியும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**சிம்மம்:** வேலைச்சுமையால் உடல் அசதி மனச் சோர்வு வந்து நீங்கும். அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

**கன்னி:** குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வீண் வாதங்களில் ஈடுபட வேண்டாம். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வந்து விலகும்.

**துலாம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள். உத்தியோகத்தில் பாராட்டப் படுவீர்கள் சிறப்பான நாள்.

**விருச்சிகம்:** கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக்கூர்ந்து மகிழ்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும். வாகன வசதிப் பெருகும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**தனுசு:** மனம் விட்டு பேசுவீர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உரிமையை பெறுவீர்கள். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**மகரம்:** அநாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். இடர்பாடுகளை சமாளிக்க நேரிடும்.

**கும்பம்:** விவாதங்கள் வந்து போகும். மனைவி வழியில் அந்தஸ்து உயரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.

**மீனம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள்

## தேவை

சிறிய விடுதி ஒன்றில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய கூலித் தொழிலாளி / தோட்ட வேலைசெய்யக் கூடியவர். சமையலாளர் பெண் தேவை.

தொடர்பு: 077 9938 699

## காணி விற்பனைக்கு

காரைநகர் கருங்காலியில் கடற்கரையுடன் 48 பரப்புக் காணியில் 75 பனைமரம் மற்றும் சிறு வீடும் விற்பனைக்கு உண்டு.

1 பரப்பின் விலை - 175,000/=

மேலதிக விபரங்களுக்கு:

074 2600 617
077 6122 971
070 575 8086 (WhatsApp)

(CS 53441) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 06 . 1949



மறைவு 03 . 01 . 2024

### விஜயகாந்தன் சந்திரலேகா

கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஜயகாந்தன் சந்திரலேகா அவர்கள் கடந்த (03.01.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் இரத்தினம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பார்வதி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற விஜயகாந்தனின் அன்பு மனைவியும், விஜயா (நோர்வே), றெஜிகாந்தன் (லண்டன்), ஜசிக்குமரன் (JVS Engineer) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரன், அருந்ததி, வாசுகி ஆகியோரின் அன்பு மாமியாரும், வாசிகி, அபிதா, ஜெனகன், விசாளி, சோஜிதா, சோளிகா, சபரிசன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொக்குவில்.**
**078 914 1415,**
**077 285 7196**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 27590) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவாந்துறையில் டெங்குக் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 7

விசேட நுளம்புக் கட்டுப்பாடு வாரம் நாளை தொடக்கம் 11 ஆம் திகதி வரை மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் முழுவதிலும் மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் நாளை நாவாந்துறைப் பகுதியில் முப்படையினர் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் சிரமதானம் இடம்பெறும் என்றும் யாழ். மாநகரசபையின் சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சந்தைகள், மயானங்களின் சுற்றுச்சூழலைத் துப்புரவாகப் பேணுமாறும், டெங்குப் பெருக்கத்துக்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்துத் தரப்புகள் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

# பரிசளிப்பு

கொடிகாமம், ஜன. 7

கரவெட்டி பிரதேசசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதான மண்டபத்தில் பிரதேசசபை செயலர் க.கம்ஸநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஒ-159)

## பௌத்தமத...

யாழ். மாவட்டச் செயலகத்தில் சர்வமதத் தலைவர்களுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் பங்கேற்ற குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் சந்திப்புத் தொடர்பில், 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்ததாவது:-

வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி கூடுதலாகக் கதைத்தார். இதன்போது நான் கூறினேன், வடக்கில் செய்யவேண்டியது மீள் கட்டுமானம். கண்ணாடித் தொழிற்சாலை தொடக்கம், சீமெந்துத் தொழிற்சாலை என்று அனைத்து அபிவிருத்திகளும் வடக்கில் இருந்தன. பல விடயங்களில் ஏற்றுமதியில் தன்னிறைவிலும் இருந்தோம். போரால் அவை அனைத்தும் இழக்கப்பட்டுள்ளன. எனவே அபிவிருத்தி என்பதை விட வடக்கில் மீள் கட்டுமானம் என்பதே பொருத்தமானது.

அபிவிருத்தி என்பதற்கு மேலாக தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினை தீர்ந்தால் தான் உண்மையான அபிவிருத்தியை அடையமுடியும். சாதாரணமாக அபிவிருத்தி என்பதைவிட அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு என்பது தான் முக்கியமானது. அபிவிருத்தி இரண்டாம் தரமானது. எமக்கான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே முதன்மையானது.

மேலும் பொன்னாவெளி உட்பட பல இடங்களில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொடர்பில் பொதுமக்களின் அபிப்பிராயத்துக்கு செவிசாய்க்கப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட்டேன் - என்றார். (அ-ஒ-5-125)

## நல்லூர்...

விக்கிரமசிங்க தெரிவித்தார். யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று முற்பகல் யாழ். மாவட்ட சர்வமதத் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்:

பொருளாதார அபிவிருத்திக்கு மத நல்லிணக்கம் மிகவும் முக்கியமானது என ஜனாதிபதி ரணில் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கில் போரால் இழந்த வருமானத்தை வடக்குக்கு மீள வழங்குவதற்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களைத் துரிதப்படுத்த எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, மதத் தலைவர்கள் ஆற்றக்கூடிய பணிகள் பெரியதெனவும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது வடமாகாண பாதுகாப்புப் பிரிவினரின் கீழ் உள்ள பகுதிகளில் உள்ள கோயில்கள் மற்றும் தேவாலயங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்படுவதுடன், அந்த மதத் தலங்களை மீளமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கிறிஸ்தவ தேவாலயங்களில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பாக மடு தேவாலயத்தில் நிலவும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

போர்க் காலத்தில் முஸ்லிம் மக்கள் இந்தப் பிரதேசங்களை விட்டு வெளியேறியதாகவும், அவர்கள் மீள்குடியேறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அனைத்து மதம் தொடர்பிலும் செயற்பட புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் ஆலோசனைக் குழுக்களை நியமிப்பது குறித்து ஆலோசித்து வருவதாகவும் ரணில் தெரிவித்தார்.

அத்துடன், நாட்டின் சமய மற்றும் கலாசார விழுமியங்களை முன்வைத்து நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அநுராதபுரம் மற்றும் கண்டியை மையப்படுத்தி பௌத்த சமய கலாசாரத்தை மேம்படுத்தும் வகையில் ஊக்குவிப்புத் திட்டத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாகவும், யாழ்ப்பாணம் மற்றும் தெற்கு கைலாயத்தை (திருக்கோணேஸ்வரம்) மையப்படுத்தி இந்து சமய கலாசாரத்தை மேம்படுத்தும் வகையில் ஊக்குவிப்புத் திட்டத்தை உருவாக்க எதிர்பார்த்திருப்பதாகவும் அது பற்றிய அறிக்கையை வழங்கவும் அறிவுறுத்தப்பட்டது. இந்நாட்டின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு இந்தச் செயற்பாடுகள் பெரும் உறுதுணையாக அமையும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ-ஒ-20-26)

## கோர்த்துவிட...

முடிவடைந்தது. யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கடற்றொழில் தொடர்பான விவகாரம் எடுக்கப்பட்டபோது, இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவைப்படகுகளின் பாதிப்பு பற்றியும் உரையாடப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழகம் மற்றும் பாண்டிச்சேரி முதலமைச்சர்களுடன் இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துச் சென்று பேசுவதற்கு முயற்சி எடுத்ததாகவும், இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு முழுமையான ஆதரவு வழங்கவில்லை என்றும் குறிப்பிட்டதுடன் இந்த வழிமுறை ஊடாக இதைத் தீர்க்கலாம் எனத் தெரிவித்தார். அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த ஆண்டு இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இருக்கின்றது. அவ்வாறான நிலையில் இவ்வாறான முயற்சி சாத்தியமில்லை என்று பதிலளித்தார்.

இதேபோன்று வலி. வடக்கில் கடந்த காலங்களில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த 6 ஆயிரத்து 384 ஏக்கர் காணி சுவீகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. தற்போது அதில் 3 ஆயிரம் ஏக்கர்கள் விடுவிக்கப்பட்டுள்ளநிலையில், விடுவிக்கப்பட்ட காணிகளுக்குரிய வர்த்தமானியை மீளப்பெறும் அறிவித்தல் வெளியிடப்படவில்லை என்று அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் சுட்டிக்காட்டினார். இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த முயற்சியை எதிர்ப்பதால்தான் தாமதப்படுகின்றது என்று குறிப்பிட்டார். இதன்போது பதிலளித்த தெல்லிப்பழை முன்னாள் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி, அளவீட்டுப் பணிகள் முடிவடைந்துவிட்டன. காணி அமைச்சிலிருந்து நடவடிக்கை இன்னமும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார். (அ-ஒ-5)

## ரணில்...

கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்துக்காக மதத் தலைவர்கள் முன்னரே வருகை தந்து ஆசனங்களில் அமர்ந்திருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மண்டபத்துக்குள் நுழையும்போது அனைத்து மதத் தலைவர்களும் எழுந்திருக்காமல், அமர்ந்திருந்தனர்.

கடந்தகாலங்களில் ஜனாதிபதி வருகை தரும்போது பிக்குகளைத் தவிர ஏனைய மதத் தலைவர்கள் எழுந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5-125)

## வவுனியாவில்...

தற்காலிக இராணுவ முகாம் அமைக்கப்பட்டு சோதனை முன்னெடுக்கப்பட்டது. இப்போது திடுதிடுப்பென அது நிரந்தர இராணுவ முகாமாக மாற்றப்பட்டுள்ளது. (அ-ஒ-110)

## தென்னிந்தியத்...

கடந்தகாலங்களில் தென்னிந்தியத் திருச்சபையின் வட்டுக்கோட்டை ஆலயத்துக்கு ரணில் விக்கிரமசிங்க சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-125)

## வடக்குக்கு...

விடுத்தார். யாழ். மாவட்ட தொழிற்றுறையினர், மீனவர்கள் மற்றும் விவசாயிகளுடன் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்;

வடமாகாண வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எதிர்வரும் இரண்டு மாதங்களில் தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அதிகாரிகள் எதிர்வரும் 2 வாரங்களில் வடக்குக்கு வருகை தந்து, இவ்விடயம் தொடர்பில் ஆராயவுள்ளதாகவும் வடமாகாண வர்த்தக சமூகத்தினரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு செயலூக்கமான நிறுவனமொன்றை உருவாக்க எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். மாகாண வர்த்தக ஊக்குவிப்பு நிலையமொன்றை வடமாகாணத்துக்கு விரைவாக வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். (அ-ஒ-இ)

## விஜயகாந்துக்கு...

வைத்து அஞ்சலி செலுத்தினர். இதன் பின்னர் சாலிகிராமத்தில் அமைந்துள்ள விஜயகாந்த் வீட்டுக்குச் சென்று அவரின் திருவுருவப்படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

விஜயகாந்தின் மனைவியும் தே.மு.தி.க. கட்சியின் பொதுச் செயலருமாகிய பிரேமலதா மற்றும் அவரது இரண்டு புதல்வர்களுடன் தமது இரங்கல்களைப் பரிமாறிக்கொண்டதுடன் ஈழத் தமிழர்கள் சார்பில் இரங்கலையும் தெரிவித்தார்.

'தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் மீது தனது கணவர் கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடாகவே மகனுக்குப் பிரபாகரன் எனப் பெயர் வைத்தார்' என உணர்ச்சிப்பெருக்கோடு குறிப்பிட்டார்.

ஈழத் தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுத்து தம்மைத் தாமே ஆளுகின்ற மக்களாக வாழவேண்டும் என்பதில் தனது கணவர் உறுதியாக இருந்தார் எனவும் தெரிவித்தார்.

விஜயகாந்தின் எண்ணம், நோக்கம், சிந்தனை ஆகியவற்றை மதிப்பதுடன் ஈழத் தமிழர்களின் நலனுக்காக அவர் விட்டுச்சென்றபணியைநீங்கள்தொடர்ந்து செல்லவேண்டும் என அவரிடம் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் சண் மாஸ்டர் ஆகியோர் கேட்டுக்கொண்டனர். (அ-ஒ-இ)

## பாடசாலைக்...

மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்துக்குச் சொந்தமான 2.5 பேர்ச் காணி விரைவில் விடுவிக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

28 வருடங்களின் பின்னர் பாதுகாப்புப் படையினரிடமிருந்து விடுவிக்கப்பட்ட மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்துக்கான புதிய கட்டடத்தை 8 மில்லியன் ரூபாவில் நிர்மாணிக்க இலங்கை விமானப்படை முன்வந்துள்ளது. அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கை விமானப் படையின் அதிகாரிகள், வடக்கு மாகாண அதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றனர். விமானப் படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் ஆரம்ப நிகழ்வாக அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது. பாடசாலை வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டதுடன், நூலகத்துக்கான புத்தகங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (அ-ஒ-20-26)

## பொலிஸார்...

தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி ம.ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை - வற்றாப்பளை வளாகத்தில் நாளை திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டத்துக்கான சங்கத்தின் பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை ஆள் தேவை

திருநெல்வேலியில் உள்ள புடைவை வியாபார நிலையத்திற்கு வேலை ஆள் தேவை. (பெண்)
வேலை நேரம் - (9AM - 7 PM)
சம்பளம் - 30,000/=
தொடர்பு: 076 306 3306

## காணி விற்பனைக்கு

தாவடிப்பகுதியிலும், உரும்பிராயிலும் 11/2 பரப்புக் காணி விற்பனைக்கு.
தொடர்பு: 077 60 11135

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவி நிலைகளுக்கு வேலையாட்கள் தேவை.

1. விற்பனைப் பிரதிநிதி
   Sales Representative
2. விற்பனை உதவியாளர்
   Sales Assistant
3. கணினி அறிவுடைய கணக்கு உதவியாளர்
   Account Assistant
   (With computer knowledge)

மேற்குறித்த பதவி நிலைகளுக்கு அனுபவம் உள்ள ஆண்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
0777 178 025

(CS 27593)A-1

## வாடகைக்கு

யாழ்நகருக்கு அண்மையில் மகளிருக்கான Beauty Parlour நடத்துவதற்குகேற்ற சிறிய இடம் தளபாடங்களுடன் உண்டு.
ரூபா 20,000/-
தொடர்பு: 074 217 0383

## வீடு வாடகைக்கு

சாவகச்சேரி வடக்கு, மீசாலையில் வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. மின்சாரம், கிணறு, Watertank போன்ற வசதிகளும் பல வாகனங்கள் நிறுத்தக்கூடிய இட வசதிகளும் உண்டு.
தொடர்பு: 077 539 3728

cs.534177 (N.1)

## பணிப்பெண் தேவை

யாழ்நகரில் வைத்தியர் ஒருவரின் வீட்டில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய பணிப்பெண் ஒருவர் உடனடியாகத் தேவை.
வயது: 35 இற்கு மேற்பட்டவர்
தொடர்பு: 077 724 2362


# நீதிமன்றத்துக்குள் ஒளிப்பதிவு: இளைஞன் கைது!

பருத்தித்துறை, ஜன. 7

பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்துக்குள் அனுமதியின்றி ஒளிப்பதிவு மேற்கொண்ட இளைஞனை பருத்தித்துறைப் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர். உரிமை கோரப்படாத பொருள்கள் நேற்றைய தினம் ஏலம் விடப்பட்டன. இதன்போது நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களை இளைஞன் கைத்தொலைபேசியில் ஒளிப்பதிவு செய்துள்ளார். இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (அ-ஒ-100)

## 10 மில்லியன் டொலர் வெகுமதி

கொழும்பு, ஜன. 7

ஹமாஸ் அமைப்புக்கு நிதி வழங்கும் 5 பேரை அடையாளம் கண்டுள்ள அமெரிக்கா அவர்கள் தொடர்பான விவரங்களை வழங்கினால் 10 மில்லியன் அமெரிக்க டொலரை வெகுமதியாக வழங்குவதாக அறிவித்துள்ளது. (ஒ-6)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொட்டடி ( லைடன் பக்ரி அருகாமையில் ) உள்ள முத்தமிழ் வீதியில் சுற்று மதிலுடன் வீட்டுடன் 04 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொட்டடி சந்திக்கு அருகாமையில் கூழாவடி வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)
TP 077 285 50 68 WhatsApp +004520430191

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோப்பாயப் பகுதியில் பருத்தித்துறை வீதி பிரதான முகப்புடன் அமைந்துள்ள 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
077 077 4919

## A/L வரலாறு

மாவட்ட, தேசிய ரீதியிலான சாதனையாளர்களை உருவாக்கியவர், பல சட்டத்தரணிகள் உருவாக வழிகாட்டியவர்
M.பத்மன் [B.A(Hons) (History),M.A. (History),P.G.D.E, M.Ed (O.U.S.L) ]
கற்பிக்கும் இடங்கள்
D.M.I ஆரியகுளம் சந்தி, யாழ். நகர். BITSMANS மானிப்பாய்
உயர்கலைக்கல்லூரி குளப்பிட்டி

- A/L - 2025 புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
- பாடம் மாறி கற்பவர்களுக்கு புதிய பிரிவு
- A/L - 2024 அனுமதிகள் வழங்கப்படுகின்றன

077 482 5587






## சிறிராம் ஜுவல்லர்ஸ்

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த நாம் எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளிற்கு இணங்க எதிர்வரும் தைபொங்கல் தினத்தை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடியினை வழங்கவுள்ளோம்



- * 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி. சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்
- * அனைத்து விதமான தங்க ஆபரணங்களையும் 16.01.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
- * அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை ஊறுதிசெய்யும் தரச்சான்றும் வழங்கப்படும்.
- * தங்கத்தின் அன்றைய நாளிற்கான விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

சிறிராம் ஜுவல்லர்ஸ்
22 கரட் தங்க நகைகளின் சாம்ராஜ்ஜம்

தொடர்பு: 077 165 1729, 077 773 0567, 021 222 8334

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு வீதி, டச்சு வீதியில் (GPS வீதி) 6 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. 20 அடிப் பாதையுடன் மெயின் றோட் முகப்புடன் உண்டு.

தரகர் தேவையில்லை.
பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 வரை

தொடர்பு: 076 755 8606
077 874 3204

(CS 27576) A-1

## ஆயுரா எக்ஸ்போட்ஸ்

வெளிநாடுகளுக்கான
துரித தபால்கள் மற்றும் பொதிகள் சேவைகள்

- விரைவு
- பாதுகாப்பு
- நம்பகத்தன்மை



11kg மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| லண்டன் | - 980/= |
| பிரான்ஸ் | - 2430/= |
| சுவிஸ் | - 2750/= |
| கனடா | - 2350/= |

☎ 021 315 7070 | 077 769 3978

இல.07, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்
உங்களுடைய பொதிகளை ஆயுரா பஷனில் ஒப்படைக்க முடியும்


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 மார்கழி [illegible] ஞாயிற்றுக்கிழமை (07.01.2024) சிகரம் : 181

வரி உயர விலை உயரும்
விலை உயர பஞ்சம் உயரும்
பஞ்சம் உயர புரட்சிகள் உயரும்
புரட்சிகள் உயர அதிகாரம் வீழும்

– ஒட்டுக்குழுச் சுவாமிகள்



# தை பிறக்கும் வழி பிறக்குமா?

○ நிலாந்தன்

அண்மையில் கோண்டாவில் உப்புமடச்சந்தியில், ஒரு சமகாலக் கருத்தரங்கு இடம்பெற்றது. தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் அந்தக் கருத்தரங்கை ஒழுங்குபடுத்தியது. அதற்குத் தலைமை தாங்கிய ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் சொன்னார். தனக்குத் தெரிந்த பலர் ஒருவேளை உணவை, குறிப்பாக காலை உணவைத் தவிர்ப்பதாக. காலை உணவைக் கட்டாயம் எடுக்கவேண்டும், இரவு உணவைத் தவிர்க்கலாம் என்று தான் ஆலோசனை கூறியபோது, அவர்கள் சொன்னார்களாம், காலை சாப்பிடாவிட்டால் அன்றைய அலுவல்களில் மூழ்கும் போது பசி தெரியாது. ஆனால் இரவு சாப்பிடாவிட்டால் பசி தெரியும்; நித்திரை வராது என்று. இதுதான் பெரும்பாலான கீழ் மத்தியதர வர்க்கக் குடும்பங்களின் நிலைமை. ஆண்டு இறுதியில் இதுதான் நிலைமை என்றால் தை பிறந்தாலும் வழி பிறக்குமா?

சாதாரண மக்களுக்கு வழி பிறக்குமோ இல்லையோ, அரசியல்வாதிகள் அதிகாரத்தைச் சுவைப்பதற்கான புதிய வழிகளைத் தேடித் திறக்கத் தொடங்கி விட்டார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வைப்பதற்காகப் புதிய கூட்டணி ஒன்றை நோக்கி ஒரு புதிய அலுவலகம் கடந்த முதலாம் திகதி ராஜகிரியவில் திறந்து வைக்கப்பட்டது. அதேநாளில், மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகிய ஷான் விஜயலால் டி சில்வா எதிரணியோடு அதாவது ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து கொண்டார். இவர் தென்மாகாண சபையின் முதலமைச்சராக இருந்தவர். அவர் எதிரணியில் இணைந்து கொண்டதன் மூலம் எதிரணி தானும் பலமடைவதான ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றது.

அதாவது, புதிய ஆண்டு அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான தயாரிப்புகளோடு பிறந்திருக்கிறது என்று பொருள். மக்கள் சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் இருக்கலாம். மரக்கறிகளின் விலை வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்து போகலாம். வரியானது மக்களை ஈவிரக்கமின்றிக் கசக்கிப்பிழியலாம். மோட்டார்சைக்கிள் ஒரு லக்சறிப் பொருளாக மாறலாம். ஆனால் அரசியல்வாதிகளின் அதிகாரப்பசி குறையப் போவதில்லை என்பதைத்தான் ஆண்டின் தொடக்கம் நமக்கு உணர்த்துகின்றது.

இவ்வாறு தென்னிலங்கையில் ஒரு ஜனாதிபதித் தேர்தலை நோக்கி பிரதான கட்சிகள் ஏற்கனவே உழைக்கத் தொடங்கி விட்டிருக்கும் ஒரு பின்னணியில், தமிழ்த்தரப்பு என்ன செய்து கொண்டிருக்கிறது?

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக முதலில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது குத்துவிளக்கு கூட்டணிதான். சில மாதங்களுக்கு முன் கூட்டணியின் கூட்டம் மன்னாரில் நடந்தபொழுது ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது. ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது என்று அந்தக்கூட்டு முடிவெடுத்தது. அந்த முடிவை வலியுறுத்தி கூட்டுக்குள் அங்கம் வகிக்கும் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவ்வப்போது கருத்துத் தெரிவித்து வருகிறார். சுரேஷ் அவ்வாறு கருத்துத் தெரிவித்த பின் அண்மையில் விக்னேஸ்வரன் அதற்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்திருந்தார். ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளராகத் தான் களமிறங்கத் தயார் என்றும் அவர் அறிவித்துவிட்டார்.

இவ்வாறு விக்னேஸ்வரன் அறிவித்த பின் கஜேந்திரகுமார் அதற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் பகிஷ்கரிக்கும் என்பது அந்தக் கட்சியின் நிலைப்பாடாகும்.

அதேசமயம் தமிழரசுக் கட்சி அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. அது தன் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் மினக்கெடுகின்றது. எனினும் சுமந்திரனுக்கு நெருக்கமான சாணக்கியன் தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற தெரிவுக்கும் பகிஷ்கரிப்புக்கும் எதிராகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார். தமிழரசுக் கட்சி யாராவது ஒரு சிங்கள வேட்பாளரை நோக்கித் தமிழ் வாக்குகளைத் திருப்பும் நோக்கத்தோடிருந்தால், அந்தக்கட்சி பொது வேட்பாளரை எதிர்க்கும்.

கடந்த 15 ஆண்டுகளில் நடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தலின் போதும் ஒரு தமிழ்ப்பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலிமையாக முன்வைத்தது, தமிழ்மக்கள் பேரவையால் உருவாக்கப்பட்ட சுயாதீனக் குழுதான். கடைசியாக நடந்த ஜனாதிபதித் தேர்தலையொட்டி உருவாக்கப்பட்ட அந்தக்குழுவின் முயற்சிகள் வெற்றி பெறவில்லை. எனினும், அந்தக்குழு அந்த முடிவை நோக்கி கருத்துருவாக்க வேலைகளைச் செய்தது.

இம்முறை குத்துவிளக்குக்கூட்டணி அந்த முடிவை எடுத்திருக்கின்றது. குத்துவிளக்குக்கூட்டணி இந்தியாவுக்கு விசுவாசமான ஒரு கூட்டணியாகப் பார்க்கப்படுகின்றது. இந்தியாவுக்கு ஆதரவான ஒரு கூட்டு என்று கருதப்படும் குத்துவிளக்குக்கூட்டணி தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற கருத்தை கையில் எடுத்ததனால் அது இந்தியாவின் வேலையோ என்ற சந்தேகம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஏற்பட்டிருக்கலாம்.

முதலில் ஒரு தமிழ்ப்பொதுவேட்பாளரை ஏன் நிறுத்தவேண்டும் என்று பார்ப்போம். ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளர் நிச்சயமாக வெல்லப்போவதில்லை. ஆனால் அவர் பிரதான சிங்கள வேட்பாளர்களின் வெற்றிகளை சவால்களுக்கு உட்படுத்துவார். எப்படியென்றால், ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளரை நோக்கி தமிழ்க் கட்சிகள் கடுமையாக உழைத்தால், தமிழ் வாக்குகள் பெருமளவுக்கு அவருக்குத்தான் விழும். அப்படி விழுந்தால், பிரதான சிங்கள வேட்பாளர்களுக்கும் 50 வீதத்துக்கு மேலான வாக்குகள் கிடைக்காமல் போகக்கூடும். இம்முறை இரண்டுக்கும் மேற்பட்ட சிங்கள வேட்பாளர்கள் அரங்கில் காணப்படுகின்றார்கள். அதாவது சிங்கள வாக்குகளே சிதறும் ஒரு நிலை. இதில் தமிழ் வாக்குகள் கிடைக்காவிட்டால், எவருக்குமே முதற்சுற்று வாக்குகள் கணக்கெடுப்பில் வெற்றி கிடைக்காமல் போகலாம். அப்பொழுது இரண்டாவது சுற்று வாக்கு கணக்கெடுப்புக்குப் போக வேண்டிவரும். அதில் தமிழ் மக்கள் யாருக்கு தமது இரண்டாவது விருப்பு வாக்கை வழங்குகிறார்களோ அவரே வெற்றி பெறுவார். அதாவது யார் ஜனாதிபதியாக வர வேண்டும் என்பதனைத் தமிழர்கள் தீர்மானிக்கக் கூடிய பேர வாய்ப்பைப் பரிசோதிக்கும் ஒரு முயற்சியே அது.

பிரதான சிங்கள வேட்பாளர்களுக்கு தமிழ் வாக்குகள் கிடைக்காது என்றால், அவர்கள் தமிழ்த் தரப்போடு பேரம்பேச வருவார்கள். அப்பொழுது தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் ஒருவருக்கு தமிழ்மக்கள் தமது இரண்டாவது விருப்பு வாக்கை அளிக்கலாம். அதாவது தமிழ் வாக்குகளை ஒரு சிங்கள வேட்பாளருக்கு "பிளாங்க் செக்"காக வழங்குவதற்குப் பதிலாக பேர வாய்ப்பாக அதைப் பயன்படுத்துவது.

ஆனால் இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் தமிழ் மக்களோடு வெளிப்படையான ஓர் உடன்பாட்டுக்கு வரும் சிங்கள வேட்பாளர் தென்னிலங்கையில் தோற்கடிக்கப்படும் ஆபத்து அதிகமுண்டு என்பதுதான். அதனால் எந்த ஒரு சிங்களவேட்பாளரும் தமிழ் மக்களோடு பேரம்பேசத் தயங்குவார். ஆனால் அதுகூட தமிழ் மக்கள் வெளி உலகத்துக்கு ஒரு உண்மையைச் சொல்வதற்குரிய வாய்ப்பை உருவாக்கும். அது என்னவெனில், சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்கள் யாருமே இனப்பிரச்சினை தொடர்பில் தமிழ் மக்களுக்கு வெளிப்படையான வாக்குறுதிகளை வழங்கத் தயாரில்லை என்பதுதான்.

எனவே ஒரு தமிழ்ப்பொது வேட்பாளர் தமிழ் மக்களுக்கு உள்ள பேர வாய்ப்புகளை பரிசோதிக்கலாமோ இல்லையோ, தமிழர்களின் மக்கள் ஆணையை புதுப்பிப்பதற்கு உதவுவார். அவர் தமிழ்மக்களின் உச்சபட்ச கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் வாக்குகளைக் கேட்பார். தேர்தல் என்று வந்தால் அது ஒரு ஜனநாயகக் கொண்டாட்டம். அங்கே கட்சிகளுக்கு புது ரத்தம் பாய்ச்சப்படும். கட்சித் தொண்டர்கள் உற்சாகமாக இறங்கி வேலை செய்வார்கள். கிராமங்கள்தோறும் கட்சி அலுவலகங்கள் திறக்கப்படும். கிராம மட்டத்தில் கட்சி வலையமைப்புகள் பலப்படுத்தப்படும். ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி எல்லாக் கட்சிகளும் அவ்வாறு உழைக்கும் பொழுது, அது தமிழ் மக்களை ஆகக்கூடிய பட்சம் ஒரு தேசமாகத் திரட்டும்.

ஏற்கனவே கடந்த 15 ஆண்டுகளிலும் நடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தலின் போதும் தமிழ் மக்கள் ராஜபக்சகளுக்கு எதிராகத் திரளாக வாக்களித்து இருக்கிறார்கள்.

07

> ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளர் ரணில், சஜித் உட்பட எல்லா சிங்கள வேட்பாளர்களையும் சவால்களுக்கு உட்படுத்துவார். அவர்களை தமிழர்களை நோக்கி வரச்செய்வார். அல்லது அவர்கள் தமிழர்களுக்கு எதிரான வெளிப்படையான நிலைப்பாட்டை எடுக்கக்கூடிய நிலைமைகளை ஏற்படுத்துவார். அதாவது சிங்கள வேட்பாளர்களை அம்பலப்படுத்துவார். ஆனால் இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக, அவர் தமிழ் மக்களின் ஆகப் பிந்திய மக்கள் ஆணையை வெளிக்கொண்டு வருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காஸாவில் இன அழிப்பு தென்னாபிரிக்கா வழக்கு

அ.நிக்ஸன்

பலஸ்தீன மக்கள் மீது இன அழிப்பு நடைபெறுவதாகவும், அந்தப் பெரும் சர்வதேசக் குற்றத்துக்கு இஸ்ரேலின் அரசினை பொறுப்பு விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் காஸா மீது மேற்கொண்டுள்ள படையெடுப்பை உடனடியாக விலக்கிக்கொள்ளும் ஆணையையும் பிறப்பிக்கவேண்டும் என்றும் கோரி தென்னாபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. இந்த வரலாற்று முக்கியத்துவமான சர்வதேசச் சட்ட நகர்வு சென்ற டிசெம்பர் 29 ஆம் திகதியன்று நடைபெற்றுள்ளது.

எண்பத்து நான்கு பக்கங்கள் நீளமான தென்னாபிரிக்காவின் குற்றப்பத்திரிகை கிடைத்துள்ளதை சர்வதேச நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது மட்டுமல்ல, உடனடி நடவடிக்கை தொடர்பான பகிரங்க இரண்டு நாள் அமர்வுகளை ஜனவரி 11 ஆம் 12 ஆம் திகதிகளில் நடத்தவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

எதிர்பார்த்ததைப் போல் இஸ்ரேல் தனது கடும் எதிர்ப்பை தென்னாபிரிக்கா மீது பொது வெளியில் காட்டியுள்ளது. அமெரிக்காவும் கண்டித்துள்ளதாக இஸ்ரேல் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இருந்தபோதும், சர்வதேச நீதிமன்றில் தனது சார்பான சட்ட நிபுணர்களை அனுப்பி வாதிடவேண்டிய நிலைக்கு இஸ்ரேல் தள்ளப்பட்டுள்ளது.

சர்வதேசத் தளத்தில் தென்னாபிரிக்காவின் இந்தத் துணிகர நடவடிக்கை கவனத்தை ஈர்த்துள்ளது மட்டுமல்ல பெரும் ஆதரவையும் பெற்றுவருகிறது. வேறு நாடுகளும் இந்த நகர்வில் தம்மை இணைத்துக்கொள்ளும் வாய்ப்பும் உள்ளதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இஸ்ரேலுக்கு எதிராக எந்தவிதக் கடும் நடவடிக்கையையும் ஏற்படுத்தவிடாது தடுத்துக்கொண்டிருக்கும் அமெரிக்காவின் சர்வதேச அரசியலுக்கு எதிரான சவாலைத் தனது சர்வதேச சட்ட நகர்வால் தென்னாபிரிக்கா எதிர்கொள்ளத் துணிந்துள்ளமைக்கு மாறியுள்ள உலக ஒழுங்கே காரணமாகிறது.

ஈழத்தமிழர் மீது இதேபோன்று நடத்தப்பட்ட இன அழிப்புப் போருக்கு எதிராக தென்னாபிரிக்காவை நகரவைப்பதில் ஈழத்தமிழரின் மேற்கு சார்ந்த 'செல்லப்பிள்ளை அரசியல்' தவறியுள்ளதா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளை இந்தியாவின் ஈழத்தமிழர் தொடர்பான 'ஓரவஞ்சக அரசியல்'பாதித்துள்ளதா, தென்னாபிரிக்காவின் வெளியுறவுக்கொள்கை இலங்கை ஒற்றையாட்சி அரசைத் தனது நட்புச் சக்தியாக்கும் 'தென்னுலக நலன் சார்ந்த அரசியல்' காரணமாகின்றதா என்ற கேள்விகள் எழுகின்றன.

திட்டமிடப்பட்ட பெரும் இன ஒடுக்குமுறையில் இருந்து அரசியல் விடுதலை பெற்றுத் தனி அரசாக இயங்கி வரும் தென்னாபிரிக்க பலஸ்தீன விவகாரத்தில் கூடுதல் அக்கறை செலுத்துவது பாராட்டுக்குரியது. 2009 இல் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இன அழிப்புத் தொடர்பாக எந்த ஒரு சர்வதேசச் சட்ட நகர்வையும் முன்னெடுக்கத் தென்னாபிரிக்க அரசு இது வரை முன்வரவில்லை. மாறாக, அரசியல் தீர்வு எதுவுமற்ற போலியான நல்லிணக்க அரசியலை நோக்கியே அதன் சார்புநிலை இருந்து வந்துள்ளது. இதை மாற்றுவதற்கு ஈழத்தமிழர்களின் தரப்பு அர்த்தமுள்ள முயற்சிகள் எதையும் மேற்கொள்ளத் தவறியது ஏன் என்ற கேள்வியும் இங்கு முன்வைக்கப்படவேண்டியது.

தென்னாபிரிக்காவின் நோபல் பரிசு பெற்ற ஆயர் டெஸ்மன்ட் டூட்டு போன்றவர்களோடு ஏதோ ஒரு வகையில் உறவை உருவாக்கியிருந்த அருட்தந்தை எஸ்.ஜே. இமானுவல் போன்றோர் இஸ்ரேல் சார்பான அமெரிக்க வழிநடத்தலுக்குப் பலிக்கடாவானது உட்பட்ட பல தொலைநோக்கற்ற தவறுகளை 2009 க்குப் பின்னர் ஈழத்தமிழர்களின் சர்வதேச அணுகுமுறை கைக்கொள்ளத் தவறியுள்ளது வெளிப்படை. ஒரு சிலரை மட்டும் இதற்கான காரணங்களாகக் குற்றம் சுமத்துவதற்குப் பதிலாக சர்வதேச நீதி தொடர்பாக ஈழத்தமிழர்கள் மீண்டும் மீண்டும் தவறாகப் பலியிடப்படுவதற்கான வழிநடத்தல் அல்லது மூலகாரணங்கள் எவை என்று ஆராய்வது எதிர்கால வழிவரைபடத்துக்கு ஆரோக்கியமானது.

ஓர் அரசியற் துன்பியல் வரலாறாகப் புரண்டு ஓடியுள்ள கடந்த பதினான்கு வருடங்களில் தென்னாபிரிக்காவுக்கோ அல்லது வேறு உலக ஒழுங்குகளைச் சிந்திக்கத் தலைப்படும் எந்த ஒரு நாட்டுக்குமோ பயணித்து ஈழத்தமிழர் மீதான இன அழிப்புத் தொடர்பாக தமிழ்த்தேசிய அரசியலில் ஈடுபடும் எவரும் விபரித்துப் பேசியிருக்கவில்லை. 'செல்லப்பிள்ளை அரசியல்' என்ற மனநிலை இதற்குத் தடையாக இருந்துள்ளது.

ஆனால், சிங்கள ஆட்சியாளர் தரப்பில், மஹிந்த ராஜபக்ச இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்த போதுகூட தென்னாபிரிக்காவில் அப்போது அமைச்சராக இருந்த தற்போது ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் சிறில் ரமபோசாவுடன் தந்திரோபாய உறவை நெருக்கமாகப் பேணியிருந்தார். ரமபோசாவும் மஹிந்தவுடன் நெருங்கிய நண்பராக இருந்து கொழும்புக்கு வந்து சென்றிருக்கிறார்.

அப்போதைய தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜாக்கோப் சூமா இலங்கைக்கும் தென் சூடானுக்குமான விசேட தூதராக சிறில் ரமபோசாவை 2014 ஆம் ஆண்டில் நியமித்திருந்தார். அப்போது பொது நலவாயக் கூட்டின் சந்திப்பின் பின்னரான நகர்வாக அது அமைந்திருந்தது. மேற்கு நாடுகளின் ஆதரவோடு நல்லிணக்க அரசியல் தூதராக ரமபோசா செயற்பட்டது மட்டுமல்ல, சிங்களத் தரப்போடும் நல்லுறவை வெளிக்காட்டியிருந்தார். தற்போது அவரே தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாகியுள்ள சூழலில், அவரின் கருத்தில் தாக்கம் ஏற்படுத்த தமிழ்த் தரப்பு கடுமையாக உழைக்கவேண்டியிருக்கும். தற்போது மேற்கோடு அவரது அரசியலுக்கு கணிசமான விரிசல் ஏற்பட்டுள்ளது என்பதும் இங்கே கவனிக்கப்படவேண்டியது. தென்னாபிரிக்காவில் புலம்பெயர்ந்த தமிழர்களைக் கொண்டிருக்கக் கூடிய தமிழர்களால் இது தொடர்பில் இதுவரை எந்த முனைப்பையும் மேற்கொள்ள இயலாமற்போயிருந்தாலும் இனியாவது ஆக்கபூர்வமான நகர்வுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

இன அழிப்பை நுட்பமாக மறுத்து போர்க்குற்றங்களை இரண்டு தரப்புகளும் புரிந்தன என்ற கருத்தியலை மட்டும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் முன்னெடுக்கின்ற அணுகுமுறைக்கு தென்னாபிரிக்கத் தமிழரான நவநீதம்பிள்ளை அம்மையாரே துணைபோயிருந்தார். இலங்கையில் நடைபெற்றது இன அழிப்பு என்ற கருத்தை முன்வைக்கத் தவறிய நவநீதம்பிள்ளை போன்றோரின் கருத்தை மாற்றுவதற்கு தற்போதாவது ஈழத்தமிழர் தரப்பு ஏதேனும் காத்திரமான முயற்சியை மேற்கொண்டுள்ளதா என்றால் இல்லை என்ற பதிலே கிடைக்கிறது.

இவ்வாறான பெரும் தவறுகளை ஈழத்தமிழர் தரப்பு. குறிப்பாக தமிழ்த்தேசிய அரசியலில் ஈடுபடும் கட்சிகளும் புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் ஒரு புறம் இழைத்துக்கொண்டிருக்க. மறுபுறம் உலகத் தமிழர் பேரவை என்ற தனிநபர் குழுக்கள் இதே தென்னாபிரிக்காவுடன் சிங்கப்பூர் தீர்மானத்தில் இருந்து இமாலயத் தீர்மானம் வரை தவறான அரசியலை முன்னெடுத்துள்ளன.

உலக ஒழுங்கில் வேறுபட்ட நலன்களைக் கொண்டிருக்கக் கூடிய ஐரோப்பிய நாடுகள் மட்டுமல்ல அமெரிக்காவும் இதே தென்னாபிரிக்க மாதிரியையே அதுவும் மிகவும் தவறாகத் தமிழர்களுக்கு முன்வைத்துவருகின்றன. அண்மையில் மேற்கு நாடுகளின் தூதரகங்கள் இமாலயத் தீர்மானத்தையும் அதைத் தொடர்ந்த சந்திப்புகளையும் வரவேற்றுக் கருத்து வெளியிட்டமை இதை எடுத்துக்காட்டுகிறது. இந்த நிலை மாறவேண்டுமானால், தென்னாபிரிக்காவில் சில அடிப்படை மாற்றங்களை ஈழத்தமிழர்களின் தரப்புகள் இனியாவது சாதிக்கவேண்டும்.

மிகப் பெரிய தவறுகள் நடக்கும் போது மட்டும் அவற்றை விமர்சித்து விட்டு மேற்கொள்ளவேண்டிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறும் தமிழர் அரசியற் கட்சித் தரப்புகளும் இமாலயத் தவறுகளையே புரிந்துகொண்டிருக்கின்றன.

**ஈழத்தமிழர் மீது நடத்தப்பட்ட இன அழிப்புப் போருக்கு எதிராக தென்னாபிரிக்காவை நகரவைப்பதில் ஈழத்தமிழரின் மேற்கு சார்ந்த 'செல்லப்பிள்ளை அரசியல்' தவறியுள்ளதா அல்லது 'இந்தியச் சார்ப்பு அரசியல்' தடுத்துள்ளதா?**

விளைவாக, இலங்கை ஒற்றையாட்சி அரசின் தேர்தல் அரசியற் சகதிக்குள் மட்டுமே தமிழ் மக்கள் தவிக்கவிடப்பட்டுள்ளார்கள்.

மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஒரு துருவ உலக ஒழுங்கின் எதிர்ப்பாளன் என்ற கோணத்தில் மாத்திரம் சிறில் ரமபோச வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார் என்று கருதாமல் இன அழிப்பு எங்கு நடந்தாலும் அதனை எந்த ஒரு அரசும் கவனத்தில் எடுக்க முடியும் என்பதற்கும் ,சர்வதேச நீதிமன்றம் ஒன்றில் ஒரு அரசுக்கு எதிராக மற்றொரு அரசு வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்பதற்கும், சிறில் ரமபோசவின் தென்னாபிரிக்கா தற்போதைய புவிசார் அரசியல் போட்டிச் சூழலில் மேற்கொண்டுள்ள இஸ்ரேல் மீதான வழக்குத் தாக்கல் நகர்வு ஈழத்தமிழர்களுக்குத் தேவையான சர்வதேச நீதிக்கான சட்டகத்தைப் பலப்படுத்துகின்றது என்பதை ஈழத்தமிழர்கள் இங்கு உற்று நோக்கவேண்டும்.

தமிழ் இன அழிப்பு நடைபெற்றுள்ளது என்று 2013 இல் தமிழ் நாட்டு அரசு சட்டசபையில் பிரேரணை ஒன்றை நிறைவேற்றி யிருந்தது. அப்போது முதலமைச்சராக இருந்த அமரர் செல்வி ஜெயலலிதா பிரேரணையை நிறைவேற்றியிருந்தார். எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க.வும் இதற்கு ஆதரவு வழங்கியிருந்தது.

தற்போது தமிழ் நாட்டில் ஸ்ராலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சியும் ஜெயலலிதா அம்மையார் மேற்கொண்ட துணிகரமான நடவடிக்கைக்கு ஒப்பான, அல்லது அதையும் விஞ்சிய ஒரு நிலைக்குச் செல்லாமல், தேர்தல் வாக்குறுதிகளில் கூட நலிந்துபோகும் நிலையில் ஈழத்தமிழர் தொடர்பான தமிழ்நாட்டின் சர்வேதச முக்கியத்து வத்தை முடக்கிவைத்துள்ளமை ஆழ்ந்த கவலைக்குரியது. தமிழ்நாட்டின் முனைப்பு ஜெயலலிதா அம்மையார் நிறைவேற்றிய தீர்மானத்தின் பாதையில் இருந்துவிடக்கூடாது என்பதற்காக இலங்கையின் பழுத்த இராஜதந்திரியான மிலிந்த மொறகொட போன்றவர்கள் திரைமறைவில் செயற்பட்டுவருகிறார்கள். இதிலே நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதர் எரிக் சொல்கெய்மும் பங்களித்துவருகிறார் என்று பரவலாகக் கருதப்படுகிறது.

இவ்வாறான சூழலில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த முன்னாள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை உள்ளிட்ட தென்னாபிரிக்காவில் உள்ள ஈழத் தமிழ் ஆதரவாளர்களை ஈழத்தமிழர் தரப்பு முறையாக அணுகி இலங்கையில் நடைபெற்ற இன அழிப்பு தொடர்பான விடயங்களைப் பேசுவதற்குரிய சூழலை இனியாவது உருவாக்கவேண்டும். இன அழிப்பை ஒத்துக்கொள்ளாமலும் அதற்குரிய அங்கீகாரத்துடன் நீதிவழங்கப்படாமலும் நல்லிணக்கம் சாத்தியமில்லை என்ற கருத்தியல் ஆழமாகப் பேசப்படவேண்டும். ஈழத்தமிழர்களுக்கு என்று ஒரு வெளியுறவுக் கொள்கை வகுக்கப்படவேண்டும் என்று பேசிக் கொண்டிருக்கும் தமிழ் ஆய்வாளர்கள் சிலர் இந்த விடயம் தொடர்பாக மேலும் ஆராய்ந்து தென்னாபிரிக்க அரசை எவ்வாறு அணுகுவது என்பது தொடர்பான விபரங்களைப் பகிரங்கமாகப் பேச வேண்டும். 2009 இல் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் நடந்த அதே இன அழிப்புப் போர்தான் இன்று காஸாவிலும் நடக்கிறது. ஆகவே துணிவோடு செயலில் இறங்கவேண்டும் என்பதை தென்னாபிரிக்கா, இஸ்ரேல் அரசுக்கு எதிராகச் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதை வலுவான முன்னுதாரணமாக எடுக்கவேண்டும்.

மியான்மரில் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக நடந்து கொண்டிருப்பது இன அழிப்புத்தான் என்று சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெறுகின்றது. ஆபிரிக்க நாடு ஒன்றுதான் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறது. இதை மியான்மர் அரசு கடுமையாக எதிர்த்திருந்தாலும் அந்த வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

ஆகவே சர்வதேச நீதிமன்றத்தில் ஓர் அரசு இன்னோர் அரசுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்ற விதிகளுக்கு அமைவாக தற்போது ஈழத்தமிழர் விடயத்தில் சாதகமான போக்கை வெளிப்படுத்தும் கனேடிய அரசுக்கு அங்குள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மேலும் பல வியூகங்களை வகுத்து ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என்பதை கனேடிய அரசின் வெளியுறவுக் கொள்கையில் சேர்ப்பதற்குரிய அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும். சர்வதேச நீதிமன்று என்பது வேறு, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்று என்பது வேறு. சர்வதேச நீதிமன்றில் இன அழிப்புத் தொடர்பான அரச பொறுப்பு விசாரிக்கப்படும். ஆனால், குற்றவியல் நீதிமன்றில் தனிமனிதர்களின் குற்றப்பொறுப்பு மட்டுமே விசாரிக்கப்படும்.

உக்ரைன் அரசுக்கு எதிரான போர்ச்சூழலில் சிறுவர்கள் வலிந்து இடமாற்றப்பட்டதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டை ஒருபக்கச் சார்பாகக் கையாண்டு புடினுக்கு எதிராகச் சர்வதேச நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது. சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் பிடிவிறாந்து இருப்பதால் கடந்த ஓகஸ்ட் மாதம் தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற பிறிக்ஸ் மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பங்குபற்ற முடியாதென அமெரிக்கா போன்ற மேற்கு மற்றும் ஐரேப்பிய நாடுகள் கடுமையாகக் கண்டித்திருந்தன. ஆனாலும் புடினை மாநாட்டில் பங்குபற்ற தென்னாபிரிக்கா வருமாறு அழைப்பேன் என்று ஜனாதிபதி சிறில் ரமபோச சவால் விடுத்திருந்தார். இருந்தாலும் சர்வதேசத்தின் கடும் அழுத்தங்களினால் இறுதியில் ரஷ்ய ஜனாதிபதிக்குப் பதிலாக வெளியுறவு அமைச்சர் லவ்ரோவ் பிறிக்ஸ் மாநாட்டில் கலந்துகொண்டார்.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்றுக் கொள்ளும் சர்வதேச உடன்படிக்கையில், ரஷ்யா கைச்சாத்திடவில்லை. ஆனால் உக்ரைன் கைச்சாத்திட்டுள்ளது. குற்றவியல் நீதிமன்றத்தின் பிடிவிறாந்துக்கு ஏற்ப பு டின் அந்த நீதிமன்றத்தை ஏற்றுக்கொண்ட, எந்த ஒரு நாட்டுக்கும் பயணிக்க இயலாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றின் பிடிவிறாந்து அரசியலுக்கு எதிரான ஒரு சர்வதேச நகர்வை ரமபோசாவின் தென்னாபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றின் ஊடாகப் பயன்படுத்தியுள்ளது என்பது மாறிவரும் உலக ஒழுங்கு ஏற்படுத்தியுள்ள வாய்ப்புகளை எடுத்தியம்புவதாக அமைந்துள்ளது. இனியாவது சர்வதேச நீதியையும் சர்வதேச அரசியலையும் சரியாகக் கையாள ஈழத்தமிழர்களும் தமிழ்நாடும் உலகளாவிய தமிழர்களும் காத்திரமான நகர்வுகளை முன்னெடுக்கவேண்டும்.

பழைய கருத்தியலில் பயணிக்கும் கருத்துருவாக்கிகளும் புதிய அறிவைப் பெற்றுக்கொண்டு இதற்குப் பங்களிக்கவேண்டும். அமெரிக்காவுக்குப் பின்னாலும், இந்தியாவுக்குப் பின்னாலும், தனித் தனியாகவும் கூட்டாகவும் செல்லப்பிள்ளை அரசியல் மேற்கொள்வதை விடுத்து தற்சார்பு நிலையிலேயே ஈழத்தமிழர்களின் நகர்வுகள் இனிமேல் அமையவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு;

## சிறைத்தண்டனையிலிருந்து விலக்களிக்கும் நவீன துருப்புச்சீட்டு?











**யஸ்மின் சூக்கா**
(நிறைவேற்றுப் பணிப்பாளர், உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்றிட்டம்)

**பிரான்ஸிஸ் கரிசன்**
( இயக்குநர், உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்றிட்டம்)

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கான சட்ட வரைவு ஒன்றைச் சிறிலங்கா வெளியிட்டுள்ளது. இந்தச் சட்டமூலமானது சர்வதேச சமூகத்துக்கான பல எதிர்பார்ப்புகளை நிவர்த்திசெய்வதாகத் தோன்றினாலும்கூட, அதனை நெருக்கமாகப் பார்க்கும் போது அதிலுள்ள ஆழமான குறைபாடுகளும், பெரும் குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கு நீதிவழங்காமல் துரோகம் செய்வதையும் பார்க்கமுடிகின்றது. இது ஒருபுறமிருக்க, வன்முறை நிகழ்ந்த நாட்டின் வரலாறு தொடர்பான உண்மையை அறிந்துகொள்வது தொடர்பில் அரசியல் விருப்பம் உள்ளதா என்பதும் கேள்விக்குறியே.

### ஆதாரங்கள்

ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள எந்தவொரு ஆதாரமும், நீதிமன்றத்திலோ அல்லது எந்தவொரு சட்ட நடவடிக்கைகளுக்கோ சமர்ப்பிக்கப்படமாட்டாது (பந்தி 48). பெருங் குற்றங்களை இழைத்தவர்களை நேரில் கண்ட சாட்சிகள் அடையாளம் காட்டமுடியும் அல்லது ஆணைக்குழுவின் முன்னால் தனிப்பட்டவர்கள் குற்றங்களை இழைத்ததை ஒத்துக் கொள்ள முடியும் ஆனால், குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள், அவர்களது குற்றங்கள் வெளிப்படுத்தப்பட்டாலும், தண்டனைகளிலிருந்து விலகியிருப்பார்கள். புறச் சூழ்நிலைகள் வேண்டும்போதிலும்கூட, அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுப்பதை இவை சாத்தியமற்றதாக்கும். அதாவது சட்டமியற்றாமலேயே ஒரு பொதுமன்னிப்பு ஏற்பாடாக அமையும்.

சட்டமூலத்தின்படி, "பாரதூரமான குற்றச் செயலை சம்பந்தப்பட்ட சட்ட அமுலாக்க அல்லது வழக்குத்தொடுக்கும் அதிகாரிகளிடம் முறையிடுவதற்கான உரிமை" பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ளது (பந்தி 23). ஆனால் ஆணைக்குழுவிடம் ஆதாரங்களைச் சமர்ப்பிக்க முடியாது (பந்தி 48) என்னும் சட்ட வரைவின் பந்தியுடன் முரண்பட்டு நிற்கின்றது. ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும் தகவல்கள் குற்றமிழைத்தவர்களுக்க எதிரான ஆதாரங்களாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாவிட்டால் இந்த உரிமையின் பயன்பாடுதான் என்ன? இது முட்டாள்தனமானதும் அபத்தமானதுமாகும். வழக்குகளை சட்டமா அதிபர் அலுவலகத்துக்குப் பரிந்துரைகள் செய்யலாம் என்று இந்தச்சட்டவரைவு கூறுகின்றது. இது சிறிலங்காவிலுள்ள அனைவருக்கும் தெரிந்தது போன்று, நல முரண்களைக் கொண்டுள்ளது காரணம், அரசாங்கத்துக்கும் பாதுகாப்புப் படைகளுக்குமுரிய வழக்குரைஞராகவும் (சுயாதீனமற்ற) வழக்குத்தொடுநர் அதிகார அமைப்பாகவும் இவ்வலுவலகமே செயற்படுகின்றது . கடந்த காலங்களில் நடந்த பாரதூரமான மனித உரிமை மீறல்களில் சட்ட அமுலாக்க அமைப்புகள் உடந்தையாக இருந்து செயற்பட்டதை வைத்துப் பார்க்கையில், அவர்களும் சமரசம் செய்துள்ளது வெளிப்படையே. கடந்த பல தசாப்தங்களாக தீர்வுகளைப் பெற்றுத்தர முடியாத அதே கட்டமைப்புகளே இப்போதும்விசாரணைகளுக்கும் சட்டநடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருக்கப் போகின்றன என்பது வேதனையானதே. இதனால்தான், பாதுகாப்புப் படையிலுள்ள எவரும் அல்லது அவர்களது சகாக்களோ குற்றவாளியாக ஏற்றுக்கொள்ளப்படுவதோ அவர்களுக்குரிய தண்டனை வழங்கப்படுவதோ சாத்தியமற்றதாகவே தோன்றுகின்றது. கலப்பு நீதிமன்றங்களை அமைக்கும் திட்டத்தை சிறிலங்கா அரசாங்கம் நீண்ட காலத்துக்கு முன்னரே நிராகரித்தது மாறாக சர்வதேசக் குற்றங்களையோ அல்லது அதிகாரப் படிமுறைப் பொறுப்பினையோ ஏற்றுக் கொள்ளாத, சிறிலங்காவின் குற்றவியல் நீதிமன்றங்களின் கீழேயே சட்டமா அதிபர் அலுவலகமும் நீதித்துறையும் செயற்படும் என்று தெரிவித்துள்ளது.

ஒருவேளையில் புதிய கீழ்நிலைப் படைவீரர் ஒருவர் கொலைக்குற்றச்சாட்டுக்கு ஆளாகி குற்றவாளியாக ஆக்கப்படலாம் ஆனால் ஜெனரலோ அல்லது அரசியல்வாதியோ எழுந்தமானமாக தடுத்துவைக்கும்படி கட்டளையிட்டமைக்காக, பொதுமக்களுக்கு அத்தியாவசிய உணவும் மருந்தும் போகாமல் தடுத்தமைக்காக, சித்திரவதை முகாம்களுக்குப் பொறுப்பாக இருந்தமைக்காக, அவருக்குக் கீழிருந்த படைவீரர்கள் பாலியல் வன்புணர்வு செய்து படுகொலை செய்வதை அனுமதித்தமைக்காக, அல்லது அவர்களது பொறுப்பிலிருந்து காணாமல் போன தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கேட்காமல் விட்டமைக்காக பொறுப்புக்கூற வைக்கப்படமாட்டார்.

நடந்துகொண்டிருக்கும் அல்லது எதிர்கால சட்ட நடவடிக்கைகளுக்கு ஊறுவிளைவிக்கக் கூடிய ஆபத்து உள்ள இடங்கள் (பந்தி 7(4) (க) உள்ளிட்ட பலநேரங்களில் இவ்வாணைக் குழு பூட்டிய அறைகளுக்குள் பல அமர்வுகளை நடத்தலாம். இது [illegible]னர் சம்பந்தப்பட்ட தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழக்குகளை உள்ளடக்காமல் விடுமா? காணாமற் போனவர்கள் தொடர்பான எந்தவொரு விசாரணையையும் ஒத்திவைக்குமாறு கோருவதற்கான உரிமையினை 49 ஆவது பந்தி காணாமற் போன ஆள்கள் தொடர்பான அலுவலகத்துக்கு வழங்குகின்றது. இது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நடைபெற்றுவரும் வழக்குகளை இல்லாமல் ஆக்கிவிடும்.

### நியமனங்கள்

இவ்வாணைக்குழுவுக்கான வேட்பாளர்கள் அரசியல்யாப்புச் சபையால் முன்கூட்டியே தெரிந்தெடுக்கப்படுவார்கள். ஆனால், இந்த அமைப்பானது நிறைவேற்று அதிகாரம் கொண்டவர்களிடமிருந்த சுதந்திரமாகச் செயற்படமுடியுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை. அத்துடன், இதர பல நாடுகளைப் போலவே உறுப்பினர் தெரிவானது நேர்காணல் காணப்பட்டு, வெளிப்படையாகச் சரிபார்க்கப்படும், வெளிப்படையான செயல் முறையாக இருக்குமா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. மேலும், இவ்வாணைக்குழுவில் மனித உரிமை மீறல்கள், மோசடி மற்றும் ஊழல் ஆகியவற்றில் ஈடுபட்டவர்கள் நியமிக்கப்படுவதை தானாகவே விலக்களிப்புச் செய்யவேண்டும், ஆனால் இச்சட்ட வரைபில் இது துல்லியமாகக் கூறப்படவில்லை.

ஜனாதிபதிக்கு ஆலோசனைக் குழுவை நியமிக்கலாம் என்றும் இச் சட்டவரைபில் கூறப்பட்டுள்ளது, ஆனால், இந்த ஆணைக்குழு தொடர்பான விடயத்தில் என்ன ஆலோசனை என்பதை இவ்வரைபில் கூறவில்லை. (பந்தி 32). வெறுமனே, ஆணைக்குழுவிற்கு மட்டுமன்றி, குழுக்களுக்கும் செயலகத்துக்கும் ஆலோசனை வழங்கும் என்றுதான் கூறுகின்றது. வழங்கப்படும் ஆலோசனை உதாசீனப் படுத்தப்பட்டு, அதிகாரப்போட்டி நிலவுமாக இருந்தால் இது முரண்பாடுகளை ஏற்படுத்தும். மேலும் அதிகாரஅமைப்பைப் பாதுகாப்பதற்காக ஒரு பாதுகாப்பு வலயமாக இவ்வாலோசனை அமைப்புகளில் மறுதலிப்பாளர்களையும் நியமிக்க முடியும். மேலும், ஆணைக் குழு உண்மையைக் கண்டறியும்போது, [illegible] நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக ஒரு கண்காணிப்புக்குழு உருவாக்கப்படும் (பந்தி 39). இவ்வமைப்பின் ஒரு உறுப்பினராக பாதுகாப்புச் செயலர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர் உள்ளடக்கப்படுவார் போரின் இறுதிக்கட்டத்தில் 53 ஆவது டிவிசன் தளபதியாகச் செயற்பட்டவரும், போர்க்குற்றங்களில் ஈடுபட்டார் என்ற குற்றச் சாட்டுகளை எதிர்கொண்டிருப்பவருமான ஜெனரல் கமால் குணரத்தினவே தற்போது இருக்கின்றார் . இன்னுமொரு உறுப்பினராக நிதியமைச்சர் இருப்பார். தற்போது ஜனாதிபதியே நிதியமைச்சராகவும் இருக்கின்றார் இவர் 1989 பட்டலந்த சித்திரவதையில் ஈடுபட்டிருந்தார் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையொன்றில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார் . அப்படியானால் பட்டலந்த அறிக்கை புதிய ஆணைக்குழுவின் கண்டுபிடிப்புகளில் உள்ளடக்கப்படுமா? 11பேர் கொண்ட கண்காணிப்புக்குழுவின் 5 உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள். அதேநேரத்தில் 6 முன்னாள் அதிகாரிகளையும் அவர் மறைமுகமாகக் கட்டுப்படுத்துவார்.

அமைப்புமுறை சார்ந்த இவ்வாணைக்குழுவின் ஆணையானது "அமைப்பு முறையான குற்றங்களை" பார்ப்பதற்கான ஒப்புதலுடன் (பந்தி 12, h, xi) மேலோட்டமாக பரந்தளவிலானதாகத் தோன்றுகின்றது "குற்றங்கள்" என்ற சொற்பதப் பயன்பாடு நேர்மறையானதாக இருந்தாலும், "குற்றச்சாட்டப்பட்ட வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங் களின்" தனிப்பட்ட குற்றவாளிகளையும் இந்தச்சட்டவாக்கம் குறிப்பிடுகின்றது. இது மிகவும் பலவீமான பகுதியாகும். சர்வதேச சமூகத்தைத் திருப்திப் படுத்துவதற்காக, கட்டளைப் பொறுப்பு என்னும் சொற்பதம் பாவிக்கப்பட்டுள்ளது (ஆலோசனை வழங்கியவர்கள், திட்டமிட்ட வர்கள், வழிநடத்தியவர்கள், கட்டளையிட்டவர்கள்) ஆனால், சிறிலங்கா சட்டத்தில் கட்டளைப் பொறுப்பு வழங்கப்படவில்லை என்பதால் இது வேண்டுமென்றே தவறாக வழிநடத்தும் விடயமேயாகும். இந்தக் கொடூரங்களுக்கு உண்மையில் யார் பொறுப்பானவர்கள் என்பதைக் கண்டுபிடிக்கப்போவதாக பொய்யான வாக்குறுதிகளை வழங்கிக்கொண்டு தலைமைகளைப் பாதுகாப்பதற்கென்று உருவாக்கப்பட்ட ஒரு கட்டமைப்பே இதுவாகும்.

(07ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியோ அருள்தாஸ்

# இமாலயப் பிரக



## தமிழர் பேர
## இமாலயத்

**2009** இல் யுத்தம் நிறைவுற்றதைத் தொடர்ந்து, உலகம் முழுவதும் பரவியுள்ள ஈழத்தமிழர்கள் தமது அடையாளத்துடன், அதற்கு அடிப்படையாகக் காணப்படும் அரசியலைத் தழுவிக்கொள்கின்றமை அதிகரித்து வருகின்றது. வடக்கு கிழக்கைச் சேர்ந்த கில்மிஷா அண்மையில் தமிழ்நாட்டின் பிரபலத் தொலைக்காட்சி ஒன்றின் பாடல் போட்டித் தொடரில் வெற்றியீட்டினார், அத்துடன் நெட்ஃபிளிக்ஸில் வெற்றிகரமான நிகழ்ச்சி காரணமாக கனடாவைச் சேர்ந்த மைத்ரேயி ராமகிருஷ்ணனின் பெயர் அனைத்து வீடுகளிலும் உச்சரிக்கப்படும் நாமமாக மாறியுள்ளது. ஈழத் தமிழர்கள் எவ்வாறு தமது அடையாளத்தின் உரிமத்துவத்தை எடுத்துக்கொண்டு தமிழர்கள் எதிர்கொள்ளும் அநீதியை சுட்டிக்காட்ட தமக்குரிய இயங்குதளங்களைப் பயன்படுத்துகின்றனர் என்பதற்கான உதாரணங்களாக மேற்குறிப்பிட்ட இருவரும் காணப்படுகின்றனர்.

ஒரு போராட்டமாக முன்னெடுக்கப்படும் தமிழ்த் தேசியவாதம் எதிர்வுகூறத்தக்க எதிர்காலம் வரை செழிப்படைந்து தமிழர்களின் அரசியலில் தொடர்ச்சியான ஆதிக்கத்தைச் செலுத்தும் என எதிர்பார்க்கமுடியும். தமிழ்த் தேசியவாதத்தின் பயணம் எல்லைகள் மற்றும் கண்டங்களைக் கடந்து சர்வதேச நிகழ்ச்சிநிரலுக்குள் இலங்கையைத் தொடர்ச்சியாக நிலைப்படுத்தி வருகின்றது. குறிப்பாக கொடூரக் குற்றங்களுக்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றைச் சூழக் காணப்படும் விவகாரங்கள் தொடர்பாக இந் நிலைப்படுத்தல் அமைந்துள்ளது. ஜெனிவா, வொஷிங்டன், லண்டன் மற்றும் புதுடில்லி போன்ற பல இடங்களில் இடம்பெற்ற பல்வேறு மாநாடுகளில் தீர்க்கப்படவேண்டிய ஒரு பிரச்சினையாக இலங்கை கலந்துரையாடப்படுவதற்கு இது வழிவகுத்துள்ளது. இத்தொடர் செயன்முறைகளில் பங்குபற்றும் முக்கியமான தரப்புகளில் ஒன்றாக தமிழ்த் தேசியவாதிகளும் அமைவது இங்கு குறிப்பிடத்தக்கது. தமிழர்களின் இந்த ஒன்று திரள்வு இவ்விடயம் தொடர்பில் இலங்கை ஒரு மோசமான நிலையை அடைவதற்கு வழிவகுத்தது - நற்பெயரை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டமைக்கு அப்பால் சர்வதேச நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்கும் நிலையும் தோன்றியுள்ளது. பல்வேறு வகைகளில் தொடர்ச்சியான நெருக்கடிகளைச் சந்தித்து வரும் இக்காலகட்டத்தில் அவ்வாறானதொரு சர்வதேச எதிர் நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கு இலங்கை பெரும் விலையொன்றை செலுத்தும் நிலை ஏற்படும். இலங்கையில் நிலவும் முரண்பாட்டை சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக தீவிரமாக கருத்திற்கொள்ள தூண்டிய முக்கியமான விடயங்களுள் ஒன்றாக தமிழ்த் தேசியவாத அரசியல் கொள்கையும் காணப்படுகின்றது. நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான கோரல் அத்துடன் சிங்கள-பௌத்த மேலாதிக்கத்தை நிராகரித்தல் என்பவற்றில் வேரூன்றியதாக இக்கொள்கை அமைந்துள்ளது.

இவ்வாறானதொரு அரசியல் சூழமைவில், 2023இன் ஆரம்பப் பகுதியில் நேபாளத்தின் பௌத்த மத குருக்களுடனான கலந்துரையாடல் ஒன்றில் உலகத் தமிழர் பேரவை (GTF) பங்கேற்றிருந்தது. அது இம்மாதம் இலங்கையில் அதிகம் பிரபல்யப்படுத்தப்பட்ட சுற்றுப்பயணத்தை இந்த அமைப்பு மேற்கொண்டிருந்தது. இச்செயற்பாட்டின் மூலம் உருவாக்கப்பட்ட பிரகடனம் மிகவும் கவனமாக திட்டமிடப்பட்ட புகைப்பட வடிவங்களில் உள்ளடக்கப்பட்டு சிவில் சமூகத்தின் பல்வேறுபட்ட உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகளிடம் கையளிக்கப்பட்டது. இம்முயற்சிகள் தேசியவாதக் கொள்கைகளில் உறுதியான கடப்பாடு கொண்ட, சிங்கள மேலாதிக்கத்தைத் தொடர்ச்சியாக மறுத்து வரும் பரந்த தமிழர் அரசியல் முன்னெடுப்புடன் இணைக்கப்படாதவனவாக அமைந்திருந்தன. இந்த இமாலயப் பிரகடனத்தில் எந்தவித உயர்வான விடயங்களும் காணப்படவில்லை. அது ஒரு வெற்று ஆவணமாகவே உள்ளது. ஒரு புறத்தில், இப்பிரகடனம் சிங்கள மேலாதிக்கத்தை சவாலுக்கு உட்படுத்தவில்லை என்பதுடன் மறுபுறத்தில் யுத்தம் நிறைவுற்றதில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் அரசியலை தரம் தாழ்த்தியதை விட அதிக அளவுக்கு தரம் தாழ்த்தியுள்ளது. பொறுப்புக்கூறல் மற்றும் ஓர் அரசியல் தீர்வுக்கான சர்வதேச உந்து தலை நீர்த்துப் போகச் செய்யும் முனைப்பில் சில பெயரளவிலான செயற்பாட்டாளர்களுடனான ஈடுபாடுகளை தனது பக்க பங்களிப்பாக இலங்கை அரசாங்கம் காண்பிப்பதற்கே இந்தச் செயற்பாடு மீண்டும் ஒரு தடவை உதவப்போகின்றது. பெரும் கொடூரங்களை இழைத்தமைக்காக சர்வதேசம் கோரும் பொறுப்புக்கூறல் மற்றும் நீதி என்பவற்றை புறந்தள்ளுவதற்கு அவ்விடயங்கள் நல்லிணக்கத்துக்குப் பாதகமாக அமையும் என்பது அரசாங்கம் தொடர்ச்சியாகக் கையிலெடுக்கும் வாதமாகும். அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றில் இருந்து அரசாங்கம் மேலும் பின்வாங்குவதற்கான ஒரு வாய்ப்பை உலகத் தமிழர் பேரவை வழங்கியுள்ளது.

முரண்பாட்டுக்கான அடிப்படைக் காரணங்கள், தமிழர்களின் மனக்குறைகளின் நியாயத்தன்மை என்பன இலங்கைக்கு வெளியே மாற்றுக் கருத்துகளுக்கு அப்பாற்பட்டனவாக காணப்படுகின்றன. சுருக்கமாகக் கூறுவதாயின், 1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த பின்னர் சிங்களவர்களை முன்னுரிமைப்படுத்தும் நாட்டின் உருவாக்கம் ஒன்றை பெரும்பான்மைச் சிங்களச் சமூகம் முன்னெடுத்து வருகின்றது. இதன்போது, தமிழர்கள், மலையகத்தமிழர்கள், முஸ்லிம்கள் போன்ற ஏனைய குழுக்கள் பாரபட்சங்களை எதிர்கொள்கின்றன. ஈழத்தமிழர்களின் அரசியல் தலைமைத்துவம் தனது மக்களின் ஆதரவுடன் சிங்கள - பௌத்த இனவாத நாட்டின் உறுதியான உருவாக்கத்தைத் தடுத்து வந்தது. இது ஈழத் தமிழர்கள் என்ற உறுதியான தேசிய மற்றும் அரசியல் அடையாளத்தை வளர்த்தெடுக்க உதவியதுடன் இவ்வடையாளத்தின் இருப்பு மாத்திரமே, முனைப்புடன் உருவாக்கப்பட்டு வந்த சிங்கள - பௌத்த இனவாதத்தின் மிகப்பெரிய தடையாக அமைந்தது. 1956ஆம் ஆண்டின் தனிச் சிங்களச் சட்டம் தொடக்கம் கடந்த நவம்பர் மாதம் மாவீரர் தின நிகழ்வுகளை பொலிஸாரைக் கொண்டு தடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய ஆணை வரை, தமிழர்களை அடக்கியாள்வதற்கான இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஒரு நீண்ட வரலாறு உள்ளது. இம்முனைப்புகள் வன்முறைகளுடன் இணைந்தனவாகக் காணப்படுவது வழமையாகும்.

"இலங்கை ஒரு சிங்கள - பௌத்த நாடு. அந்நாட்டுக்குள் சிறுபான்மையினர் சிங்கள- பௌத்த மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும், தேவையற்ற விடயங்களைக் கோரக் கூடாது" என்ற சரத் பொன்சேகாவின் கூற்று இந்த மனப்பாங்கை சிறப்பாகப் பிரதி பலிக்கின்றது. இன்று வரை - மேலாதிக்கம் மற்றும் அதற்கான எதிர்ப்பு - என்ற இந்த நிலை இலங்கையில் காணப்படும் அடிப்படை முரண்பாடாக அமைந்துள்ளது. இலங்கையின் ஸ்திரத்தன்மை மற்றும் சகவாழ்வு என்பவற்றைத் தொடர்ச்சியாகத் தடுத்து வரும் விடயமாக இதுவே அமைந்துள்ளது. இவ்விடயத்தை ஒரு பரந்த பார்வையில் நோக்கும் வேளை, தற்போதைய நிலைக்கு மூன்று எதிர்காலங்கள் காணப்படுகின்றன. ஒன்று, பல தேசிய இனங்கள் தமது ஒட்டு மொத்த அபிலாஷைகளை ஏனையோரின் உரிமைகளைப் பாதிக்காத வகையில் நிறைவேற்றிக் கொள்ளும் ஒரு பன்மைத்துவ தேசமாக இலங்கை வளர்ச்சியடைதல். சுதந்திரம் அடைந்ததில் இருந்து தமிழர்கள் அடைவதற்கு கனவு காணும் விருப்பத் தெரிவாக இதுவே அமைந்துள்ளது.

இரண்டாவது, பெரும் கொடூரங்களுக்கு பொறுப்புக்கூறல் அத்துடன் அரசியல் தீர்வு இல்லாத, தற்போதைய நிலை தொடர்ந்து நிலவுதல். சிங்கள மேலாதிக்கம் அத்துடன் அதன் மீதான தமிழர்களின் எதிர்ப்புத் தொடர்தல், அது பதற்ற நிலையையும், ஸ்திரமற்ற தன்மையையும் மேலும் அதிகரிக்கும்.

மூன்றாவது, சிங்கள - பௌத்தத்தின் மேலாண்மை மற்றும் கொடூரக் குற்றங்களுக்கு இலங்கையை தண்டனைகளில் இருந்து விடுவித்தலை, தமிழர்கள் ஏற்றுக்கொண்டு

> இமாலயப் பிரகடனத்தில் இமாலய விடயங்கள் எவையும் இல்லை. இது நல்லாட்சி அரசாங்கத்துடனான ஈடுபாடு மற்றும் சில தமிழ் உயர்குடிகளா சிங்கள - பௌத்த மேலாதிக்கத்துக்கு சவாலாகாத வகையில் தமது கோரிக்கைகளைத் தாழ்த்துவதன் மூலம் புன்னகை புரியும் பௌத்த மதகுருமார் மற்றும் சிங்கள அரசியல்வாதிகள் இலகுவாக புகைப்படங்களுக்கு காட்சியளிக்க வைக்க உதவிய ஒரு முயற்சி மட்டுமேயாகும்.

ஏதோ ஒரு வகையில் அமைந்த தீர்வை ஏற்றுக்கொள்ளல். இதன்மூலம் தமிழர்கள் சகித்துக் கொள்ளப்படுவதுடன் சிங்கள பேரினவாதத்தின் நலன்களைப் பேணி நடந்து கொள்ளும் நிலை ஏற்படும். மேலும், பாரபட்சங்கள் தொடர்வதுடன் முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் போன்ற ஏனைய குழுக்கள் மீதான வன்முறைகளும் தொடர்கதையாகும். அனைத்துப் பிரதான சிங்களத் தரப்புகளினதும் அங்கீகாரம் பெறப்பட்ட சிங்கள இலங்கை நாட்டை உருவாக்கும் திட்டம் தடையின்றி முன்கொண்டு செல்லப்படும்.



தற்போதைய சூழமைவு நிலைத்திருக்க முடியாதது என்பதுடன் அது ஒரு கலகத்துக்கு வழிவகுக்கும் என்பதை மிகவும் நியாயத்தன்மை கொண்ட மக்கள் புரிந்துகொள்வர். எனினும், தற்போதைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனம்:



# பேரவையின் ...த் தந்திரம்

சூழ்நிலைகளைக் கருத்திற் கொள்ளும் வேளை, இந்நிலை நீடிக்கும் சாத்தியமே காணப்படுகின்றது. மேற்குறிப்பிடப்பட்ட நிலைகளில் முதலாவது தெரிவு நாட்டில் உள்ள அனைவருக்குமே நன்மையானது என்பதால் அதற்கு முயற்சிப்பதே சிறந்தது. எனினும் சர்வதேச சமூகத்தின் சிறு பகுதியும் உலகத் தமிழர் பேரவை மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமை[illegible]பின் தலைவர்கள் போன்ற சில தமிழ்த் தரப்புகள் மூன்ற[illegible] [illegible]தரிவே மிகவும் "யதார்த்தமான" தெரிவு என சில கால[illegible] [illegible]ன்னர் அது முதலாவது தெரிவுக்கு ஒத்ததாக மார[illegible] [illegible]ம் என்ற எதிர்பார்ப்புடன் பரப்புரை செய்து வருகின்[illegible]ர். எனினும், தமிழர்கள் சிங்கள பௌத்த மேலாண்ன[illegible]ய ஏற்றுக்கொள்ளல், இரண்டாம் தரப் பிரஜைகள் [illegible]ற நிலையை விரும்பி ஏற்றுக்கொள்ளல் அத்துடன் 198[illegible]ல் லது 2009 இல் தாம் எதிர்கொண்ட அவலங்களை [illegible] தற்போதைய நிலை ஒன்றும் மோசமானது அல்ல என்ற [illegible]ன்றி யுணர்வுடன் இழைக்கப்பட்ட கொடூரங்களை மறந்து விடல் என்பன தெரிவு மூன்றின் தேவைப்பாடாக உள்ளது. தமிழ் மக்களின் பெரும் பகுதியினருக்கு, குறிப்பாக தென்னிலங்கையில் வாழும் தமிழர்களுக்கு, பெரும்பான்மையினரின் விருப்பங்களுக்கு ஏற்ப தமது வாழ்வை மாற்றியமைத்தவர்களுக்கு அவர்களின் தற்போதைய இருப்பு ஒரு யதார்த்தமாக ஏற்கனவே மாறி விட்டது. வடக்கு - கிழக்கில் இடம்பெறும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும், நினைவேந்தல்களையும் அடக்கும் அரசின் ஒடுக்குமுறைக்கு அப்பிரதேசங்களில் ஓரளவு எதிர்ப்புக் காணப்பட்டாலும், அரசுக்கு விருப்பமற்ற விடயங்களைத் தவிர்ப்பது சிறந்தது என்ற கருத்து தமிழர் தாயகத்துக்கு வெளியே வசிப்பவர்களிடையே வலுப்பெற்று வருகின்றது. தெற்கில் வாழும் ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் தெற்கை தமது தாயகமாக எண்ணுவதில்லை, எனவே அங்கு அரசை எதிர்க்கும் அபாயத்தை அவர்கள் தவிர்க்க முனைகின்றனர். 1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கலவரத்தின் போது கொழும்பில் இருந்த தமிழர்களின் பெரும்பான்மையான வர்த்தக நிலையங்கள் இலக்கு வைத்து தகர்க்கப்பட்டமை, கொழும்பில் தமது வர்த்தக நிலையங்கள் தப்பிப் பிழைப்பதற்கு அவர்கள் சிறிய மட்டத்திலாவது வடக்கு கிழக்குக்கு வெளியே இரண்டாம் தரப் பிரஜைகள் என்ற அந்தஸ்தை சகிக்கும் நிலைக்கு அவர்களைத் தள்ளியுள்ளது. ஈழத்தமிழர்கள் இலங்கை அரசுடன் துஷ்பிரயோகம் மிக்க உறவுடனேயே தமது வாழ்வைக் கொண்டு செல்லுகின்றனர். இழைக்கப்பட்ட அட்டூழியங்களுக்கான நீதி மற்றும் இலங்கையை மீள்கட்டமைப்பாக்கம் செய்தல் என்பனவே அவர்களுக்கு தேவையான நிவாரணமாக[illegible]து. சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தினால் தமிழர்களின் தே[illegible]யம் வன்முறைரீதியாகச் சிதைக்கப்பட்ட இலங்கையில் தமிழ்த் தேசியவாதமே சிங்கள - பௌத்த நிகழ்ச்சிநிரலை முன்கொண்டு செல்ல காணப்படும் தடைக்கல்லாகும்.

ஓர் உரையாடலை நடத்துவது பிரச்சினைக்குரிய விடயம் அல்ல என்பது தெளிவான விடயமாகும். அரசியல் கட்சிகள், சிவில் சமூகம், அத்துடன் அனைத்து மதங்களின் மத குருக்கள் போன்ற பல்வேறுபட்ட தரப்புகளுடன் உரையாடல்கள் இடம்பெற வேண்டும் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துகளும் இல்லை. எனினும், உரையாடல்கள் அர்த்தபூர்வமானவையாக இருக்கவேண்டும், வெறுமனே ஒத்தூதுபவையாக அவை அமைந்திருக்கக் கூடாது. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் 2000 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுகள் உள்ளடங்கலாக அர்த்தபூர்வமான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான தமது விருப்பற்ற நிலையை மூடி மறைக்க பௌத்த மத குருக்களின் பிடிவாதத்தை ஒரு சாக்காக பொதுவெளியில் அரங்கேற்றி வந்துள்ளன. சிங்கள தேசியவாத அரசியலே பௌத்த மதகுருக்களை இந்த நிலைக்கு உயர்த்தியது. தமிழர்களின் கோரிக்கை உள்ளடங்கலாக சிங்கள பௌத்த மேலாதிக்கம் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களில் இருந்து மீள்வதற்காக களமிறக்கப்படும் வசதியான கருவியாக பௌத்த மத குருக்கள் காணப்படுகின்றனர். மேலும், இந்தியா மற்றும் தமிழ்நாடு என்பவற்றுடனான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் இணைப்பு என்பவற்றை அடைந்து கொள்ளவும் அவர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். இம்மதகுருக்கள் அடிப்படையில் அரசியல்மயப்படுத்தப்பட்டு சிங்கள அரசியல்வாதிகளின் நலன்களுக்காக வசதிக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். எனவே, இலங்கை அரசாங்கத்தின் அரசியல் விருப்பு அற்ற நிலையில் இவ்வாறான முன்னெடுப்புகள் வெறும் கண் துடைப்பாகவே அமையும். இதுவே உலகத் தமிழர் பேரவை மேற்கொண்ட முயற்சிகளின் மையமாக அமைந்துள்ளது. ஆகக் குறைந்த

உலகத் தமிழர் பேரவை மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (அத்துடன் சில சர்வதேச சமூக உறுப்பினர்கள்) குறைந்த எதிர்ப்பு மிக்க வழியை விரும்புவது புலப்பட்ட போதும், அடிபணிவதை தமிழர்கள் விருப்புடன் தெரிவு செய்வர் என எண்ணுவது மனச்சாட்சியற்ற எதிர்பார்ப்பாகும். பன்மைத்துவம் மிக்க இலங்கை என்பது சாத்தியமான விடயமாகும். எனினும், தமிழர்களின் அரசியல் சக்தியைத் தழுவி அதனை பிரயோகிப்பதற்கான விருப்பு மற்றும் தொலைநோக்கு உலகத் தமிழர் பேரவை மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்திடம் இல்லை என்பதே இங்குள்ள பிரச்சினையாகும்.

தீர்வாக அமையும் கொடூரங்களுக்கான பொறுப்புக்கூறல் எதிர்மறையான விளைவுகளை உருவாக்கும் என்ற அளவுக்கு விடயங்களை தரம் தாழ்த்தும் இவ்வகையான நடவடிக்கைகள் இலங்கையில் மாற்றங்கள் நிகழும் என்பதற்கான சாத்தியங்களுக்கு குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளாகவே நோக்கப்பட வேண்டியுள்ளது. மேலும், இவ்வகை நடவடிக்கைகள் இனவாத அரசாங்கம் ஒன்றின் தோற்றத்துக்கு வழிகோலும். கொடூரக் குற்றங்களுக்கு பொறுப்பானவர்களாக தீவிரமாகக் குற்றம் சாட்டப்படும் மஹிந்த ராஜபக்ச மற்றும் சந்திரிகா குமாரதுங்க போன்றோருடன் இணைந்து தோற்றமளிப்பதன் மூலம், யுத்தத்தில் தப்பிப் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள், குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு உலகத் தமிழர் பேரவை குந்தகம் விளைவிக்கின்றது. சிங்கள மேலாதிக்கத்துக்கு ஒரு பலமான அச்சுறுத்தலாக தமிழர்கள் காணப்படுகின்றனர் என்பதை நன்கு அறிந்த சிங்கள அரசியல்வாதிகள் சர்வதேச சமூகத்தில் தமிழர்கள் மேற்கொள்ளும் தமிழ்த்தேசிய நடவடிக்கைளை நீர்க்கச் செய்வதற்கு உலகத் தமிழர் பேரவையின் முயற்சிகள் உதவுகின்றன. 2015ஆம் ஆண்டின் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர்பேரவை என்பன கொண்டிருந்த ஈடுபாட்டைப் போன்று, சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்கூறல், நீதி மற்றும் நிலையான அரசியல் தீர்வு என்பவற்றை புறந்தள்ளுவதற்கான உந்துசக்தியை இவ்வகையான பிரகடனங்கள் இலங்கை அரசுக்கு வழங்குகின்றன. ஒரு சமாந்தரமான நல்லிணக்க முயற்சியை நாம் மேற்கொண்டுள்ளோம் என்ற கட்டுக்கதையை சர்வதேசத்துக்கு கூறுவதற்கு இது வாய்ப்பு வழங்குகின்றது. எனினும், இவ்வகையான வாதங்களை எவ்வாறு கையாள்வது என்பதை நன்கு அறிந்த திறமை வாய்ந்த மற்றும் பேச்சாற்றல் மிக்க செயற்பாட்டாளர்களும் தமிழர் தரப்பில் நிறைந்துள்ளனர். வடக்கு-கிழக்கு மற்றும் புலம்பெயர் சமூகம் என்பவற்றில் உள்ள பல்வகைத்தன்மை கொண்ட செயற்பாட்டாளர்கள் இந்த முயற்சிகளை நிராகரித்துள்ளமை இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவ்வகையான ஈடுபாடுகள் ஒன்றும் புதியன அல்ல. இந்த உரையாடல்களில் பங்கேற்றோர் மற்றும் பின்புலத்தில் இருந்து கொண்டு இம்முயற்சிகளை உற்சாகமாகக் கொண்டாடும் இதே நபர்களும், நாடுகளுமே முட்டாள்தனமான எதிர்பார்ப்புடன் ரணில்சிறிசேன நல்லாட்சி இயக்கத்தையும் முன்னிலைப்படுத்தி இருந்தன . இலங்கையின் வரலாறு முழுவதும் தமிழ் உயர் குடிகள் தொடர்ச்சியாக தமிழர் கொள்கைகளைக் கைவிட்டு அதற்கு உபகாரமாக பெரும்பான்மை அரசாங்கங்களிடம் இருந்து சலுகைகளை பெற்று வந்துள்ளனர். அவர்கள் அனைவரும் தோல்வியடைந்தவர்கள். இவ்வகையான உயர்குடிச் செயற்பாட்டாளர்கள் தமது செல்லுபடித்தன்மை மற்றும் அந்தஸ்தை நிலைநிறுத்தப் பாடுபடுபவர்கள். அவர்கள் எந்த அளவுக்கு அரசியல் நிலையை தாழ்த்துகின்றனரோ அந்த அளவுக்கு அமெரிக்கா போன்ற சர்வதேச சக்திகள் மற்றும் இலங்கைக்குள் உள்ள தரப்புகளிடம் இருந்து அங்கீகாரத்தையும் பாராட்டையும் பெறுகின்றனர். யுத்தக் குற்றம் சுமத்தப்பட்ட குற்றவாளிகளான மஹிந்த ராஜபக்ச மற்றும் சந்திரிகா குமாரதுங்க போன்றோருடன் புகைப்படங்களில் தோன்றுவது அவர்களின் பார்வையில் கௌரவத்தின் அடையாளம் மற்றும் அவர்களின் முக்கியத்துவத்துக்கான அங்கீகாரம். எனினும், தமிழர்கள் தமது கோரிக்கைகளை தாழ்த்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இலங்கை அரசாங்கம் அதனை மேலும் தாழ்த்துவதே இங்குள்ள பிரச்சினையாகும். தமிழர்கள் தனி நாடு கோரிய போது, அரசாங்கம் சமஷ்டித் தீர்வு வேண்டும் எனக் கூறியது. தமிழர்கள் சமஷ்டித் தீர்வைக் கோரிய போது, 13 ஆம் திருத்தத்தின் மட்டுப்படுத்தப்பட்ட மாகாண அதிகாரப் பகிர்வுக்கு அப்பால் செல்லமாட்டோம் என அரசாங்கம் கூறியது. தற்போது, ஒரு சில தமிழ்த் தரப்புகள் 13ஆம் திருத்தத்தின் முழுமையான அமுல்படுத்தலை கோரும் வேளை, அரசாங்கம் "13இலும் குறைவான" என்ற ஒரு நலிவான அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசுகின்றது.

உலகத் தமிழர் பேரவை மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (அத்துடன் சில சர்வதேச சமூக உறுப்பினர்கள்) குறைந்த எதிர்ப்பு மிக்க வழியை விரும்புவது புலப்பட்ட போதும், அடிபணிவதை தமிழர்கள் விருப்புடன் தெரிவு செய்வர் என எண்ணுவது மனச்சாட்சியற்ற எதிர்பார்ப்பாகும். பன்மைத்துவம் மிக்க இலங்கை என்பது சாத்தியமான விடயமாகும். எனினும், தமிழர்களின் அரசியல் சக்தியைத் தழுவி அதனை பிரயோகிப்பதற்கான விருப்பு மற்றும் தொலைநோக்கு உலகத் தமிழர் பேரவை மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்திடம் இல்லை என்பதே இங்குள்ள பிரச்சினையாகும். ஏனெனில், அதற்காக இலங்கைக்குள் எழும் எதிர்ப்புகள் மாத்திரமன்றி கடந்த பல வருடங்களாக இலங்கையை ஒரு "முகாமைத்துவம் செய்யக்கூடிய பிரச்சினை" என ஏற்றுக்கொள்ளும் சர்வதேச சமூகத்தின் பிரிவுகளின் எதிர்ப்பினையும் முறியடிக்க வேண்டும். 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசியல் சதி முயற்சி உள்ளடங்கலாக நல்லாட்சிக் கூட்டணி அரசாங்கத்தின் அனைத்து நகர்வுகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் மீண்டும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியது. மீண்டும் ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதற்காகவே நிபந்தனையற்ற ஆதரவு வழங்கப்படுகின்றது என இதற்குக் காரணம் கற்பிக்கப்பட்டபோதும், ஒரு வருடத்தின் பின்னர் ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினர்.

சுருக்கமாகக் கூறுவதாயின், இந்த இமாலயப் பிரகடனத்தில் இமாலய விடயங்கள் எவையும் இல்லை. இது நல்லாட்சி அரசாங்கத்துடனான ஈடுபாடு மற்றும் சில தமிழ் உயர் குடிகள் சிங்கள - பௌத்த மேலாதிக்கத்துக்குச் சவாலாகாத வகையில் தமது கோரிக்கைகளைத் தாழ்த்துவதன் மூலம் புன்னகை புரியும் பௌத்த மதகுருமார் மற்றும் சிங்கள அரசியல்வாதிகள் இலகுவாக புகைப்படங்களுக்கு காட்சியளிக்க வைக்க உதவிய ஒரு முயற்சி மட்டுமேயாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் உலகத் தமிழர் பேரவை அமைப்பின் பேச்சாளர் ஆகியோர் இதனை முன்னொரு போதும் இல்லாத முன்னெடுப்பு எனக் குறிப்பிடுகின்றனர். "இதனை நாம் பல வருடங்களுக்கு முன்னர் மேற்கொண்டிருக்க வேண்டும். உங்களை விட நாம் பல வருடங்கள் பின்தங்கியுள்ளோம்" என்றும் இரா. சம்பந்தன் கூறுகின்றார். இக்கூற்றுகள் முற்று முழுதாக பிழையானவையாகவும் தமிழர்கள் பல வருடங்களாக பேச்சுகளில் மேற்கொண்ட முயற்சிகளை அவமதிப்பதாகவும் அமைந்துள்ளன. யுத்த நிறுத்த காலத்தில் சம்பந்தன் மதகுருக்களை சந்திக்க மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்தமையை மறந்திருக்கக் கூடும். யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் முதல் பண்டா-செல்வா ஒப்பந்தம் வரை, யுத்த நிறுத்தம் முதல் நல்லாட்சி அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கிய நிபந்தனையற்ற ஆதரவு வரை, தமிழர்களின் எதிர்ப்புப் பாதையில் இவ்வாறான முன்னெடுப்புகள் குப்பைகளாகச் சிதறிக் காணப்படுகின்றன - அவை அனைத்தும் இந்த இமாலயப் பிரகடனத்தைவிட முக்கியத்துவம் கொண்டன. தமிழர்களின் பல தசாப்த கால அமைதியான முயற்சிகள் தெற்கினால் உரிய வகையில் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தால், இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும். 1948ஆம் ஆண்டு தொடக்கம், தமிழர்களை விட்டு விட்டு தமக்கிடையே காணப்படும் முரண்பாடுகளை ஏற்படுத்தும் அடிப்படைக் காரணங்களைத் தீர்ப்பதற்கு இதயசுத்தி மிக்க உரையாடலில் ஈடுபடும் அரசியல் விருப்பற்றதாகவே சிங்களப் பெரும்பான்மை காணப்பட்டது. இதுவே இலங்கையில் சமாதானத்துக்கான பெரும் தடையாகக் காணப்படுகின்றது. இந்தப் பிரகடனத்தின் வெறுமையும் இதனையே பறைசாற்றி நிற்கின்றது. இந்த எலி வலையை மலையளவுக்கு பெரிதாக்குவதை தவிர்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வித்துடலும் அலைச்சல்களும்

கே.வி.தவராசா




**1991** ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ம் திகதி கொழும்பு, வெள்ளவத்தைக் கடற்கரை.

கை, கால், உடல் என்பவற்றைச் சுற்றிக் கயிற்றினால் கட்டப்பட்ட சடலமொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டது. இது தமிழீழ விடுதலைப் புலிகளின் உளவுத்துறையைச் சேர்ந்த அகிலன் என்பவரது சடலமென வெள்ளவத்தை பொலிஸாரினால் அடையாளம் காணப்பட்டதோடு தேடப்பட்டு வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியமான உளவாளியெனவும் கூறப்பட்டது. அகிலனின் சடலம் மீட்டகப்பட்டமை பற்றிய விபரங்கள் சகல ஊடகங்களிலும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருந்ததன் மூலம் இதனை அறிந்து கொண்டார் அகிலனின் தாயார். அவர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்து களுபோவில அரச மருத்துவமனையின் பிண அறையில் வைத்து இறந்த உடலை தனது மகன் என அடையாளம் காட்டினார்.

அகிலனின் தந்தை ஏற்கனவே இறந்துவிட்டார். அவர்களுக்கிருந்த ஒற்றை மகனும் சடலமாகக் கிடைத்துள்ளார். தமது ஒரே ஒரு சகோதரனை இறுதியாக ஒரு முறை பார்ப்பதற்காகவும் அவரது ஈமக்கிரியைகளை யாழ்ப்பாணத்தில் நடத்தவும் ஐந்து சகோதரிகளும் ஏனைய குடும்ப அங்கத்தவர்களும் ஆர்வம் கொண்டிருந்தனர். பிணவறையில் வைக்கப்பட்டிருந்த அகிலனின் சடலத்தைத் தன்னிடம் கையளிக்கும்படி அந்தத் தாய் வெள்ளவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கெஞ்சிக் கேட்டும், அவர் சடலத்தைக் கொடுப்பதற்கு மறுப்புத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அந்தத் தாய் என்னிடம் வந்து "எப்படியாவது எனது மகனின் சடலத்தைத் என்னிடம் ஒப்படைக்க வழி செய்து தாருங்கள்" எனக் கண்கலங்கி நின்றார். அவரை ஆசுவாசப்படுத்தி ஆறுதல் வார்த்தைகள் கூறி தெம்பாக இருக்கச் செய்த கௌரி சங்கரி, "உங்கள் மகனின் சடலம் உங்கள் விருப்பப்படி ஈமச் சடங்குகளுக்காகக் கிடைக்கும்" என்றும் உறுதியளித்தார்.

## பொறுப்பதிகாரியின் கபடத்தனம்

இந்தத் தாயாரின் நியாயமான வேண்டுகோளுக்கு அமைய வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சரத் லூகொடவைச் சென்று சந்தித்து , அகிலனின் உடலைப் பாரமெடுக்கத் தாயார் வந்திருப்பதைக் கூறி ஈமக்கிரியைகளைச் செய்வதற்காக உடலைத் தாயாரிடம் ஒப்படைக்கும் படி வேண்டிக்கொண்டேன். அதற்கு சரத் லூகொட "பயங்கரவாதிகளின் இறந்த உடலை உறவினருக்கு கையளிக்க வேண்டிய அவசியமில்லை. அப்படிச் சட்டமுமில்லை. அவசரகால ஒழுங்கு விதியின் பிரகாரம் தேசியப் பாதுகாப்புக்கருதி பொது ஒழுங்கைப் பேணுவதற்காக இறந்த உடலை அரச செலவில் தகனம் செய்தலுக்கோ அல்லது அடக்கம் செய்தலுக்கோ பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கே அதிகாரம் உண்டு அவரது அனுமதியைப் பெற்று இறந்த உடலைத் தகனம் செய்யத் தீர்மானித்துள்ளோம்" என்று பதிலளித்தார்.



தாயாரினதும் சகோதரிகளினதும் பரிதாபகரமான நிலைமையையும் தாயாரின் நியாயமான கோரிக்கையையும் எடுத்துக் கூறியதுடன் "அவசரகாலச் சட்டத்தின் பிரிவு 56 (2)இன்படி தேசியப் பாதுகாப்புக்கோ அல்லது பொது ஒழுங்கைப் பேணுவதற்கோ ஏதேனும் அச்சுறுத்தல் காணப்படாத விடத்து உரிமைகோரும் உறவினர்களிடம் இறந்த உடலை நிபந்தனைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைய ஒப்படைக்க வேண்டும்"என அவசரகால ஒழுங்குவிதியில் கூறப்பட்டுள்ளதையும் தெளிவுபடுத்தினேன்.

"யாழ்ப்பாணத்தில் இறுதிக்கடனை முடிக்க குடும்ப அங்கத்தவர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனால் தேசியப் பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படமாட்டாது. எனவே இந்தத் தாயாரின் நியாயமான வேண்டுகோளை சட்டத்தின்படி மட்டுமின்றி மனிதாபிமானத்தின் அடிப்படையிலாவது நிறைவேற்றுங்கள்" என நான் வேண்டிக் கொண்டதையடுத்து . மறுநாள் முற்பகல் 11 மணிக்கு வந்து தன்னைச் சந்திக்கும்படி அவர் கூறினார். பொலிஸ் நிலையத்திலிருந்து அந்தத் தாயாருடன் வெளியேறுகையில் பிரதான வாசலருகில் எனக்கு நன்கு அறிமுகமான உதவிப் பொலிஸ் பரிசோதகர் "என்ன விடயம் இந்தப் பக்கம்?" என்று வினவினார். நான் விடயத்தைக் கூற, அவர் "நீங்கள் எதிர்பார்பது போல இந்தப் பொறுப்பதிகாரியிடமிருந்து எந்தவிதமான சாதகமான பதிலும் உங்களுக்குக் கிடைக்கப் போவதில்லை. உங்களை இவர் ஏமாற்றிவிடுவார். இவரை நம்ப வேண்டாம். இதற்கு ஒரே ஒரு வழி கொழும்பு பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரைச் சந்தித்து உங்கள் நிலைமையை எடுத்துக் கூறினால் நிச்சயமாக நீங்கள் எதிர்பார்ப்பது நடக்கும்" என்று கூறினார்.

## பிரதிப்பொலிஸ்மா அதிபரின் மனிதாபிமானம்

கொழும்புப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நேர்மையானவரும் மனிதத்தன்மை உள்ளவரும் என்பதை நான் ஏற்கனவே அறிந்திருந்தேன். எனவே அந்தத் தாயின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றவேண்டும் என்ற நோக்கில் மறுநாள் காலை 8.30 மணியளவில் நான் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ.எஸ்.செனவிரத்னவைச் சந்திப்பதற்காக அவரது காரியாலயத்துக்குச் சென்றேன். காலை 9.30 மணியளவில் அவரைச் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. விளக்கமாக சகல விடயங்களையும் கூறி மனிதாபிமான அடிப்படையில் இறந்து போன அகிலனின் உடலைத் தாயாரிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொண்டேன். உடனே அவர் தனது காரியதரிசியிடம் வெள்ளவத்தைப் பொறுப்பதிகாரியை தொலைபேசி மூலம் தன்னைத் தொடர்பு கொள்ளச் சொல்லும்படி கூறினார். அவ்வேளையில் "வெள்ளவத்தைப் பொலிஸ் பொறுப்பதிகாரி உங்களைப் பார்ப்பதற்காக வாசல் கதவருகில் தான் காத்து கொண்டு நிற்கிறார்" என்று காரியதரிசி பதிலளித்தார்.

"அவரை உடனடியாக உள்ளே வரச்சொல்லுங்கள்" என்றார் பிரதிப் பொலிஸ்மா அதிபர். பொறுப்பதிகாரி உள்ளே வந்தார். [illegible] இறந்த தனது மகனின் உடலைப் பாரமெடுக்க தாயார் வந்திருக்கிறார். எனவே உடலை அவரிடம் ஒப்படைத்துவிடுங்கள்" என்றார் பிரதிப் பொலிஸ்மா அதிபர்.

வெள்ளவத்தைப் பொலிஸ் பொறுப்பதிகாரியோ என் முன்னிலையிலேயே, அரசசெலவில் அடக்கம் செய்ய தயாரிக்கப்பட்ட பத்திரங்களைப் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் நீட்டி "அவசரகாலச்சட்டத்தின் 56ஆம் பிரிவின்படி உறவினரிடம் சடலத்தை ஒப்படைக்க வேண்டிய அவசியமில்லை. சடலத்தைத் தாயாரிடம் பாரம் கொடுத்தாலும் அவர்கள் யாழ்பாணத்துக்குக் கொண்டு செல்லத் தீர்மானித்துள்ளனர். அதனால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம். அதனால் அரச செலவில் அடக்கம் செய்வதற்கான உங்களின் அனுமதியைப் பெறவே நான் வந்திருக்கின்றேன்" என்றார். அகிலனின் தாயாரையும் என்னையும் காலை தன்னை வந்து சந்திக்கும்படி எனக்கு நேற்று வாக்குறுதியளித்துவிட்டு, அகிலனின் தாயார் சடலத்தை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்வதைத் தடுக்கும் நோக்கத்துடன் வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி செயற்பட்டமை என்னைத் திகைப்படையவைத்தது.

அவ்வேளையில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொறுப்பதிகாரியைப் பார்த்து "இறந்தவர் புலிகளின் உளவுத் துறையைச் சேர்ந்தவராக இருந்தாலும், உயிரற்ற சடலத்தையே தன்னிடம் ஒப்படைக்கும்படி தாயார் கேட்கின்றார். அவ்வாறு ஒப்படைப்பதால் தேசியப் பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் ஏற்படப்போவதில்லை. எனவே உடனடியாக தாயாரின் வேண்டுகோளை நிறைவேற்றுங்கள்" என்று உத்தரவிட்டுவிட்டு, என்னிடம் "சடலத்தை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கு பொலிஸாரால் எந்தப் பாதுகாப்பும் கொடுக்க முடியாது. ஏனெனில் வவுனியாவுக்கு அப்பால் இந்திய அமைதிப் படை இருக்கின்றது. அநுராதபுரம் வரைக்கும் கொண்டுசெல்வதற்கு மட்டும்தான் பொலிஸார் பொறுப்பு. மிகுதியை நீங்களே பார்த்துக் கொள்ளவேண்டும்" என்றார்.

வவுனியாவுக்கு அப்பால் சடலத்தைக் கொண்டு செல்லும் பொறுப்பை நாமே எடுத்துக்கொண்டோம். அதற்கான சகல ஆயத்தங்களையும் என்னோடு, எனது துணைவியார் கௌரி சங்கரி இந்த விடயத்தில் எடுத்துக்கொண்ட சிரத்தை என்றும் மறக்கவியலாதவொன்று. அனைத்துத் தரப்பினரோடும் தொடர்பை ஏற்படுத்தி சுமுகமாகப் பேசி, கனிஷ்ட சட்டத்தரணிகளை திறம்பட வழிநடத்தி ஏற்பாடுகளை நிறைவாகச் செய்து முடித்தார். அகிலனின் வித்துடல் யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்காக அவரது தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது. யாழ்பாணத்தைச் சடலம் சென்றடையும்வரை கௌரிசங்கரி அனைத்துத் தரப்போடும் தொடர்பிலேயே இருந்தார். பொறுப்பெடுக்கும் ஒரு பணியை திறம்பட முழுமையாக முடிக்கவென அவர்கொள்ளும் அதீத ஆர்வம் பலரையும் திகைப்படையச் செய்யும்.

சட்டம் மனிதனால் மனிதனுக்காக உருவாக்கப்பட்டது மனிதனுக்காக சட்டமேயன்றி சட்டத்துக்காக மனிதனல்ல. சட்டத்தை நடைமுறைப்படுத்தும், சட்டத்தைப் பாதுகாக்கும்,சட்டத்தை நிலைநாட்டும் எத்தனை உயர் அரச அதிகாரிகள் இதனை அறிவார்கள்? அறிந்திருந்தாலும் நடைமுறைப்படுத்துகின்றார்களா? மற்றவர்கள் விடயத்தில் சட்டத்தைப்பற்றியும் நீதி, நியாயம் ,நேர்மையைப் பற்றியும் பேசும் உயர் பதவியிலுள்ள பல அரச அதிகாரிகள்,பொலிஸ் அதிகாரிகள் மட்டுமல்ல மற்றைய பொறுப்பு வாய்ந்த துறைகளில் உயர் பதவி வகிப்பவர்கள் கூட தங்களது சொந்த நலனுக்காக உறவுகளுக்காக அல்லது ஏதோ ஒரு காரணத்துக்காக தாங்கள் கடைப்பிடித்த நேர்மையை ஒரு நொடிப் பொழுதில் தவறவிட்டதை சமூகம் கண்டிருக்கின்றது. இதைத்தான் தனக்கு ஒரு நீதி ஊருக்கு ஒரு நீதி என்று சொல்வர்.

வெள்ளவத்தை பொலிஸ் பொறுப்பதிகாரியான சரத் லூகொட உதவிப் பொலிஸ்மாஅதிபராக பதவி உயர்வு பெறுவதற்கு முன்னர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் (Colombo Cirme Division) பணிப்பாளராக 2005ம்ஆண்டு கடமையாற்றிய காலத்தில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கு, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கொலை முயற்சி வழக்குகள் என்பன இடம்பெற்றிருந்தன. இதன்போது அவரது நேரடிக் கண்காணிப்பின் கீழேயே புலன் விசாரணைகள் நடைபெற்ற பின்னர் சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வெள்ளவத்தை சம்பவத்தின் 25 வருடங்களின் பின்னர் அரச தரப்பு பிரதான சாட்சியான கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சரத் லூகொட என்னால் மேற்கூறப்பட்ட இந்த இரண்டு வழக்குகளிலும் பல மணிநேரம் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இந்த வழக்குக்குகளின் விசாரணை முடிவுற்ற நிலையில் இந்த வழக்குக்களில் சட்டமா அதிபரினால் எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்ட ஆரோக்கிய நாதன், சந்திரபோஸ் இருவரும் மேல் நீதி மன்றால் விடுதலை செய்யப்பட்டனர். தற்பொழுது பொலிஸ் சேவையிலிருந்து பிரதிப் பொலிஸ் மா அதிபர் சரத் லூகொடவும் ஓய்வு பெற்றுள்ளார்.

*(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(03 பக்கத் தொடர்ச்சி)

# உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான....

முன்மொழியப்பட்டுள்ள இந்தச் சட்டவரைவில் போர்க் குற்றங்களின் முக்கியமான சாட்சிகளாக உள்ள, புலம் பெயர்ந்து வாழும் ஒரு மில்லியனுக்கும் அதிகமாக சிறிலங்கா தமிழ்ச் சமூகத்தைப் பற்றி எந்தவொரு விடயமும் குறிப்பிடப்படவில்லை. இவர்களே போருக்குப் பின்னர் பல்வேறு ஐ.நா. அமைப்புகளுக்குச் சாட்சியங்கள் வழங்கியதுடன், (இன்றுவரை) சர்வதேச ரீதியான பொறுப்புக்கூறலுக்கான கோரிக்கை ஏற்படுவதற்கும் காரணமாக இருந்துள்ளார்கள். சிறிலங்கா முழுவதும் அமர்வுகளை மேற்கொள்வதற்கான சட்ட விதி உள்ளது, ஆனால், ஏற்கனவே வெளிநாடுகளிலிருந்து ஆணைக்குழுவுக்குச் சாட்சியமளிப்பதற்கான ஏற்பாடுகளுள் இருந்தமைக்கான உதாரணங்கள் இருக்கின்றபோதிலும், வெளிநாடுகளில் வாழும் பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் வாக்குமூலங்கள் வழங்குவதற்கான எந்தவொரு ஏற்பாடுகளும் இல்லை .

## அதிகாரம்

"அறிக்கைகள், பதிவுகள், ஆவணங்கள் அல்லது தகவல்களை அரசாங்க அதிகாரிகளிடம் அல்லது இதர இடங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கும் தேவைப்பட்டாலும் தேவைப்படும் போதும், ஆவணக்காப்பகங்களிலிருந்து பெற்றுக்கொள்வது உட்பட இவ்வாறான விடயங்களை பெற்றுக்கொள்ள நிர்ப்பந்திப்பதற்குமான அதிகாரத்தினை இவ்வாணைக்குழு கொண்டுள்ளது (பந்தி 13 s) எனினும், கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட ஆணைக்குழுக்களுக்கு வாக்குமூலங்களை வழங்கிய பாதிக்கப்பட்டவர்களிடம் (ஜே.வி.பி. காலத்தில் நடந்த காணாமல் போதல்கள் தொடர்பானவை போன்ற)

அரசாங்க ஆவணக்காப்பகங்களில் பேணப்படுவதும், தாங்கள் கடந்த காலங்களில் வழங்கிய வாக்குமூலங்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய வாய்ப்புகள் இல்லை. பல தசாப்தங்களுக்கு முன்னர் அவர்கள் வழங்கிய சாட்சியங்களிலிருந்து முரண்படாமல் இருப்பதற்கு அவற்றைப் பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். இந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாக்குறுதி சாத்தியமானதாக இருந்தாலும், நடைமுறையில், சிறிலங்காவில் உருவாக்கப்பட்ட பல ஆணைக்குழுக்களும் விசாரணைக்குழுக்களும் உண்மையையோ நீதியையோ பெற்றுக்கொடுக்காதது மட்டுமன்றி, தங்களது சொந்த அறிக்கைகளையேகூட ஒருபோதும் வெளியிட்டதில்லை. மேலும், ஆதாரங்களைச் சமர்ப்பிக்குமாக நீதிமன்றங்கள் விடுத்த அழைப்பாணைகளையே சிறிலங்கா இராணுவம் மறுதலித்துள்ளது. ஆதலால், இந்த ஆணைக்குழுவில் இது எந்தளவுக்கு வித்தியாசமானதாக இருக்கும் என்பது தெரியவில்லை. மேலும், தேடுதல் ஆணையினைப் பெறுவதற்கு நீதிவான் நீதிமன்றம் ஒன்றில் தங்கியிருக்கவேண்டியிருப்பது ஒரு முட்டுக்கட்டையாகவே இருக்கும் என்பதையே இதர இடங்களில் நிகழ்ந்த அனுபவங்கள் காட்டுகின்றன. இவ்வாறே, பந்தி 13 zb "இவ்வாணைக்குழுவின் விசாரணைகள் முன்னேற்றத்துக்குத் தேவைப்படுவதால் சிறிலங்கா காவல்துறையின் உதவியை நாடுவதையும்" ஏதுவாக்குகின்றது. ஆனால், நடைமுறையில் காவல்துறையினர் தம்மைத் தாமே விசாரணை செய்யமாட்டார்கள் என்பது அங்குள்ள ஒவ்வொருவருக்கும் தெரியும்.

இவ்வாணைக்குழுவின் மொழிநடையானது அது ஒரு வரையறுக்கப்பட்ட செயலாகவே இருக்கப்போகின்றது என்பதையே உணர்த்துகின்றது. இவ்வாணைக்குழு "மேலதிக விசாரணைகளுக்கும் தேவையான நடவடிக்கைக்கும் சிறிலங்காவின் சம்பந்தப்பட்ட சட்ட அமுலாக்க அல்லது வழக்குத்தொடுக்கும் அதிகாரிகளைத் தொடர்புகொள்ளலாம்" (பந்தி 13 xd). சந்தேகநபர்கள் மீது வழக்குத்தொடரவோ அல்லது பரிசோதனையிடவோ ஏன் முடியாது?

## ஆணைக்குழுவின் பரிந்துரைகள்

தீங்கு, மூலகாரணங்கள், சீரமைப்புகள் மற்றும் பரிகாரங்கள் போன்ற பல விடயங்களில் ஆணைக்குழு பரிந்துரைகளை மேற்கொள்ளவுள்ளது, ஆனால், குற்றவியல் பொறுப்புக்கூறல்கள் அல்லது வழக்குத் தொடுத்தல்கள் பற்றி எதுவுமில்லை. மேலும், மீளவும் நடைபெறாமல் இருப்பதற்கான பரிந்துரைகள் அது மேற்கொள்ளவேண்டும். இதனைச் செய்வதற்கு, வழக்குத் தொடரும் நோக்கத்துடன், எதிர்கால விசாரணைகள் தொடர்பான பரிந்துரைகளும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

"ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எந்தவொரு நபரதும் குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்பை நிர்ணயிப்பதாக இருந்துவிடக்கூடாது என்பதில் இச்சட்டவரைவு உறுதியாக உள்ளது." (பந்தி 16(1)). இவ்வாணைக்குழுக்கள் நீதித்துறை அமைப்புகள் அல்ல, மாறாக அரைநீதித்துறையே, அத்துடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், வழக்குத்தொடுக்கும் அதிகார அமைப்புக்கு பரிந்துரையே செய்யவேண்டும் என்பதாலும், அடுத்த பந்தியிலுள்ள (16(2)) இச்சரத்து அத்தியாவசியமற்றதாகும்.



எதிர்காலத்தில் சிறிலங்காவில் இடம்பெறக்கூடிய எந்தவொரு சர்வதேச கண்காணிப்பினைத் தவிர்க்கவும், OHCHR இன் சுயாதீன விசாணை நடவடிக்கையை இல்லாமல் செய்வதையும் நோக்காகக்கொண்டு சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்துவதற்காகவே இந்தச்சட்ட வரைவு வடிவமைக்கப்பட்டுள்ளது. சிறிலங்காவில் நடந்த உள்நாட்டுப் போர், மற்றும் ஜே.வி.பி. காலம் ஆகியவற்றில் இழைக்கப்பட்ட பாரதூரமான சர்வதேசக் குற்றங்கள் என்பன நிகழ்வதற்கான கட்டளைப்பொறுப்பை வகித்தவர்கள் மீது எந்தவொரு குற்றவியல் பொறுப்புக் கூறல்களும் இருக்கமாட்டாது என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒரு ஏமாற்று வேலையே இதுவாகும்.



கீர்த்தி விஸ்வகி
தரம் - 1
யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை



ஸ்ரீ.சாகித்தியன்
தரம் - 2
யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



தி.லக்ஸ்மிலன்,
தரம் - 6F
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



கசுவஸ்திகன்,
தரம் - 3B
யா/ புனித பொஸ்கோ வித்தியாலயம்.

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.



மாணவர்களே!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

# தை பிறக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு ஒரு சிங்கள வேட்பாளருக்கு எதிராக விழும் வாக்குகளை தமிழ் மக்கள் ஆணைக்கான வாக்குகளாக மாற்றினால் என்ன?

கஜேந்திரகுமார் கூறுகிறார், ஒரு தமிழ்ப்பொது வேட்பாளர் இறுதியாக யாராவது ஒரு சிங்கள வேட்பாளரை ஆதரிப்பார் என்பதனால் அந்தத் தெரிவை தாம் ஏற்கவில்லை என்று. மேலும் ஒற்றை ஆட்சிக்குள் ஒரு தீர்வை ஏற்றுக் கொள்ளும் கட்சிகள் அவ்வாறு ஒரு தமிழ்ப்பொதுவேட்பாளரை நிறுத்த முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டுகிறார்.

ஆனால் இங்கு ஏற்கனவே பார்த்ததுபோல, பிரதான சிங்கள வேட்பாளரோடு பேரம் பேசக்கூடிய நிலைமைகள் குறைவாக இருக்குமென்றால்,அதை தமிழ் மக்களின் ஆகப்பிந்திய ஆணையைப் பெறுவதற்கான ஒரு மறைமுக வாக்கெடுப்பாக தமிழ்மக்கள் பயன்படுத்தலாம்.தமது உச்சமான கோரிக்கைகளை முன்வைத்து அதற்கு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்பதனை வெளியுலகத்துக்கு எடுத்துக் கூறலாம்.

இந்தக் கோரிக்கையை முன்வைப்பது சுரேஷ் பிரேமச்சந்திரன் அல்லது குத்துவிளக்கு கூட்டணி அல்லது விக்னேஸ்வரன் என்பதற்காக அதனை எதிர்க்கத் தேவையில்லை. அது தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் வாய்ப்புகளை அதிகப்படுத்தும் என்ற அடிப்படையிலாவது அதைப் பரிசோதிக்கலாம்.

ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளர் ரணில், சஜித் உட்பட எல்லா சிங்கள வேட்பாளர்களையும் சவால்களுக்கு உட்படுத்துவார். அவர்களை தமிழர்களை நோக்கி வரச்செய்வார். அல்லது அவர்கள் தமிழர்களுக்கு எதிரான வெளிப்படையான நிலைப்பாட்டை எடுக்கக்கூடிய நிலைமைகளை ஏற்படுத்துவார். அதாவது சிங்கள வேட்பாளர்களை அம்பலப்படுத்துவார். ஆனால் இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக, அவர் தமிழ் மக்களின் ஆகப் பிந்திய மக்கள் ஆணையை வெளிக்கொண்டு வருவார்.தமிழ் மக்களை ஐக்கியப்படுத்துவார்.அந்த ஐக்கியத்துக்கு தகுதியானவர்கள் தலைமை தாங்கலாம்.

ஒரு தமிழ்ப்பொது வேட்பாளர் கட்டாயமாக விக்னேஸ்வரனாகத்தான் இருக்கவேண்டும் என்றில்லை.கிழக்கிலிருந்து ஒருவரைத் தெரிவு செய்தால் அது மிகச்சிறப்பு.ஒரு பெண்ணாக இருந்தால் அதுவும் சிறப்பு.அவர் ஒரு குறியீடு, கட்சிகளாக, வடக்கு- கிழக்காக, சமயங்களாக,சாதிகளாக,ஒரே கட்சிக்குள் இருவேறு குழுக்களாக, முகநூல் குழுக்களாக, சிதறிக்கிடக்கும் ஒரு சமூகத்தை, ஒரு தேர்தலை நோக்கியாவது ஆகக்கூடிய பட்சம் ஒரு தேசமாகத் திரட்ட அவருக்கு வாய்ப்பளித்தால் என்ன ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் 2



## ஊர்ப்புதினம்

இராகவன்

லொஜிக் நவம் மாஸ்ரர் சொன்ன 'இந்துமதி' எங்கட வீட்டுக்குப் பக்கத்து வீடுதான். ஒரு ஒழுங்கைதான் எங்கட வீட்டையும் அவையின்ர வீட்டையும் பிரிக்குது. எங்கட வீட்டுக் கேற்றைத் திறந்தவுடன தெரியிறது அவையின்ர வீடுதான். அவையின்ர வீட்டை ஊராக்களெல்லாம் 'தவறினார் வீடு' எண்டு தான் சொல்லுவினம். அந்த வீட்டோட எனக்கிருந்த தொடர்பை எழுதிறதெண்டால் கணக்கச் 'சப்றர் 'எடுக்கும். அதெல்லாம் தொடர்ந்து ஊர்ப் புதினத்தில வருடமெண்டதால இதோட விட்டுட்டு இப்ப விசயத்துக்கு வாறன். லொஜிக் நவம் மாஸ்ரர் விசயத்தைச் சொன்ன அண்டைக்குப் பின்னேரமே நான் இந்துமதியக்கா வீட்டை போய் சங்கதியைச் சொல்ல, அவா மறுபேச்சில்லாமல் தன்ர தமிழ்க் கொப்பியைத் தூக்கித் தந்து அதில 'விபுலானந்த அடிகள்' எண்ட தலைப்பில எழுதின கட்டுரையையும் காட்டிவிட்டா. இந்துமதியக்காவின்ர உறுப்பெழுத்தில கட்டுரை சிறப்பாயிருந்தது. அடுத்த நாள் பள்ளிக்கூடம் போனாப்போல இன்னொரு சங்கதியும் நடந்தது.

நாளினி ரீச்சர் என்னைக் கட்டுரை எழுதச் செலக்ற் பண்ணினமாதிரியே கவிதை எழுத எங்கட வகுப்பில சுசிகுமார் எண்ட பொடியனையும் செலக்ற் பண்ணியிருந்தா. சுசிகுமார் என்ர ஆருயிர் நண்பனாயுமிருந்தான். அவனும் என்னைப் போல ஒல்லி, நல்ல நெடுவல்.

21



நவம் மாஸ்ரர்

அவன் லொஜிக் நவம் மாஸ்ரரோட கதைச்சுத் தனக்குப் போட்டியில பங்குபற்றுறதுக்கு 'இயற்கையின் மாண்பு' எண்ட தலைப்பில ஒரு கவிதை எழுதுவிச்சு தரச் சொல்லிக் கேட்டான். எனக்கும் மறுக்கேலாமல் போச்சு. அவனையும் கூட்டிக் கொண்டு லொஜிக் நவம் மாஸ்ரரைத் தேடிப் போனன். அவர் அப்ப மேல்மாடியில ஏ.எல். வகுப்புக்குத் தமிழ் படிப்பிச்சுக் கொண்டிருந்தார். நாங்கள் ரண்டுபேரும் போய் வகுப்பு வாசலில நிண்டம். எங்களைக் கண்டிட்டு, "என்னடா கேசவன்ர தம்பி? உள்ளை வாடா!" எண்டு கூப்பிட்டார்.

நானும் சுசிகுமாரும் அவரிட்டப் போய் விசயத்தைச் சொன்னம். "கவிதைக்கு தலைப்பென்னடா?" எண்டு கேட்டுட்டு ,தன்ர பொக்கற்றுக்குள்ளால ஒரு பேப்பரும் பேனையும் எடுத்துத் தலைப்பைக் குறிச்சுப் போட்டு "ம்... சரி. நாளைக்கு வாங்கோடா பாப்பம்" எண்டார். நாங்கள் திரும்பி வந்திட்டம்.

அவர் நாளைக்குக் கவிதை எழுதித் தருவார் எண்டு சுசிகுமாருக்கு பெரிசா நம்பிக்கையிருக்கேல்ல. மறுநாள் அவரைத் தேடி அதே ஏ.எல். வகுப்புக்கு நானும் சுசிகுமாரும் போனம். சுசிகுமார் போற வழியிற "உந்தாள் பார் நாளைக்கு வாங்கோ எண்டுதான் சொல்லப்போகுது. இருந்துபாரன்" எண்டு சொன்னவன்.

(தொடரும்)

கோகுலராகவன்



# விஜயகாந்த் காத்திருக்கவில்லை

2000 ஆண்டாக இருக்கலாம்.
எனக்கும் என் அண்ணனுக்கும் ஒரு விவாதம்.
தமிழ்நாடு முதல்வராக வரக்கூடிய நடிகர் யார்?

அண்ணன் "ரஜினிகாந்த்துக்கு வாய்ப்பு உள்ளது" என்ற போது நான் விஜயகாந்துக்கு சார்பாக கதைத்த ஞாபகம். ரஜனிகாந்த் தனது எதிர்கால அரசியல் நிலைப்பாட்டை ஒரு போதும் வெளிப்படுத்தாதவர்.

அதன் பின் 2006 இல் விஜயகாந்த் அரசியல் கட்சி தொடங்கினார். நல்ல ஆரம்பம்.

இலட்சக்கணக்கான தொண்டர்களுடன் கட்சி உதயமாகிறது. ரசிகர் மன்ற உறுப்பினர்கள் நிர்வாகத்தில் இணைக்கப்பட்டனர். விஜயகாந்த், எம்.ஜி.ஆர். போல தனது திரைப் படங்களில் அரசியலுக்கு வருவதற்கு ஏற்றால் போல தலைப்புகளை இட்டு சில முன்னாயத்தங்கள் செய்து கொண்டிருந்தார். இது தவிர தானதர்மம் செய்வதில் அவர் இயற்கையாக விருப்பம் கொண்டவர் என்பது பரவலான விடயம். ஈழப்போராட்டத்தில் கூட தமிழர்களுக்குச் சார்பான நிலைப் பாட்டைக் கொண்டிருந்தார்.

இதன் வெளிப்பாடாக தன் மகனுக்குப் விஜயபிரபாகரன் எனப் பெயர் வைத்ததும், தனது திரைப்படம் ஒன்றுக்கும் கப்டன் விஜயகாந்த் எனப் பெயரிட்டுக் கொண்டதும் சந்தர்ப்பவாத அரசியல் அல்ல. இந்த இரு வகையிலும் பத்து ரஜனிகாந்த் வந்தாலும் விஜயகாந்துக்கு கிட்ட நிற்கவே முடியாது.





அவரிடம் இதற்கான ஒரு துணிச்சலும்,நேர்மையும் இருந்தது. இவை அனைத்தும் கால ஓட்டத்தில் விஜயகாந்தை தமிழக அரசியலில் முக்கியமான நபராக முன்னிலைப்படுத்தியது.

புதிய எம்.ஜி.ஆராக, மக்கள் செல்வாக்கு மிக்க புதிய தலைவராக உருவாகினார்.தமிழகத்தின் அடுத்த முதல்வராக விஜயகாந்த் வருவார் என கணிப்புக்கள் கூவத்தொடங்கின. உண்மையில் அதுவே நிகழ்ந்திருக்கவும் வேண்டும்.அவரது வருகை அவ்வாறே இருந்தது.

எம்.ஜி. ஆருக்குப் பின் சினிமா முலம் அரசியல் செல்வாக்குப் பெற்றவர் விஜயகாந்த் என்று கருத இடமுண்டு. 2006 , 2009 நடைபெற்ற தேர்தல்களில் விஜயகாந்தின் வாக்கு வங்கி மற்றக் கட்சிகளுக்குப் பயத்தை உண்டு பண்ணியது. இந்தக் காலகட்டத்தில் விஜயகாந்த சட்ட மன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

நல்ல அறிகுறி. இதையே தொடர்ந்து செய்து கட்சியை நிலைப்படுத்தியிருக்கவேண்டும்.

மாறாக, 2011 இல் அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்து 29 ஆசனங்களை வென்றார்.

இந்தக் கூட்டணி சில காலங்களில் உடைய எதிர்க் கட்சியாக தே.மு.தி.க. உருவெடுத்தது.

இந்தப் போக்குவிஜயகாந்தின் பலத்தைப் பல வீனமாகவே மாற்றியது. சட்ட மன்றத்தில் ஜெயலலிதாவைப் பார்த்து நாக்கைக் கடித்து தன் செல்வாக்கை சரித்துக் கொண்டார்.

ஏனைய சட்ட மன்ற உறுப்பினர்களை "ஏய்" என அழைத்தமை உட்பட.

இதன் தாக்கங்கள் 2016 தேர்தலில் விஜயகாந்தின் கனவுகள் எல்லாவற்றையும் தவிடு பொடியாக்கியது. எந்த ஒரு ஆசனமும் இன்றி இந்த அரசியல் ஆட்டத்தில் விஜயகாந்த் ஓடி இளைத்த குதிரையாக தூக்கி வீசப்பட்டார்.

இதன் பின் எதுவுமே சாத்தியம் ஆகவில்லை. தமிழ்நாட்டின் அரசியல் களத்தில் தி.மு.க., அ.தி.மு.க.வுக்கு மாற்றுச் சக்தியாகவே விஜயகாந்த் மக்களால் பார்க்கப்பட்டார் , ஊழலை ஒழிப்பதாக அவர் திரைப்படங்களில் காட்டியதை மக்கள் நம்பி இருந்தார்கள்.

ஆனால் அவர் அ.தி.மு.க. வுடன் கூட்டணி அமைத்து கொண்ட இடத்தில் மக்கள் தே.மு.தி.க. வின் மீதான நம்பிக்கையை இழக்கத் தொடங்கினர் என்கின்றன ஆய்வுகள். இதன் மேலதிகமாக கட்சி மீதான குடும்ப ஆதிக்கம் உருவாகத் தொடங்கி கட்சி நிர்வாகத்தில் இருந்த ரசிகர் மன்ற உறுப்பினர்கள் ஓரங்கட்டப்பட்டனர் அல்லது விரட்டப்பட்டனர். மேலும் குடும்ப ஆதிக்கம் பல இரண்டாம் நிலைத் தலைவர்களை கட்சியை விட்டு விலக வைத்தது .

விஜயகாந்தின் தொடக்க ஆலோசகரான.ஆதரவாளரான பழுத்த அரசியல்வாதி பண்டுருட்டி இராமச்சந்திரன் ஏற்கனவே விலகி விட்டார். இத்தகைய அனுபவம் ஒன்றும் விஜயகாந்துக்கு புதியதல்ல.



ஏனெனில் அவரது திரை நடிகர் வாழ்வில் அவரை "புரட்சிக் கலைஞராக" வடிவமைத்த பால்ய நண்பரான இப்ராஹிம் ராவுத்தரிடம் இருந்து முற்று முழுதாகப் பிரிந்தவர் அல்லது பிரிக்கப்பட்ட வர்.

இந்தக் கவலையில் வாடியே இப்ராஹிம் இராவுத்தர் 2015 இல் இறந்து போனார் என்கிறார்கள்.

கட்சி பலமிழக்கத் தொடங்கியது.

மேலும் விஜயகாந்தின் சில அவசரச் செயற்பாடுகள் அவரை நிதானம் இல்லாத மனிதராகக் காட்டத் தொடங்கியதும் கட்சியின்
செல்வாக்கு சரியக் காரணமாகிவிட்டது.

தே.மு.க.வின் சரிவு எப்போதே நடந்து முடிந்த ஒன்று .

விஜயகாந்த் மரணம் - தே.மு.தி.க. வீழ்ச்சி
இரண்டும் எதிரெதிரானவை. குடும்ப அரசியலில் தொடர்ச்சியாக விஜயகாந்தின் மனைவி தன்னைக் கட்சியின் பொதுச் செயலாளராக அறிவித்திருக்கிறார்.

விஜயகாந்தால் முடியாதது அந்த அம்மாவால் முடியுமா? காலம் பதில் சொல்ல வேண்டிய தேவையேயில்லை.

ஆனால் விஜயகாந்த் அரசியல் தெரியாத அரசியல்வாதியாக இருந்தார் என்பதைத் தாண்டி நல்ல மனிதன் என்பது பொதுவான அபிப்பிராயம்.

" வைதேகி காத்திருந்தாள். ஆனால் விஜயகாந்த் காத்திருக்கவில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org